
தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

பெப்ரவரி 1997



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அன்புடன் ஆசிரியருக்கு,

தமிழீழ விடுதலைப் போருக்கான பங்களிப்புக்களில் ஏனைய தமிழ் நாட்டுத் தோழர்களை உருவாக்கும் பணிகளில் தங்களின் எரிமலை இதழை பல வேறு நோக்குள்ளவர்களுக்கும் அறியத் தருகின்றோம். அவசியமெனக் கருதும் செய்திகளையும், தங்கள் இதழின் ஆசிரியர் கருத்தையும் தமிழ் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் நகல் எடுத்துக் கொடுக்கிறோம்.

விடுதலைப் புலிகள் தமிழீழத் தாயகத்தில் விடுதலைக்காக உழைப்பவர்களேயன்றி, தமிழகத்தில் கலவரம் விளைவிப்பவர்கள் அல்ல. பல அவதூறான பொய்ச் செய்திகளை எதிர்த்து நாங்கள் பிரச்சாரம் செய்து வருகின்றோம். மக்களுக்கு உண்மைச் செய்தி சென்றடைய அயராது உழைக்கின்றோம். பொதுக் கூட்ட மேடைகளிலும் பேசி வருகின்றோம்.

எரிமலையில் வரும் கவிதைகள் உணர்வுடையவை. இக் கவிதைகளினை கவியரங்கில் வாசித்து வருகிறோம். ஈழக் கவிஞர்களின் கவிதைகள் உணர்ச்சிக் கவிதைகளாக இருக்கின்றன. இங்குள்ள தற்போதைய திரைப்படப் பாடல்களோ அசிங்கத்தையும் ஆபாசத்தையும் விளைவிப்பவையாக உள்ளன.

இனத்தின் விடியலை உலகிற்குச் சொல்ல உரிமைப் போர் நடத்தி வருகின்ற புலிகளே!

உரிமைப் போரில் என்றும் உங்களோடு.......


சாந்தகுமார்
தமிழ்நாடு

★★

பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் கயவர்களின் சூழ்ச்சியால் வீரமரணமடைந்த ஈழமுரசு ஆசிரியர் திரு. கஜன் அவர்களுக்கும் திரு. நாதன் அவர்களுக்கும் எனது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றேன். உலகத் தமிழர்களின் உறவுக்கும் ஒற்றுமைக்கும் உறுதுணையாக நின்று பாடுபட்டவர்கள் அவர்கள். தமிழ் உள்ளவரை அவர்களது புகழ் மறையாது.

இந்த சிங்களக் கொடும்பாவிகளின் செயல் இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச அளவிற்குப் போய்விட்டது. என்ன! உலகமடா இது! துரோகிகளின் பின்னால்தான் உலகம் துணைபோகிறது. செயலும் மறைமுகமாக செய்து வருகிறது. இது எந்த வகையில் நியாயம். அட! தெய்வமே இன்னுமா நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய் தர்மம் ஜெயிக்கும் என்று? அது உண்மையானால் என்




சிரம் தாழ்த்தி உன்னை வணங்குகிறேன். தமிழைக் காக்க புறப்பட்டு வா...வா...

அநியாயத்திற்கும், அட்டூழியத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் நாள் வெகுதூரமில்லை என நம்பிக்கையோடு உங்களிடமிருந்து அன்புடன் விடைபெற விரும்புகிறேன்.

நன்றி. வணக்கம். வாழ்க! தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள்

வளர்க! எங்களது சகோதர புலிகள்..... வெற்றியே உங்களுக்கு!!

என்றும் மறவாத விடுதலை விரும்பி.

ஜே. ராஜேந்திரன்

★★

எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

செந்தமிழ் வணக்கமும், தமிழின விடுதலை வாழ்த்துக்களும். யூலை, ஆகஸ்ட் இதழ்கள் கிடைக்கப் பெற்றேன். சிங்களப் பேரினவாத அரசு தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போரில் மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்து வந்துள்ளது என்பதற்கு அது 13 ஆண்டுகளாக பாதுகாப்பு செலவிற்கு ஒதுக்கிவரும் நிதியே சான்றாக இருக்கின்றது. மேலும் முல்லைத்தீவு இராணுவ முகாம் வீழ்ச்சியும் அதற்கு மிகப்பெரிய தோல்வியே!

தமிழகத்தில் அரசியல் நிலைமைகள் தெளிவற்ற நிலையில் உள்ளது. அரசியல் என்பது இன்று ஒட்டுமொத்தமாக வியாபார விசயமாகக் கருதப்படுகின்றது. ஏதோ இனத்தின் மீதும் மொழியின் மீதும் மற்றும் விடுதலையின் மீதும் நேசம் கொண்டவர்கள் எல்லாம் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தமிழக அரசியல் என்பது நடிகர்களால் முடிவு செய்யப்படுகின்ற கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இது அரசியல் நிலைமை. கலை என்பது தமிழகத்தில் எந்த நிலையில் உள்ளது என்றால் முகவரி இல்லாத வீடு போல் தெரிகிறது.

கலை என்பது என்ன என்று இனி கேட்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. கலைஞர்களை தமிழகத்தில் உருவாக்கவில்லை. மாறாக கலைகளை அழிக்கின்ற பணிகள் தொடர்கிறது. இலக்கியம் என்பது மறக்கடிக்கப்பட்டு ஆங்கில இலக்கணமும், இந்தி இலக்கணமும் உச்சாணிக்கு வந்து கொண்டுள்ளது. இலக்கியம் என்பது தமிழ் ஆசான்களிடமும், அறிஞர்களிடமும் மட்டுமே உள்ளது. இலக்கியம் என்பது தமிழ்நாட்டு மாணவர்களிடம் மிகவும் கடினமான பாடமாக உள்ளது. அந்த நிலைமையில் இலக்கியம் உள்ளது. சினிமா சமூகம் சீர்திருத்த கருத்துக்களும், பகுத்தறிவும் இடம்பெற்றது அந்தக் கால சினிமாவில். தற்போது ஆபாச நடனங்களும், போதையூட்டும் காதல் காட்சிகளும், கவர்ச்சியும், இரட்டை அர்த்த வசனங்களும்தான் இன்றைய சினிமா. இளைய தலைமுறையினர் எந்த அளவில் தமிழீழ விடுதலையை நேசிக்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு ஆங்கிலமும், இந்தியும் கல்விக்கூடங்களில் – வீட்டில், தொலைக்காட்சியில் இராமாயணமும், மகாபாரதமும். இதை எல்லாம் பார்த்து தமிழ்நாட்டு இளைய தலைமுறையினரால், தமிழினத்தின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகள் மறக்கடிக்கப்பட்டுள்ளன. தந்தை செல்வா அவர்கள் தமிழீழத்தில் மக்கள் மத்தியில் எவ்வாறு இனமும், மொழியும் நசுக்கப்பட்ட போது போராட்டத்தைத் தொடங்கினாரோ அந்தக் காலகட்டத்தில் தமிழகம் உள்ளது.

இங்குள்ள மக்களை அரசியல் ரீதியாக வென்று எடுக்கவேண்டிய நிலையில் உள்ளோம். அவர்கள் மத்தியில், தமிழர்கள் இன்று எந்த அளவில் உலக அரங்கில் உள்ளனர் என்ற நிலைமைகளை விளக்கிக் கூறவேண்டியுள்ளது. இன்று தமிழன் தன்னை யார் என்றே தெரியாமல் இருக்கிறான். நாங்கள் எங்களின் தார்மீகக் கடைமைகளை உணர்ந்து ஒரு மணித்துளி கூட வீணாகாமல் எங்கள் கடைமைகளைச் செய்கின்றோம். என்னைப் பொறுத்தமட்டில் தமிழீழ விடுதலையை ஆதரிப்பதோடு அன்றி, ஆதரவாக எம் நாட்டில் இருப்பதோடு அன்றி, தமிழீழப் போராளிகளுக்கு ஏதோ ஒரு வகையில் உதவ வேண்டுமென்றுள்ளேன்.

தமிழ் வாழ்க! தமிழினம் வளர்க!!
அண்ணன் பிரபாகரன் பணி தொடர்க!!!

அன்புடன்
சுப்ரமணியம்
தமிழ்நாடு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## இந்த இதழில்...


### அற்புதன்

துன்பம் நேருகின்ற போது பக்கத்துணையாக நிற்க வல்ல தோள்கள்; வலிமைநிறைந்த தோள்கள்; தேசியத் தலைவரே பயிற்சியாளராக நின்றபாசறையில் விளைந்த கனிகள்.

04-ம் பக்கம்





### கேள்விக்குறியாகும் படைமுகாம்களின் இருப்பு

தலைவர் பிரபாகரனால் வரையப்படும் திட்டம்; அதனை விடுதலைப்புலிகள் இம்மியும் பிசகாது செயற்படுத்தும் விதம்; தாக்குதலுக்கான தேர்வு மையங்கள்; வீரம்செறிந்த தாக்குதல்கள் உலகையே வியப்பில் ஆழ்த்தி நிற்கின்றன.

06-ம் பக்கம்

### தீர்த்தல் திட்டத்தின் ஓரங்கமான தீர்வுத்திட்டம்

தீர்வுத்திட்டத்தில் என்ன இருக்கின்றது என்பதுக்கு முன் தீர்வுத்திட்டத்தினை கொண்டு வருவதின் மர்மம் என்ன என்பதே தமிழர்க்கு முக்கியம்.

12-ம் பக்கம்





### மகளிர் படையணி ஒரு புதிய வரலாறு

நேற்று!
அலைகளைக் கண்டு அஞ்சியிருக்கலாம்;
தென்றல் தொட துவண்டிருக்கலாம்
இன்று!

17-ம் பக்கம்

### தமிழ் மக்களின் அகதி வாழ்வு மனிதத்தை உலுக்குமா?

22-ம் பக்கம்





கலாநிதி ஜெ. மகேஸ்வரனுடனான


### நேர்காணல்

உலகின் ஒவ்வொரு திக்கிலும் எமது மக்களின் உண்மை நிலையறிந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக உதவுவதற்கு பல மக்கள் தாமாகவே முன்வந்திருக்கிறார்கள். இவர்கள் உண்மையிலேயே பாசம் கொண்டவர்கள்.

31-ம் பக்கம>

தமிழ்த் தேசியப் பிரச்சினையும் இந்தியாவின் அணுகுமுறையும்
09-ம் பக்கம்





முதல் மூன்று வார காலத்துள் விமானப்படை இழந்த மூன்று விமானங்கள்
10-ம் பக்கம்

எச்சரித்தால் போதாது
16-ம் பக்கம்





ரூபசிங்காவின் எச்சரிக்கை
20-ம் பக்கம்


எங்கட வானமும் கட்டாக்காலி எருமைகளும்
25-ம் பக்கம்





புலம்பெயர் வாழ்வு
தாயகம் நோக்கிய பயணத் தேடல்
36-ம் பக்கம்

அவலப் பயணம்
39-ம் பக்கம்





ஆசிரியர்கள் மீது சேறுபூசும் கருத்துக்களுக்குக் கண்டனம்
40-ம் பக்கம்

தமிழ் நீரோட்டத்தின் எதிரிகள்
43-ம் பக்கம்



யுக்தி மாறினால் போதுமா?
08-ம் பக்கம்

விடுதலைப் புலிகள் இல்லாமல் ஈழத்தமிழர் பிரச்சினை தீராது
15-ம் பக்கம்

புலிகளைத் தடுக்க முடியுமா?
21-ம் பக்கம்

சுண்டிக்குளத்தில் அதிரடித் தாக்குதல்
29-ம் பக்கம்

கிரேக்கத்தில் தைத்த முள்?
48-ம் பக்கம்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**அன்பான எரிமலை வாசகர்களே!**
**ஆக்க இலக்கியதாரர்களே! கலைஞர்களே!**
**ஓவியர்களே! கவிஞர்களே!**

புலம்பெயர்ந்து அந்நிய நிலங்களில் வாழ்வதாக எண்ணிக் கொண்டு எம்மையே நாம் எத்தனை நாளைக்கு ஏமாற்றிக்கொண்டிருக்கப்போகிறோம். தாய்நிலத்தைப் பிரிந்து வந்து எத்தனையோ கண்ணுக்குத் தெரியாத காயங்களையெல்லாம் பட்டு எமது உணர்வுகள் மரத்து விட்டனவா என்ற கேள்வி எழுகின்றது.

தாய்நிலம் பற்றிய உயிர்ப்பான தேடுதல் பயணத்தில், திசைகள் எட்டும் வரை சலிக்காத திடம் கொண்டு போராடுவோம் வாருங்கள்! எரிமலை சஞ்சிகையின் வளர்ச்சியிலும் அதன் பரவலாக்கலிலும் நீங்கள் நிறைய பங்கேற்க வேண்டும். நாம் பல பிரச்சினைகளை, சிக்கல்களை விளங்கி, புரிந்து, தெளிந்து உழைக்க வேண்டும். ஏராளமான வேலைகளுக்கு மத்தியில் எழுதுதல், புனைதல், பாடுதல், வரைதல், ஆக்குதல் என்ற வேலைகளையும் ஆற்ற வேண்டும். இது ஒரு சமூகப் பணி. இந்தப் பணியில் நிறைவிருக்கிறது. தேவையிருக்கிறது. அவசியமிருக்கிறது. புலம்பெயர்ந்த நாடுகளில் நாம் முகமிழந்து கொண்டு போகின்ற அவலங்களை வெல்ல வேண்டும். இது கலைஞர்களின் கையில் உள்ள மிகப் பெரிய கடமை.

இயந்திர வாழ்வின் நெரிசலுக்குள் நசிபட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொண்ட பின்னர் ' நசிபடுவது சுகமாயிருக்கிறது' என்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள். அது மிக மோசமான கருது நிலை. அதைத் தகர்த்து எழுதல் வேண்டும். புலம்பெயர்ந்த வாழ்வின் இறுக்கச் சூழலை உடைத்து, நேரத்தை உருவாக்கி அந்த காலத்தினை பார்க்க பல இலக்கியக் கண்ணாடிகளை உருவாக்குங்கள்.

இந்த வாழ்வின் அவலத்தை நாளைய சந்ததிக்கு சொல்ல வேண்டாமா? புலம் பெயர்ந்த கதை ஏன் என்பது தெரிய வேண்டாமா? எத்தனை எத்தனை வேலைகள், கடமைகள் என்று விரிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் சிறக்கைகளை உடைத்து விட்டு சிறைப்பட்டுக் கிடக்க எண்ணும் சிந்தையைத் தகர்த்து எழுங்கள்! புலம் பெயர் வாழ்வு பற்றிய விவாதங்களை மேற்கொள்ளுங்கள். மாற்றத்துக்கான உங்களது உழைப்பை நாடகங்களுக்கூடாகவும், கவிதைகளுக்கூடாகவும், சிறுகதைகளுக்கூடாகவும், பாடல்களுக்கூடாகவும், நாவல்களுக்கூடாகவும் மேற்கொள்ளுங்கள். எரிமலை நிச்சயம் களம் அமைக்கும். புலம் பெயர்ந்து வாழும் கவிஞர்களே எம்மோடு தொடர்புகளை ஏற்படுத்துங்கள். உங்களின் சோர்வை ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு எமது வேண்டுகோளை ஏற்று உடனே களத்தில் குதியுங்கள். கிணற்றுத் தவளைகளாக வாழும் வாழ்வை விட்டு புதிய பரந்த விரிந்த எல்லைகளை நோக்கிச் சிறக்கை அசைக்கும் துணிவைப் பெறுங்கள். தமிழ் வளம் பெற வேண்டும்.

உலகம் பூராகவும் வாழும் புலம் பெயர்ந்த தமிழீழக் கலைஞர்களே மனத்தடைகளை உடைத்து, மனச்சிறைகளைத் தகர்த்து எழுங்கள்!

நெருக்கடிகள், துன்பங்கள், இடர்பாடுகள் நிறைந்த இடுக்கான வழிப்பயணம் ஒரு போதும் இதமாக இருக்காது. வாழ்க்கைப்பயணமும் அப்படித்தான். எதிர்நீச்சலிடுவோம். எம்மோடு இணையுங்கள்.

எரிமலை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வையுங்கள். நாங்கள் நிச்சயம் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளுவோம். எரிமலை சஞ்சிகையின் இன்றைய கடமைகள், தேவைகள், என்பவற்றை நீங்கள் நன்கு உணர்வீர்கள். எமது தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில் ஆற்ற வேண்டியவை நிறையவே உள்ளன.

புலம்பெயர் வாழ்வு குறித்த ஆழமான தொரு பதிவை ஏற்படுத்த வேண்டும் என்ற எமது அழைப்பை எமது புலம் பெயர்ந்த கலைஞர்கள் ஏற்று உழைக்க முன் வாருங்கள். உங்கள் கரங்களை இறுகப்பற்றிட எமது அன்புக் கரங்களை நாம் நேசத்துடன் நீட்டுகின்றோம்.

அன்புடன்
**ஆசிரியர் குழுவினர்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு
பெப்ரவரி 1997

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris, France.*
*Tel: 01 - 43 58 11 42*

# எட்டுத் திக்கும் அதிர பெரும் பலத்தோடெழுவோம்!

சிறீலங்கா ஆயுதப்படையினர் மீண்டுமொருமுறை பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றினை பெப்ரவரி 4ம் திகதியிலிருந்து ஆரம்பித்துள்ளனர். இலங்கைத் தீவின் அரசியலதிகாரம் பிரித்தானியரிடமிருந்து சிங்களவர் கைக்கு மாறி 49வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியபடியே தமிழீழப் பிரதேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஆணையிட்டிருக்கிறது. சிங்கல பௌத்த இனவாதத்திற்கு தற்போது தலைமை கொடுக்கும் சந்திரிகா அரசு.

இவ் இராணுவ நடவடிக்கையில் ஏறத்தாழ 20,000 சிங்களப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. வவுனியாப் பகுதியில் இருந்து மன்னார் பகுதி நோக்கி இலக்கு வைத்தே படையினரின் ஆரம்ப நடவடிக்கைகள் அமைந்துள்ளன. வவுனியாவுக்கும் மன்னாருக்கும் இடையே தரைவழிப் பாதை அமைக்கும் ஒரு முயற்சியா அல்லது வவுனியா – கிளிநொச்சி தரைவழிப் பாதை திறப்பதற்கான நடவடிக்கையா தற்போது நடந்துகொண்டிருக்கிறது என்பது இப்பகுதியினை எழுதிக்கொண்டிருக்கும் வரை தெளிவாகவில்லை. படையினர் இராணுவ நடவடிக்கையினைத் தொடர்ச்சியாக மேற்கொள்வார்களாயின் பாரிய மோதல்களை வன்னி மண்ணில் எதிர்பார்க்கலாம். படையினரின் கண்மூடித்தனமான எறிகணை மற்றும் விமானக் குண்டுவீச்சுக்களாலும் 200,000க்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு ஏதிலிகளாக வெளியேற வேண்டி ஏற்படும் என்ற அச்சமும் ஏற்படுகின்றது.

தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சந்திரிகா அரசின் யுத்த தந்திரோபாயத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. இத்தகைய தொடர் இராணுவ நடவடிக்கைகள் ஊடாக மக்களின் சாதாரண வாழ்வினைச் சீர்குலைத்து, யுத்தக் களைப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று கருதுகிறது. மேலும் இராணுவ ரீதியில் தாம் எந்த நேரமும் முன்னிலையில் இருப்பதான தோற்றத்தைத் தொடர்ச்சியாகத் தக்கவைத்துக்கொள்வதிலும் அரசு கூடுதலான கவனம் செலுத்தி வருகிறது. கிளிநொச்சியின் பின் ‘பரந்தன் சமர்’மூலம் புலிகள் கொடுத்த அடிக்கு பதிலாக ஏதாவது செய்துவிட வேண்டும் என்ற துடிப்பும் அரசுக்கு இருக்கிறது. மார்ச் மாதம் இடம்பெற இருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியினைத் தழுவிக் கொள்வதற்கும் ஈழப் போர் முனையில் பெறும் வெற்றியினை அரசு நம்பி இருக்கிறது.

இராணுவத்தினருக்கான விநியோகம் யாழ் குடாநாடு – மன்னார்ப் பகுதிகளுக்கு ஆகாய, கடல் வழி மூலமே தற்போது நடைபெற்று வருவதனால் விரைவில் தரைவழிப் பாதை ஒன்றினைத் திறந்துவிட வேண்டும் என்பதிலும் அரசு குறியாக இருக்கிறது. முக்கியமாக யாழ் குடாநாட்டிற்கான தரைவழி விநியோகப் பாதையினை அமைக்க வேண்டுமாயின் கிளிநொச்சி – வவுனியா பகுதிகளை இணைத்தாக வேண்டும்.

இத்தகையதொரு சூழலில், இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினைத் தமிழ் மக்கள் மீது திணித்து விடுதல் என்னும் இலக்கினை அரசு இறுதி நோக்காகக் கொண்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதன் ஊடாக மக்களை, யுத்தக் களைப்புக்கு உட்படுத்தி போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தல், போராட்டத்திற்கு எதிரான சர்வதேசச் சூழலை – குறிப்பாக இந்தியாவில் போராட்டத்திற்கு எதிரான கருத்தை தொடர்ச்சியாக விதைத்தல், அரசியல் தீர்வு என்ற மாயமானைக் காட்டி சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் பிடியில் தமிழ் மக்களைச் சிக்கவைத்தல் போன்ற திட்டங்களை இணைத்தே சிறீலங்கா அரசின் அண்மைக்கால நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான உணர்வினைப் பரப்ப முனையும் சிறீலங்கா அரசின் எண்ணத்திற்கு இம்மாதம் முதலாம் திகதி பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய ஈழத் தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரணியும் மாநாடும் பலத்த அழுத்தத்திற்கு மத்தியில் பாட்டாளி மக்கள் கட்சியினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இப் பேரணியிலும் மாநாட்டிலும் ஆறு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்து கலந்துகொண்டிருக்கின்றனர் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ச. இராமதாஸ் அவர்கள் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் ஒரு சூழலில், இம் மாநாட்டில் விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டிருந்த போதும் விடுதலைப் புலிகளால் தலைமை தாங்கி நடாத்தப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மாநாடு பூரண ஆதரவு தெரிவித்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகத் தமிழகத்திலிருந்து எழுந்த இவ் ஆதரவுக் குரல், சிங்கள பௌத்த பேரினவாதப் பூதத்தின் பிடியில் சிக்குண்டு தாங்கொணாத் துயரத்தினை அனுபவித்து வரும் தமிழீழ மக்களுக்கு நிச்சயம் புத்துணர்வைக் கொடுத்திருக்கும். பாட்டாளி மக்கள் கட்சி நடாத்திய இவ் எழுச்சி மிகு பேரணியும் மாநாடும் தமிழக மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இருக்கும் ஆதரவினைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. தமிழகத்தின் ஏனைய கட்சிகளும் கட்சித் தலைவர்களும் ஈழத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்காகவும், போராட்டத்திற்காகவும் குரல் எழுப்பவேண்டியது அவசியம் என்பதனைத் தெரிவிக்க விரும்பும் அதேவேளை, தமிழக மக்கள் உங்கள் முயற்சிக்கு ஆதரவுளிப்பார்கள் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகத் தமிழக மக்கள் மத்தியில் இருக்கும் எழுச்சி மிகு உணர்வினை வெளிப்படுத்தியமையுடன் தொடர்ச்சியாக உறுதியான போராட்ட ஆதரவு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் செயற்பட்டு வரும் பாட்டாளி மக்கள் கட்சி உறவுகளின் கரங்களை உலகமெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் சார்பில் பாசத்துடன் பற்றிக்கொள்கிறோம்.

சிங்கள பௌத்த பேரினவாதப் பூதம் ஈழத் தமிழ் மக்களை கொன்றொழிக்கத் துடிக்கும் இவ்வேளை உலகெங்கும் தமிழர் குரல் ஒலிக்கட்டும். எங்கள் ஒருமித்த குரல் போர்க்களத்தில் நெருப்பாய் எழும் எமது வீரர்களுக்கும் மக்களுக்கும் பலம் சேர்க்கட்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அற்புதன்



மலைக்காற்று வீசுகின்ற ஒரு மாலைப்பொழுதில் மலை உச்சியொன்றில் ஒரு அழகிய தாய்த் தேசத்தின் உருவாக்கம் பற்றிய ஆழமான கனவில் பொன்னம்மான் திளைத்திருந்தார். நல்லதொரு கனவை உளத்தில் கண்டு கொண்டிருந்தார். அவரது உள்ளத்தில் அருமையான செயற் திட்டங்கள் உருப்பெற்றன. அத்திட்டங்களை தலைவரோடு ஆழமாக அலசி ஆய்ந்து தீர்க்கமான முடிவுகளை எடுத்து செயற்படுத்திய செயல்வீரம். அவரிடம் இருந்ததை தோழர்கள் பெருமையோடு பேசாத நாளே இல்லை. நாளும் பொழுதும் கனவும் வாழ்வும் அவருக்கு உயரிய தேடலிலேயும் கழிந்தது. தேசமக்களுக்காக அவர்களது நல்வாழ்வுக்காக தன் வாழ்நாளையே அர்ப்பணித்து நின்ற ஒரு அற்புத மனிதர். எளிமையானவர். பிரமிக்கத்தக்க அடக்கமும், பொறுமையும் அவருக்குள் தோய்ந்து நின்றது. அவர் தாங்கி நின்ற பணியின் பின்னால் அத்தகைய அழகு இருந்தது. வாழ்வை நேசித்த மானுடத் துடிப்பு ஒரு போதும் அடங்கிப்போகாது. வெளிமுழுதும் நிறைந்த ஆன்ம சங்கீதத்தை தோழர்கள் மீண்டும் எப்படி தம் உயிர்களில் ஏற்றினார்கள். ஜீவநதியின் பெருக்கில் பூமி தோய அன்பெனும் வடிவு கொலுவீற்றிருக்கிறது. அந்தப் பிரபஞ்சத்தின் நாதமாய் நின்றொலிக்கின்ற தகமையை அவர்கள் அடைந்து விட்டிருக்கிறார்கள்.

பொன்னம்மானின் வாழ்வு எப்போதும் எம்முள் ஏதோவொரு இனம் தெரியாத துயரின் கசிவை தரும்படியாக அமைந்து போய்விட்டது.

சிறிய மலைகளும், சிறுகாடுகளுமாக நிறைந்த ஒரு கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் பெரியளவிலான இடப்பகுதியைத் தேர்ந்தெடுத்து அதனை ஒரு பெரிய பயிற்சித் திடலாக்கினார்.

பயிற்சியாளர்களாக வந்திருக்கும் புதிய முகங்கள் அனைவரையும்

எங்களுக்கு ஒரு ஜீப் வண்டி வேண்டும். எனக்கு ஒரே ஒரு வழி தெரிகிறது என்று கூறிவிட்டு தோழர்களிடம் கேட்டார் 'நீங்கள் அனைவரும் உங்கள் காலை நேர உணவை ஒரு சில மாதங்களுக்கு நிறுத்தினால் அதன் மூலம் சேமிப்பாகும் பணத்தில் நாங்கள் ஒரு ஜீப் வண்டியை வாங்கிக் கொள்ளலாம்' என்றார். தோழர்கள் ஒருமித்த குரலில் அப்படியே செய்வோம் என்று சொன்னார்கள். அவ்வாறே காலை எல்லோரும் பசியிருந்து மீதப்படுத்திய பணத்தில் ஒரு ஜீப் வண்டி வாங்கினார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கொள்ளை கொள்ளும் அன்பு வழியும் பார்வை அனைவர் மீதும் பரவுகிறது. அவர்களின் குண நல இயல்புகளை, தெரிந்து புரிந்து கொண்ட அருமையான தந்தையாக அவர் நின்றார். நல்லதொரு சீரிய சமூக நெறியாளராகவும் பன்முகப்பட்ட பார்வையும், சிந்தனைத் தெளிவும், உண்மையும் அவரிடம் நிறைந்திருந்த பண்புகள். இந்தப் பண்புகளே தோழர்களை பொன்னம்மான் என்று சுற்றிவரச் செய்தன. ஏராளமான போராளிகளின் உருவாக்கத்தில் பெரும் பணியை செவ்வனே செய்து முடித்தவர். சின்னச் சின்ன பல ஆயிரம் சூரியன்களை செதுக்கிய ஒரு சிற்பிதான் பொன்னமான். தலைவரின் சுமைகளைத் தாங்கிய அற்புதனாகவும் அவர் விளங்கினார்.

பயிற்சித் திடலில் தற்காப்புப் பயிற்சி நெறிகள், துப்பாக்கிப் பயிற்சி நெறிகள், வெடிமருந்துப் பயிற்சிகள், நீச்சல் பயிற்சிகள், மருத்துவ பயிற்சிகள் என்று ஒரு விரிந்த களப்பயிற்சிகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அப்போது அப் பயிற்சி நெறிக்களத்தில் பலநூறு தோழர்கள் இருந்தார்கள். உணவு நெருக்கடிகள், போக்குவரத்து இடர்கள், வசதிகள் அற்றிருந்த நிலையிலும் என்றுமே எம்வாழ்வின் சொத்தான சந்தோஷத்தை கனன்று எரிய வைத்தபடியே திரிந்தார். எதிர் நீச்சலிடுவது, நெருப்பில் நீந்துவது, விண்ணைச்சாடுவது, விழுதெறிவது, புயலாய், காற்றாய், தண்புனலாய், நிலவாய் இருக்க பொன்னமான் கற்றுக் கொடுத்தார்.

துன்பம் நேருகின்ற போது பக்கத் துணையாக நிற்க வல்ல தோள்கள்; வலிமைநிறைந்த தோள்கள்; தேசியத் தலைவரே பயிற்சியாளராக நின்ற பாசறையில் விளைந்த கனிகள். உயிர், உடல் இரண்டுமே என்றும் ஒருமித்து நின்று இருமை கடந்த போராளர். தீ சுட்டது கிடையாது, குளிர் நெருங்கியதில்லை.

யாவும் சக்தியின் வடிவாக எல்லோரும் தன் குழந்தைகளாக நோக்கும் உயர் நோக்கிருந்தது. இந்த உயர்வு, இந்தப் பக்குவம் எளிதில் யாரிடத்தும் கிடைத்துவிடுவதற்குரிய பண்பில்லை. இது ஒரு பெரிய வாழ்க்கைக் கல்வி. இத்தகையவர்களிடம் இருந்து பூமி பாடம் கேட்கமுடியாது போய்விட்டதை நினைக்கையில் நெஞ்சதிர்கிறது.

அந்தப் பயிற்சி முகாமின் வாழ்க்கை பற்றி முழுமையுமாக தொட முடியாது. இருந்தும் ஒரு நாள் நிகழ்ந்த ஒரு சம்பவத்தினை நினைவு கூரலாம்.



அந்த பயிற்சி முகாமிற்கு தேவையான பொருட்களை தோளிலும், தலையிலுமாக சுமந்து கொண்டு தோழர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது போதியளவு நிதிப்பலம் இருக்கவில்லை. பன்முக வளர்ச்சித் தேவை; நிறைய போராளிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை; நிறைய ஆயுதங்கள், வெடிமருந்துகள் தேவையான காலம். தமிழீத்தில் ஒரு புறமும், தமிழகத்தில் ஒரு புறமுமாக பல செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. இந்த நிலையில் பயிற்சி முகாமின் விரிந்து செல்லும் செலவுக்கு மத்தியில் ஒரு ஜீப் வண்டி வேண்டுவது இயலாதிருந்தது. அப்போது பொன்னம்மான் எல்லோரையும் சந்தித்துக் கேட்டார். எங்களுக்கு ஒரு ஜீப் வண்டி வேண்டும். எனக்கு ஒரே ஒரு வழி தெரிகிறது என்று கூறிவிட்டு தோழர்களிடம் கேட்டார் 'நீங்கள் அனைவரும் உங்கள் காலை நேர உணவை ஒரு சில மாதங்களுக்கு நிறுத்தினால் அதன் மூலம் சேமிப்பாகும் பணத்தில் நாங்கள் ஒரு ஜீப் வண்டியை வாங்கிக் கொள்ளலாம்' என்றார். தோழர்கள் ஒருமித்த குரலில் அப்படியே செய்வோம் என்று சொன்னார்கள். அவ்வாறே காலை எல்லோரும் பசியிருந்து மீதப்படுத்திய பணத்தில் ஒரு ஜீப் வண்டி வாங்கினார். அந்த வண்டியிலேயே பலர் சாரதியப் பயிற்சிகளைப் பெற்று சிறந்த சாரதிகளாகியது இன்னொரு கதை. எப்படியோ அந்த ஜீப் வண்டி எப்போதும் எம் உணர்வில் ஒரு அரிய நினைவுச் சின்னமாக இருக்கின்றது.

பொன்னம்மான் ஒரு நீர் நிறைந்த ஒரு பொய்கையைப் போன்ற அரிய மனிதர். தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் சென்ற பொன்னம்மான் ஒரு சொந்த சோதரனின் உளக்குமுறலோடு பல தடவை இருந்தார். தமிழக மக்களைச் சந்தித்து அவர்கள் படும் பாட்டை, அவர்களை மாய்க்கும் மாயைப் பேயைப் பற்றியெல்லாம் பேசினார். அவர்களின் கைகளை, கால்களை பிணைத்திருக்கின்ற விலங்குகளை பற்றி தோழர்களோடு பேசி மனம் நொந்தார். 'சினிமா' எனும் அரிய சாதனத்தின் போக்கைக் கண்டு கலங்கினார். உயரிய கலை விழுமியங்களை, மானுட வாழ்வை தரிசிக்க வைக்கும் கலைக் கண்ணாடியின் ரசம் போன நிலையை நொந்தார். பொன்னம்மான் கொண்டிருந்த கவலை சதாரணமானதல்ல. மானுட நேயம் என்ற அவரது உயரிய கொள்கை எல்லையற்றதாக விரிந்திருந்தது. அதுவே துன்புறுவோரின் கால் தூசியை கழுவி விடுகின்ற பண்பாக மாறி பூமியில் என்றுமே வற்றாத ஜீவநதியை கரை புரண்டு பாயந்திடச் செய்கின்றது.

அவரோடு மேஜர் கேடில்ஸ், கப்டன் வாசு, லெப்டினன்ட் சித்தார்த்தன், 2ம் லெப். பரன், வீரவேங்கை யோகேஸ், வீரவேங்கை தேவன், வீரவேங்கை அக்பர், வீரவேங்கை கவர் ஆகிய ஜீவ நதிகளும் சங்கமமாகிவிட்டன. நாவற்குழியில் இருந்த ஆக்கிரமிப்பாளனை எதிர்கொண்டு அழிக்க ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தவேளை, 14–02–1987 அன்று தற்செயலான வெடி விபத்தில் சிக்கி வீரமரணமடைந்து விட்டார்கள். இன்று ஒரு தசாப்த காலம் முடிவடைந்து விட்டது. அவர்களின் அடிச்சுவட்டைப் பற்றி ஏராளமானோர் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் இலட்சியம், அவர்கள் சுமந்த பணி அனைத்தையும் தங்கள் தோள்களில் சுமந்து நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஏன் இவர்களை மரணம் நெருங்குவதில்லை? ஏன் இவர்களை நெருப்பு சுடுவதில்லை? ஏன் இவர்களை குளிர் தாக்குவதில்லை?


பொன்னம்மான் போன்ற பல மாவீரரது வாழ்க்கை பற்றிய கேள்விகளை எம்முள் எழுப்பிப் பார்க்கின்ற போது வாழ்வு பற்றிய முழுமையும், அதன் ஆழமும், அதன் அர்த்தமும் புலனாகும். அப்போது பல தளைகள் அறுகின்ற பெரிய அனுபவம் பிறக்கும்.

★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கேள்விக் குறியாகும் படைமுகாம்களின் இருப்பு




தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமித்து நிற்கும் சிறீலங்கா இராணுவம் அவர்களது வாழ்க்கையைச் சீரழிப்பது மாத்திரமல்லாமல் ஏதிலிகளாக இடம்பெயர்ந்து அவலப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் தற்காலிக குடியிருப்புக்களின் மீதும் கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்கி மக்களைக் கொன்று வருகின்றது.

'தமிழர்கள் இடம்பெயர்கிறார்கள்; விடுதலைப்புலிகள் பின்வாங்குகின்றார்கள்' என்றால் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாகத் தோல்வியடைந்துவிட்டார்கள் என்று அர்த்தமாகாது என்ற செய்தியை விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசுக்கும் அதன் இராணுவத்துக்கும் 'ஓயாத அலைகள்' மூலமும் பரந்தனிலிருந்த மிகப்பெரிய இராணுவ வேலியை ஊடறுத்து பாய்ந்து தாக்கியதன் மூலமும் தெரியப்படுத்தினார்கள்.

மீண்டும் ஒருமுறை சிறீலங்கா இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவத் தந்திரோபாயத்தில் சிக்கி தனது இயலாமையை வெளிப்படுத்திக் கொண்டது. 'விடுதலைப்புலிகளை ஒடுக்கி விட்டோம்; விடுதலைப்புலிகளின் கைவசம் இருந்த பிரதேசங்களை மீட்டுவிட்டோம்;' என்றெல்லாம் உலகிற்கு தம்பட்டம் அடித்த சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகள் பரந்தன் மீது நடத்திய தாக்குதலினால் ஒரு கணம் மூர்ச்சையிழந்து போனது என்று கூடச் சொல்லலாம்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் எத்தகைய இலக்குகளை தேர்ந்தெடுக்கின்றார்கள்? ஏன் இத்தகைய இலக்குகளைத் தேர்ந்தெடுக்கின்றார்கள்? என்பதற்கு, இராணுவ ஆய்வாளர்கள் சுலபமான பதிலைப் பெறமுடியாது முழிக்கிறார்கள்.

தமிழீழப் பிரதேசத்தில் உள்ள எந்த ஒரு இராணுவ முகாமும் எந்நேரமும் விடுதலைப்புலிகளின் தாக்குதலிற்கு உள்ளாகலாம் என சிறீலங்கா இராணுவம் நன்கு உணர்ந்திருந்தும், அறிந்திருந்தும் அவர்களால் மாற்று நடவடிக்கைகள் பற்றிய தீர்மானத்துக்கு வருவதற்கு முன்னரே இராணுவ முதுகெலும்புகள் முறிக்கப்படுகின்றன. இராணுவ நகர்வுகள், நடவடிக்கைகள் யாவுமே பொறிக்குள் சிக்கும் ஆபத்தை எந்நேரமும் கொள்ளத்தக்கதான வியூக அமைப்புக்கள் பற்றிய அறிவை சிங்கள இராணுவம் அறிந்திருக்காது தன்னை மாய்த்துக்கொள்கின்றது. இத்தகைய திட்டங்களை தீட்டும் இராணுவ மேலாளர்கள் இதனால் தான் திகைத்துப் போகின்றார்கள்.

தலைவர் பிரபாகரனால் வரையப்படும் திட்டம்; அதனை விடுதலைப் புலிகள் இம்மியும் பிசகாது செயற்படுத்தும் விதம்; தாக்குதலுக்கான தேர்வு மையங்கள்; வீரம்செறிந்த தாக்குதல்கள் உலகையே வியப்பில் ஆழ்த்தி நிற்கின்றன.

இவ்வாறான வீரம்செறிந்த தாக்குதல்களின் வரிசையில், முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதலின் போதான நோக்கங்கள் பலவாக இருந்தன. அவையாவன,

1. தமிழ் மக்கள் தற்போது செறிவாக வன்னியில் வாழ்வதால் தமது பிரதேசத்தை மேலும் விஸ்தரிக்க வேண்டிய நிலையில் முல்லைத்தீவு பிரதேசத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது;

2. மிகப் பெரியளவிலான கனரக ஆயுதங்களை கைப்பற்றுவது;

3. சிறீலங்காப் படைவீரர்களின் படைபலத்தைக் குறைப்பது,

4. கிழக்குக் கடற் பிராந்தியத்தை சுதந்திரமான கடற் போக்குவரத்துப் பாதையாக்குவது,

5. இராணுவ ரீதியில் தாம் இன்னும் மேலோங்கிய நிலையில் இருப்பதை உணர்த்துவது.

ஆனால், பரந்தன் இராணுவத்தின் மீதான தாக்குதலின் நோக்கங்கள் தன்மைகள் வேறாக இருந்த போதிலும் அதில் எதிரியின் படைபல சக்தி மிக்க ஆயுதத் தொடரை அழித்தல் அல்லது கைப்பற்றுதல் என்பதோடு சிறீலங்காவின் இராணுவ யுக்திக்கு மிக மோசமான அடியும் கொடுக்கப்பட்டது. அத்தோடு மக்களின் வாழ்வுக்கு எந்நேரமும் அச்சுறுத்தலாக இருந்த ஆட்லறிகளைக் கைப்பற்றுதல் என்பதுமாக இருந்தது.


இவ்விடத்தில், தலைவர் பிரபாகரன் அவர்களின் கூற்றே ஞாபகத்திற்கு வருகிறது. 'அவலத்தைத் தந்தவனுக்கே அதைத் திருப்பிக் கொடு' என்பது தான் அது.

'சத்ஜய', 'சூரியக்கதிர்' ஆகிய இராணுவ நடவடிக்கைகளால் துரத்தப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






பட்ட மக்கள் பெற்ற அனர்த்தங்கள், அவலங்களை, அதற்குக் காரணமாக இருந்த – பரந்தனில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரும் பெற்றனர். கனரக ஆயுதங்களை வைத்திருப்பதன் மூலம், தமிழர் நிலப்பகுதிகளை ஆக்கிரமித்து வைத்திருக்கலாம் என்ற இராணுவத்தினரின் எண்ணமும் சிதைய, அவர்கள் முகாம்களை விட்டு ஓடி இரவில் வழிகள் தெரியாது திகைத்தனர். எந்த ஆயுதத்தின் மூலம் மக்கள் இன்னல் அனுபவித்தார்களோ அதே ஆயுதத்தை பறித்து அதன் மூலமே நிகழ்த்தப்பட்ட இத் தாக்குதலின் நோக்கம், தன்மை என்பன வித்தியாசமானதும் வார்த்தைகளால் விபரிக்க முடியாததும் ஆகும்.

பரந்தன் இராணுவ நிலை மீதான தாக்குதலின் நோக்கம் அப் பிரதேசத்தை மீட்டெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதல்ல. அத் தாக்குதலின் வியூகம் ஒரு வரையறையைக் கொண்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட இலக்கின் வடக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் பாரிய இராணுவ முகாம்கள் இருக்கின்றன. வடக்கே ஆனையிறவு தளமும் தெற்கே கிளிநொச்சியில் சிறீலங்கா இராணுவத்தின் 54–வது பிரிவு தலைமையகமும் அமைந்துள்ளன. விடுதலைப்புலிகளின் பெரும்பாலான படையணிகள் பரந்தன் நோக்கியே தமது தாக்குதலை பூகம்ப அதிர்வாக தொடங்கின.

பரந்தன் இராணுவ முகாமின் கிழக்குப் பகுதியாக பாரிய தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப்புலிகளின் படையணிகளின் ஒரு பகுதி ஆனயையிறவு, பரந்தன் வீதியை ஊடறுத்து ஆனையிறவு – பரந்தன் இராணுவத் தொடர்பைத் துண்டித்தது மாத்திரமல்லாமல் ஆனையிறவுத் தளத்தின் தென்பகுதி நிலைகள் மீதும் பாரிய தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதல் நடவடிக்கையின் போது பரந்தனின் மேற்குப் புறமாகவும் இருந்து விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். தாக்குதல் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே விடுதலைப்புலிகள் முன்னணிக் காவல் பகுதியை கைப்பற்றிக் கொண்டனர். முன்னணிக் காவல் வலயத்திலிருந்த 10 ஆட்லறிகளை விடுதலைப்புலிகள் கைப்பற்றியிருக்கலாம் அல்லது அழித்திருக்கலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு இராணுவ முகாமை விட பரந்தன் இராணுவ முகாம் தாக்குதலிற்கு விடுதலைப்புலிகள் கடுமையான திட்டத்தை வரைந்து செயற்படுத்தியிருக்க வேண்டும். முல்லைத்தீவு இராணுவ முகாம் ஒரு வரையறுக்கப்பட்ட பிரதேசமாகும். ஆனால் பரந்தன் இராணுவ முகாமானது ஒரு பரந்துபட்ட பிரதேசத்தில் வடக்கேயும் தெற்கேயும் பாரிய இராணுவ முகாம்களைக் கொண்டு அமைந்திருந்தது. மேற்கத்திய இராணுவ அதிகாரிகளிடம் விசேட பயிற்சி பெற்ற இராணுவத்தினர் பலர் இப்பகுதிகளில் கடமையில் ஈடுபட்டிருந்தனர். பரந்தன் இராணுவ முகாம் தாக்குதலானது, எத்தகைய பயிற்சிபெற்ற இராணுவத்தையும் பிரபாகரனின் படைகளால் தோற்கடிக்க முடியும் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுவதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதல்கள், தமிழீழப் பகுதிகளில் உள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் முகாம்களின் எதிர்காலம் பற்றிய கேள்விகளை பலமாய் எழுப்பியுள்ளன.

தலையை மண்ணுக்குள் புதைத்து நிற்கும் தீக்கோழியின் நிலையில் இருந்து கொண்டு சிங்கள அரசும் அதன் இராணுவமும் உண்மையை ஒரு போதும் தரிசிக்கமாட்டா:


– தருமு –

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# யுக்தி மாறினால் போதுமா?

ஆனையிறவு, பரந்தன் படைத் தளங்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது சிறீலங்கா இராணுவம் தற்போது மேற்கொள்ளும் போர் யுக்தி பற்றி பலமான கேள்விகளை எழுப்பியுள்ளது. ஏனெனில் இந்தப் போர் யுக்தியானது மாற்றப்பட வேண்டும் அல்லது இராணுவம் பலமான அடிகளை வாங்க வேண்டியதும் எதிர்காலத்தில் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வரும் எனவும் இராணுவ ஆய்வாளர்களும், இராஜ தந்திரிகளும் எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது. முல்லைத்தீவு படைத்தளம் வீழ்ச்சி கண்டபோது அது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட முகமாக இருந்ததோடு புலிகள் தமது பலம் யாவற்றையும் ஒன்று திரட்டி இத்தாக்குதலை நடாத்தியதால் அவர்களால் வெற்றிபெற முடிந்தது என அரசு கூறியது. பூநகரி முகாம் பின்வாங்கலுக்கும் இந்தக் காரணம் பொருத்தப்பாடானதொன்றாக அவர்களால் கூறப்பட்டது.


அழிக்கப்பட்ட பல இராணுவ முகாம்களின் வெற்றிகளுக்குப் பின்னால் இருக்கும் வேவுப் புலி வீரர்களில் ஒருவன்

ஆனால் ஆனையிறவு, பரந்தன் படைத்தளங்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கும் அதனால் ஏற்பட்ட அழிவுகளுக்கும் கூறக்கூடிய பொருத்தமான காரணியாக அது அமையவில்லை. ஏனெனில் ஆனையிறவு, பரந்தன் முகாங்கள் தனிமைப் படுத்தப்பட்ட முகாம்களே அன்றி மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பிலுள்ள முகாம்களோ அல்ல. ஆனையிறவு முகாம் குறிப்பாக இயக்கச்சிப் பகுதியில் இருந்து கிளிநொச்சி வரை பரந்து விரிந்த முகாம் ஆகும். இதற்கு மேலாகப் பலாலிக் கூட்டுப் படைத்தளத்துடனும் இறங்குதுறையுடனும் கூடிய வெற்றிக்கேணிப் படைத்தளத்துடனும் நேரடியாகத் தொடர்பு கொண்ட படைத்தளம் ஆகும். இந்த வகையில் இந்த முகாம்கள் எந்த ரீதியிலும் பலவீனமானதொன்றாக இல்லை. அத்தோடு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பரந்தன் கிளிநொச்சிப் பகுதி கேந்திர முக்கியத்துவம் பெற்றதொன்றாகவும் இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளானதாகவும் இருந்தது. மேலும் இந்த முகாம்கள் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் ஆயுத விநியோகக் களஞ்சியங்களையும் கொண்டதாகவும் இருந்தது.

இந்த நிலையில் இதன் பாதுகாபபு என்பது கேள்விக்குரியதாக இருந்ததில்லை. இவற்றை விட இந்த முகாம்களின் ஒரு பகுதி அரசாங்கத்தின் அடுத்தகட்டப் போரின் தொடக்க வழியாகவும் இருந்தது. அதாவது அரசாங்கம் கருதும் பெரும் யுத்தங்களில் சிறு யுத்தமான தரைவழிப் பாதைத் திறப்பு யுத்தத்தின் ஆரம்பநிலையாக இந்தப் பகுதி அமைந்து இருந்தது. மேலும் இந்தப் பகுதியானது சிறீலங்கா இராணுவம் தனது வெற்றியைப் பறைசாற்றும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதொன்றாகும். இவ்வாறான தீவிர கண்காணிப்பும் முக்கியத்துவமும் கொண்டுள்ள இராணுவ முகாம்கள் இரண்டின் மீது ஒரே நேரத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலும் ஏற்படுகின்ற பாரிய இழப்புக்களுமே சிறீலங்கா இராணுவத்தின் போர் யுக்திகள் போன்ற கேள்விகளை எழுப்பியுள்ளன. ஏனெனில் இந்தப் போர் யுக்தி இராணுவத்தின் உயிரிழப்புக்களை அதிகரித்து சிப்பாய்களுக்கு பெரும் மனச்சோர்வை ஏற்படுத்தக்கூடியதாகும். அத்தோடு அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தில் அவற்றினால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களின் ஐயப்பாடுகளே இந்தக் கேள்விகள் எழுப்பப்படக்கூடியதற்குக் காரணமாகும்.

ஆனால் இதனை முப்படைகளின் தளபதியான சந்திரிகா சந்திரிகா குமாரணதுங்காவோ அன்றி ரத்வத்தையோ ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் யாழ். படையெடுப்பு, கிளிநொச்சிப் படையெடுப்பு போன்றமைக்கு சில தளபதிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதும் அதை இவர்கள் ஏற்கவில்லை. படையெடுப்புக்களை நடத்தியே முடித்தனர்.

இந்த நிலையில் யாழ் குடாநாட்டுக்கான பாதை திறப்பதை ஜனாதிபதி சந்திரிகாவோ அன்றி ரத்வத்தையோ ஆரம்பிக்கமாட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. அவர்களைப்பொறுத்து இராணுவ யுக்தி, போர் உபாயம் என்பவற்றை விட தாம் ஆட்சியதிகாரத்தில் இருந்து சாய்ந்துவிடாது பார்த்துக்கொள்ளுதலிலும் தமது வறட்டுத்தனமான கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ளுதலிலுமே அக்கறை அதிகமாகும். ஆகையினால் சந்திரிகா அரசாங்கம் இராணுவ ஆய்வாளர்களதும் இராஜதந்திரிகளின் கருத்துக்களையும் எந்தளவிற்குக் கருத்தில் கொள்ளும் என்பது ஒருபுறம் இருக்க, சந்திரிகா அரசானது இராணுவ யுக்திகளை மாற்றினால் என்ன மாற்றாது விட்டால் என்ன? இனப்பிரச்சினக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது ஒன்று ஆகையினால் எந்த வடிவத்தில் இராணுவ யுக்திகளை எவர் அமைத்தாலும் அது இறுதியில் தோல்வி காண்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

நன்றி: ஈழநாதம்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையும் இந்தியாவின் அணுகுமுறையும்

தமிழ்த் தேசிய இனச்சிக்கல் தொடர்பான விடயங்களில் இந்தியா நீண்டகாலமாகவே அக்கறை காட்டி வருகின்றது. ஆயினும் இவ் அக்கறை தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்கு முடிவினைக் கொண்டு வருமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் எந்தக் காலத்திலும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் சிறீலங்கா இரண்டாகப் பிளவுபடுவதன் மூலம் உருவாகக்கூடிய தமிழ்த் தேசிய எழுச்சிக்கு தடைபோடுபவர்களாகவே இருக்கிறார்கள். பல்வேறு வகைத் தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்திய உபகண்டத்தை தங்களுடைய நிர்வாக வசதிகளுக்காக ஒரு குடையின் கீழ் பிரிட்டிசார் கொண்டுவந்திருந்தார்கள். அந்த இந்திய உபகண்டத்தில் புதிதாக இன்று பல நாடுகள் பிறந்திருப்பதை கண்கூடாகப் பார்க்கின்றோம். எனவே இன்று இந்தியாவின் தேசிய நீரோட்டம் அதன் உள்ளக நெருக்கடிகளையும் தாண்டி, எத்தனை தூரம் வலுப்பெறும் என்பதற்கு எதிர்காலமே சாட்சியம் பகரமுடியும். டில்லியில் அரசுகள் மாறினாலும் அவற்றின் வெளியுறவு தொடர்பான அணுகுமுறைகளில் பெருமளவிலான மாற்றங்களை எதிர்பார்க்கமுடியாது. ஆனால் இந்த அணுகுமுறைகள் தொடர்பான மத்திய அரசின் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய வலுப்படைத்த காரணிகளில் மிக முக்கியமானதாக தமிழக மக்களும், அரசியலும் விளங்குகின்றது.

1958–ஆம் ஆண்டு முதல் இலங்கையிலே தமிழர்கள் பாதிக்கப்பட்ட வேளைகளில் எல்லாம் தமிழ்நாட்டுத் தமிழர்கள் தமது அனுதாபத்தையும், ஆதரவையும் வெளிப்படுத்தும் வகையிலே திரண்டெழுந்த சம்பவங்களை நினைவுகூரலாம். இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று 1983 ஜூலை கலவரம், வெலிக்கடைச் சிறைப் படுகொலை போன்றவைகளைக் கண்டித்து தமிழ் நாட்டிலே ஈழத்தமிழர்கள்பால் மாபெரும் அனுதாப அலை உருவாகியது. பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாகப் படகுகளில் தமிழ்நாட்டுக் கரைகளிலே வந்திறங்கினார்கள். ஈழத் தமிழ் மக்கள் பிரச்சினையிலே இந்தியா, தமிழ்நாடு ஆகியவற்றின் பங்குகள் குறித்த வினாக்களை எழுப்பும் விடயங்களாக இவை அமைந்தன. ஆயினும் இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் ஈழத்தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி ஜே.ஆரின் சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்கவே விரும்பினார்கள். எனவே ஈழத்தமிழ் மக்களின்



தேசிய சுயநிர்ணய உரிமையினை விட்டுக் கொடுக்காத எந்தவித சமரசத்திற்கும் தன்னை உட்படுத்தாத ஒரு இயக்கம் பலம் பெறுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் இவற்றையெல்லாம் மீறி அழுத்தங்களுக்கூடாக நிர்ப்பந்தங்களுக்கூடாக எதிர்நீச்சல் போட்டபடி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனித்துவம் பெறுவது சமகால விடுதலை வரலாறுகளில் முக்கியத்துவம் பெற்றதாக அமைகிறது.

தமிழீழப் பிரச்சினையும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழீழத்திலே மட்டுமல்லாது தமிழகத்திலேயும் பெரிதும் மக்களால் உற்று நோக்கப்படுபவைகளாக அமைந்துள்ளது. அண்மைக் காலங்களாக விடுதலைப் புலிகள் தொடர்பான மத்திய அரசின் அணுகுமுறைகள் மிகவும் மோசமானவைகளாக இருந்தபோதும் அந்த நிலைமைகளையும் தாண்டி தமிழக மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதனையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினை அங்கீகரிப்பதனையும் நோக்குகின்றோம். தமிழகத்திலே தொடர்ந்து ஈழவிடுதலைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வரும் பழ. நெடுமாறன் அவர்கள், 'தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகள் எந்தவொரு நேரத்திலும் குறைந்துவிடவில்லை' என்றுதான் கருதுவதாகவும் தமிழீழ உணர்வுகள் நீறுபூத்த நெருப்பாகவே தொடர்ந்து இருந்துகொண்டு வருகின்றதாகவும் கூறுகின்றார். மக்கள் அச்சத்தின் காரணமாகவே மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது வெளிப்படையாகத் தங்கள் ஆதரவைக் காட்ட முடியவில்லையென்று காரணமும் கூறுகின்றார். அண்மையில் நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சி மாநாட்டில் இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை மத்திய அரசு நீக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1. இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வரும் தமிழர்களைத் தடுத்து நிறுத்தக்கூடாது.

2. தமிழ் அகதிகளுக்கு சர்வதேச சட்டப்படி மறுவாழ்வு அளிக்கும் வகையில் அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டும்.

3. இலங்கையில் சிங்கள அரசு உடனடியாகப் போரை நிறுத்தி விட்டு பிரச்சனைக்குத் தீர்வு காண்பதுடன் பொருளாதாரத் தடையையும் நீக்க வேண்டும்

என்பது போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இதில் குறிப்பிட்டுக் கூறப்படவேண்டிய முக்கிய அம்சம் எதுவெனில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில், இவ் ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெற ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் தமிழக

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டி.ஜி.பி. ராஜசேகரன் நாயர் விடுதலைப் புலிகளை ஆதரித்தோ புகழ்ந்தோ பேசக்கூடாது என்றும், மத்திய அமைச்சர் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுபவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் பூச்சாண்டி காட்டிக்கொண்டிருந்தார்கள். ஆயினும் இந்த அச்சுறுத்தல்களையெல்லாம் பொருட்படுத்தாது மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் மாநாட்டினைத் துணிச்சலோடு நடத்தி முடித்திருந்தார்கள்.




தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கடந்த தனது ஆட்சிக் காலத்தில் பெற்ற கசப்பான அனுபவங்கள் காரணமாகவும், நிலையில்லாத மத்திய அரசு நாளை கவிழ்ந்து விட்டால் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் காரணமாகவும், தமிழ் நாடு மாநிலத்திலே கூட்டுச் சேர்ந்த கட்சியான தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தீவிர ராஜீவ் காந்தி விசுவாசத்தைக் காட்டுகின்றமையாலும் தனது நிலைப்பாட்டில் இராஜதந்திரத்தைக் காட்டி வருவது அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே இன்று தமிழகத்திலே தோற்றமளிக்கும் அதாவது தமிழ்நாடு காவல் துறையினால் தமிழீழ ஆதரவாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது போன்று சித்தரிக்கப்படும் காட்சிகள் யாவும் அரசியல் நோக்கம் கருதி அரங்கேறும் நிகழ்வுகளாகவே கருத வேண்டும். மாநில அளவில் தி.மு.க அரசுக்குத் தமிழீழத்தை எதிர்க்கும் நோக்கு அடிப்படையில் இல்லை. மற்றும் மத்திய அரசு மாறிவிட்ட சூழ்நிலையையும் வேறுபட்ட கண்ணோட்டத்தில் பார்த்தல் அவசியமானது. ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த காலத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய அமைதிகாக்கும் படை வி.பி. சிங் பிரதமராக இருந்த வேளையில் திருப்பி பெறப்பட்டது. படைகள் மீளப் பெறப்பட்டமைக்கு அப்போதைய பிரேமதாசாவின் அழுத்தம் மாத்திரமல்லாமல் வி.பி.சிங் அரசின் இந்தியப் படைகள் இலங்கையில் நிலை கொள்ளக் கூடாது என்ற கொள்கை நிலைப்பாடும் பிரதான காரணியாக அமைந்ததையும் காண்கின்றோம்.

காங்கிரசின் அனுசரணையோடு தேவகவுடா அரசு ஆட்சிக் கட்டில் இருந்த போதும் வெளிநாட்டு அமைச்சர் குஜ்ரால் போன்றவர்கள் தீவிர விடுதலைப் புலிகள் எதிர்ப்புக் கண்ணோட்டம் இல்லாதவர்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும். தற்போதைய வெளிநாட்டமைச்சர் குஜ்ராலே கவிழ்ந்த வி.பி.சிங் அரசின் காலத்திலும் இதே பதவியை வகித்தவர். அந்த வேளையில் குஜ்ரால் இந்திய– இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்தவராவார். நிலைமைகள் எப்படி இருப்பினும் இந்திய முதலாளி வர்க்கம், அரச உயர் அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய அதிகார வர்க்கத்தின் அணுகுமுறைகள் தமிழீழப் போராட்டத்திற்குப் பாதகமான அம்சங்களையே உள்ளடக்கி இருக்கின்றது. ஆனால் அந்த அணுகுமுறைகள்பால் நிர்ப்பந்தங்களைத் தோற்றுவிக்கும் சூழ்நிலையாக இன்றைய தமிழகத்தில் தமிழீழ ஆதரவு நிலைப்பாடு மாறிவருகின்றது. வளர்ந்து வரும் இச் சூழல் எதிர்காலத்தில் இன்னும் தீவிரமடைந்து, பலம் பெறுகின்ற வாய்ப்புக்களையே கொண்டிருக்கின்றது. ஐரோப்பா உட்பட உலகெங்கணும் தேசிய இன உணர்வுகள் அண்மைக் காலங்களாக எழுச்சி பெற்று வருகின்றன. கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களின் பின் அமெரிக்க – ரஷ்ய பனிப்போர் தணிந்துள்ள இச் சூழலில் முன்பு கேட்கச் சகிக்க முடியாதிருந்த பல விடயங்கள் சாதாரணமானவைகளாக மாறிவருகின்றன. எனவேதான் தமிழகம் தமிழீழ விடுதலைப் போரில் எத்தகைய முக்கியத்துவத்தை உடையதென்பதையும் அந்த முக்கியத்துவத்தின் பிரயோகம் தமிழீழ விடுதலைப் போரில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற தன்மைகளைக் கொண்டிருப்பதையும் நாம் மட்டுமல்லாது தமிழகமும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

**-நடராஜா முரளிதரன்**

## முதல் மூன்று வார காலத்துள் சிறீலங்கா விமானப்படை இழந்த 3 விமனங்கள்

**1997** பிறந்து முதல் மூன்று வாரத்திற்குள் சிறீலங்காவின் விமானப்படைக்கு 296 மில்லியன் ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டிருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. ஜனவரி 16ம் திகதி விமானி இல்லாமல் தொலைதூர கட்டுப்பாட்டுக் கருவியினால் இயங்கும் உளவு பார்க்கும் விமானம் ஒன்றையும், ஜனவரி 20ம் திகதி வை–12 ரக விமானம் ஒன்றையும், 21–ம் திகதி கிபீர் ரக விமானம் ஒன்றையும் சிறீலங்கா விமானப்படை இழந்துள்ளது.

16ம் திகதி வீழ்ந்த விமானி இல்லாத விமானமானது ஊர்காவற்துறைக்கு மேலாக பறந்து கொண்டிருந்த போது இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் விபத்தில் சிக்கியிருக்கலாம் என விமானப்படையினர் தெரிவித்துள்ளனர். இது சிறிய விமானம். ஆனால் மிகவும் வேகமாகப் பறக்கக் கூடியது. இவ் விமானம் மிக நுணுக்கமான புகைப்பட கருவிகளைக் கொண்டது. எதிரிப்படைகளின் அசைவுகளையும் கனரக ஆயுதங்களின் இருப்பிடங்களையும் தெளிவாகப் படம் பிடிக்கக் கூடியது. இதன் மூலம் விடுதலைப் புலிகளின் தலைவர்களின் நடமாட்டங்கள், இராணுவ நகர்வுகள், இராணுவத் தளபாட கிடங்குகள் போன்றவற்றை அறிந்து கொண்டு தமது இராணுவ நகர்வுகளை மேற்கொள்வதற்கு இந்த வகை விமானங்களை பயன்படுத்த முடியும் என சிறீலங்கா இராணுவம் திட்டமிட்டது. இந்த இழப்பிற்குப் பின் இந்த விமானத்தின் பயன்பாடுகளும் தேவைகளும் குறித்து சிறீலங்கா இராணுவம் மறுபரிசீலனை செய்யலாம். இந்த விமானத்தின் விலை 28,5 மில்லியன் ரூபாய் பெறுமதியாகும்.

ஆயுதங்கள் நிரம்பிய விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று கடலில் வருவதாக கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் அநுராதபுரத்திலுள்ள வடபுலத்திற்கான தலைமைக் காரியாலயத்தை உஷார்படுத்தின. அனுராதபுரத்திலிருந்து பலாலி விமானப் படைத்தளத்திற்கு வேகமாக உத்தரவு பறந்தது. 20–ம் திகதி அதிகாலை 4 மணியளவில் விமானி உட்பட மூவருடன் வை–12 விமானம் வடகிழக்குக்

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்

கடலில் கப்பலைத் தேடிச் சென்றது. பூரணை நிலவு நாளிற்கு மூன்று நாட்களிற்கு முன்னராகையால் விமானிக்கு தெளிவான பார்வை இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. 5000 அடி மேலாகப் பறந்து கொண்டிருந்த வை–12 விமானத்தின் விமானி, தான் கப்பலை அடையாளம் கண்டு விட்டதாகவும் சற்று அண்மையில் சென்று பார்க்கப் போவதாகவும் பலாலி கட்டுப்பாட்டுக் கோபுரத்திற்கு அறிவிக்கிறார். அது தான் விமானி பேசிய கடைசி வார்த்தை. சாதாரணமாக போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வந்த இச் சீன விமானம் இலங்கை வான் படையினரால் இலங்கை இந்திய கடலை அவதானிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. காலை 5 மணியைத் தாண்டி சில நிமிடங்கள் கடந்ததும் வை–12 விமானத்தில் இருந்து எந்த தகவல்களும் வராததால் மற்றொரு விமானம் வை–12 ஐ தேடிச் சென்றது. அது அங்கு விமானத்தையும் காணவில்லை புலிகளின் ஆயுதக் கப்பலையும் காணவில்லை என அது அறிவித்தது. சிறீலங்கா விமானப்படை 124,4 மில்லியன் ரூபாய்பெறுமதி வாய்ந்த வை–12 யும் இழந்தது.


மறுநாள் அதாவது, 21–ம் திகதி வன்னியில் விடுதலைப்புலிகளின் நிலைகளைத் தாக்குவதற்கென கிபீர் விமானங்கள் இரண்டு கட்டுநாயக்காவிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டன. அதிலொன்று, விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு சில மணித்துளிகளில் நீர்கொழும்பு கடலில் விழுந்து போய்விட்டது. இதில் 30 மில்லி மீற்றர் பீரங்கிகளும் ஏவுகணைகள், குண்டுகள் தொடர் குண்டுகள், ஆகியன பொருத்தப்பட்டிருந்தன 6000–க்கும் அதிகமான எடையைச் சுமந்து கொண்டு பறக்கக் கூடியது. புறப்பட்டு சில நிமிடங்களில் கடலில் வீழ்ந்து நொருங்கியது. எனினும் விமானி பரசூட் மூலம் குதித்துத் தப்பிக் கொண்டார். கிபீர் விமானம் 142.5 மில்லியன் ரூபாய் பெறுமதி வாய்ந்ததாகும்.

புது வருடம் பிறந்து விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்களுக்குள் மூன்று சிறீலங்கா விமானப்படை விமானங்கள் கடலிலும் தரையிலும் விழுந்து நொருங்கி விட்டன. இது ஒரு மிகப்பெரிய பேரிழப்பே. சிறீலங்காவின் விமானப்படைக்கு அவமானத்தையும் அது தேடிக் கொடுத்திருக்கின்றது. ஆரோக்கியமற்ற விமானப் படையினை புதிதாக கட்டியெழுப்புகின்ற பெரும் சுமையையும் எதிர்கொண்டபடி கடலில் விழுந்த விமானங்களை மீட்டெடுக்கின்ற பணியைத் தொடர்கின்றன.


## 3ம் ஈழப்போரில் விமானப்படை இழந்த விமானங்கள்



AVRO
28.4.95
காங்கேசன்துறையில் வீழ்ந்தது




AVRO
29.4.95
காங்கேசன்துறையில் வீழ்ந்தது




PUCCARA
14.7.95
காங்கேசன்துறையில் வீழ்ந்தது



ANTONOV 32
13.9.95
ஜாஎலவில் வீழ்ந்தது




Y - 8
18.11.95
காங்கேசன்துறையில் வீழ்ந்தது




ANTONOV 32
26.11.95
காங்கேசன்துறையில் வீழ்ந்தது




Mi - 17
22.01.96
காங்கேசன்துறையில் வீழ்ந்தது




BEL 212
07.12.96
வவுனியாவில் வீழ்ந்தது



UNMANNED AERIAL VEHICLE
16.01.97
பூநகரியில் வீழ்ந்தது



Y - 12
20.01.97
யாழ்ப்பாணக் கடலில் வீழ்ந்தது



KFIR
21.01.97
நீர்கொழும்புக் கடலில் வீழ்ந்தது

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தீர்த்தல் திட்டத்தின் ஓரங்கமான தீர்வுத்திட்டம்

'சித்திரைக்கு முதல் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விடும்' என சிறீலங்காவின் இன்றைய அரசாங்கத்தின் பிரச்சாரப் பீரங்கிகள் முழங்கத் தொடங்கி விட்டன. அதே வேளையில் சிறீலங்காவின் நிஜப் பீரங்கிகள் தமிழர் தாயகப் பிரதேசங்களை நோக்கி குண்டுகளை பொழிந்த வண்ணம் உள்ளன. இதனால் அப்பாவித் தமிழ் மக்கள் தமது உயிர்களையும் உடமைகளையும் அனுதினமும் இழந்த வண்ணம் உள்ளனர். உணவும் மருந்தும் குடியிருப்பு வசதிகளும் சிறீலங்காவால் மறுக்கப்பட்ட நிலையில் தமிழர்களை பட்டினி போட்டே சாகடிக்கத் துடிக்கும் சிறிலங்கா, இனப்பிரச்சினைக்கு தீர்வினை ஏற்படுத்த முனைவது போல் காட்ட முற்படுவதும் ஒரு வகையான இராணுவத் தந்திரோபாயமே.

எப்பொழுதும் ஜனநாயக அணுகு முறைகளை சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகு முறை போல் காட்டி தமிழர்களது அரசியல் பணிவை தமதாக்குவதற்கான உத்தியாகவும் கால இழுத்தடிப்பினை செய்வதற்கான ஊடகமாகவுமே கையாண்டு வந்துள்ளன என்பதை இலங்கையின் வரலாற்றை அறிந்த எவரும் மறுக்க முடியாது.

பிரித்தானிய அரசாங்கத்திடம் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதை தடுக்க வேண்டாம்; உங்களுடைய பிரச்சினைகளை நான் தீர்த்து வைப்பேன் எனத் தமிழர்களுடைய அன்றையத் தலைவர்களிடத்தில் கெஞ்சிக் கூத்தாடியே டீ. எஸ். சேனநாயக்கா அன்று தமிழர்களின் அரசியல் பணிவை ஒற்றையாட்சி சோல்பரி அரசியல் அமைப்புக்குப் பெற்றுக் கொண்டார். ஆனால் அரசியல் அதிகாரம் கைமாறியதும் அவரே தமிழர் தாயகங்களில் சிங்களக் குடியேற்றங்களின் தந்தையாகி இன்றைய பிரச்சினைகளின் வித்தானார்.

பிரபல சிங்கள வரலாற்று ஆசிரியர் கே. எம். டி. சில்வா சிங்கள, தமிழ் இராச்சியங்களிடையே இயற்கையாகவே அமைந்திருந்த காடுகளே மக்களுக்கு ஒவ்வொருவருடைய இராச்சியத்தினதும் எல்லைகளை வேறுபிரித்துக் காட்டின. இவை அரசியல் நோக்குடன் குடியேற்றங்கள் மூலம் அழிக்கப்பட்டதினாலேயே சிங்களவர் தமிழர் இடையில் பிரச்சினைகள் தோன்றின என்கின்றார். எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா கூட ஆரம்பத்தில் இலங்கைத்தீவில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமான சமஸ்டி ஆட்சி ஏற்படுத்தப்படல் வேண்டும் என்று கூறியே தமது அரசியல் வாழ்வைத் தொடங்கினார். அதிலும் குறிப்பாக தமிழ் மக்களுக்கு தமிழர் தாயகத்தை உள்ளடக்கிய ஓரே ஒரு சபை பற்றி மட்டுமே பண்டாரநாயக்கா குறிப்பிட்டிருந்தார். ஆனால் பின்னர் இதே பண்டாரநாயக்காவே சிங்களம் மட்டும் சட்டத்தின் சூத்திரதாரியானார். அது மட்டுமல்ல தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் குறித்துப் பேசுகையில், சமஸ்டி குறித்து பேச்சளவில் கூட பேச மறுத்தார். 26, ஆடி 1957–ஆம் திகதிய ஒப்பந்தம் குறித்த ஆங்கில அறிக்கையை அப்படியே தருகின்றேன்.



புத்தாண்டில் தனது நடவடிக்கைகளை தொடர முன் ஆசி பெறும் சந்திரிகா

The prime Minister stated that from the View of the Government he was not in a position to discuss the setting up of federal constitution or regional autonomy or any steps which would abrogate the official language Act. The quection then arose whether it was possible to explore the posibility of an adjustment without the federal party abandoning or surrendering any of its fundamental principles and objectives.

At this stage the prime Minister suggested an examination of the government's draft Regional Councils Bill to see Whether provisions could be made under it to meet reasonably some of the mattersin this regard which the federal party had in view"

சிங்களத் தலைமைகள் தாம் நினைத்ததை இலங்கைத் தீவில் செய்ய உரிமை உள்ளவர்களாகவும் தாம் கொடுப்பதை தமிழர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனோநிலையுடனும் எந்நாளும் திகழ்வதையே இந்த ஆவணம் உறுதிப்படுத்துகிறது. 'The Majority shall have its way and the miniority shall have its say" என்ற ஆங்கில அரசியல் மொழி வழி சிங்களத் தலைமைகள் இயங்கத் தொடங்கியமைக்கு காலனித்துவம் தமிழர்களினதும் சிங்களவர்களினதும்

- பற்றிமாகரன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நாட்டெல்லைகளை இணைத்தது மட்டுமல்ல தமிழர்களது அரசியல் தலைமைகளும் தங்களைத் தாங்களே தனியான தேச இனம் என்பதை மறந்து சிறுபான்மையினர் என மகுடம் இட்டுக் கொண்டதும் காரணமாயிற்று என்பதே வேதனையான உண்மை. பின்னர் பண்டாரநாயக்காவே பௌத்த சிங்கள பேரினவாதத்தின் அழுத்தங்களுக்கு முன்னுரிமை கொடுத்து தான் செய்து கொண்ட மிக குறைந்தபட்ச ஒப்பந்தத்தைக் கூட கிழித்து எறிந்த வரலாற்றுச் சம்பவத்தின் மூலம் பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் தமிழர்களுடன் மேற்கொள்ளப்படுவதற்கு இலங்கைத் தீவில் பௌத்த சிங்களப் பேரினவாத சார்புடைய சிங்களப் பெரும்பான்மை அரசுகளால் முடியாது என்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. தொடர்ந்து தேசிய அரசாங்க வேடங்கள் சூடிய ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் தமிழரசுக் கட்சியிடை உருவான போராட்ட உணர்வுகளை ஒழித்துக் கட்டுவதற்கான தந்திர முயற்சியாக டட்லி – செல்வா பேச்சுக்கள் நாடகத்தை நடாத்தி மு. திருச்செல்வத்தின் உள்ளூராட்சி அமைச்சர் பதவி உருவாக்கலூடாக அதனை வெற்றிகரமாகச் சாதித்துக் கொண்டதே தவிர தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகள் பற்றி அக்கறை காட்டப்படவில்லை. இப்படியான பல அனுபவங்களின் பின்னணியிலேயே தந்தை செல்வநாயகம் 1975ம் ஆண்டில் காங்கேசன்துறை இடைத்தேர்தலை சிறிலங்கா குடியரசை தமிழ் மக்கள் நிராகரித்தலுக்கான குடியொப்ப மாதிரியாக அறிவித்து அதில் அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றதின் பின்னர் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறுகின்றார்.

“வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் அந்நிய மேலாண்மை ஒன்றுசேர்க்கும் வரை யுகம் யுகமாகத் தமிழர்களும் சிங்களவர்களும் இத் தேசத்தில் வேறு வேறான இறைமையுடன் வாழ்ந்து வந்தனர். அந்நிய ஆட்சிக்கெதிரான சுதந்திரப் போராட்டத்தின் பொழுது கூட தமிழர்கள் அதன் மூலம் தமது சுதந்திரத்தை மீளப்பெறலாம் என்ற நம்பிக்கையுடனேயே அதில் முழுமையாகப் பங்கெடுத்தனர் என்பதை இந்நேரத்தில் நினைவுறுத்த விரும்புகின்றேன். கடந்த 25 ஆண்டுகளாக ஒன்றாக்கப்பட்ட இலங்கையுள் சிங்களவர்களுடன் சமத்துவமான அடிப்படையில் எமது அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்கான இயலுமான எல்லா வழிகளிலும் முயற்சித்தோம். துக்ககரமான உண்மை என்னவென்றால் அந்நியர் வழங்கிய சுதந்திரத்தின் மூலம் தங்களை வந்தடைந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி தொடர்ந்து வந்த எல்லா சிங்கள அரசாங்கங்களும் எமது அடிப்படை மனித உரிமைகளைக் கூட மறுத்து எம்மை ஒடுக்கப்பட்ட மக்களாக்கி விட்டனர். இந்த அரசாங்கங்கள், இறைமை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பொதுவாக்கப்பட்டதினாலேயே அதனைத் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி இதனைச் செய்யக் கூடியதாக அமைந்தது. இந்தத் தேர்தல் மூலம் தமிழீழத் தேச மக்கள் தம்மிடம் இயல்பாகவே உள்ள இறைமையைப் பயன்படுத்தி தம்மை சுதந்திரமானவர்களாக விடுவித்துக் கொள்வதற்கான ஆணையை பிரகடனப்படுத்தியுள்ளனர் என்பதனை எனது மக்களுக்கும் தேசத்திற்கும் தெரியப்படுத்த விரும்புகின்றேன். எனது கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக இந்த ஆணையை முன்னெடுத்துச் செல்வோம் என உறுதியளிக்கின்றேன்”. இதனையடுத்து சிறீலங்காப் பாராளுமன்றத்திலும் தமிழீழத் தேச மக்களின் சுய நிர்ணய உரிமைப்பிரகடனத்தை பிரகடனப்படுத்தியுள்ளார்.

**அந்நிய மேலாண்மை ஒன்றுசேர்க்கும் வரை யுகம் யுகமாகத் தமிழர்களும் சிங்களவர்களும் இத் தேசத்தில் வேறு வேறான இறைமையுடன் வாழ்ந்து வந்தனர்.**

இதன்மூலம் சிறீலங்கா குடியரசுக்கு தமிழ் மக்களை ஆள்வதற்கிருந்த சட்டபூர்வ உரிமையினை இழந்தது. இந்த உண்மையினை படைபலம் கொண்டு ஏற்க மறுத்த சிறீலங்கா இன அழிப்பு நடவடிக்கைகளை வேகப்படுத்தியமையினால் தமிழர்கள் ஐக்கிய நாடுகளின் சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப ஆயுத எதிர்ப்பின் மூலம் தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியவர்களானார்கள். ஜே. ஆர். ஜெயவர்த்தனா யுத்தப்பிரகடனம் செய்ததினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமென்னும் தமது தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமையில் அன்று முதல் இன்று வரை சிங்கள சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்த்து வாழ்வுக்காகப் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் அமைதிக்கான பேச்சுவார்த்தை முயற்சிகள் மூன்று தடவைகள் மேற்கொள்ளப்பட்டன. திம்புப் பேச்சுக்கள், பிரேமதாசாவின் பேச்சுக்கள், சந்திரிகாவின் பேச்சு வார்த்தை முன்முயற்சிகள் என்பனவே அவை. இவைகள் முன்னேற்றம் காணாமைக்கு முதலும் முக்கியமுமான காரணம் சிறீலங்கா தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முற்படாது தமிழ் மக்களை பேச்சின் மையமாகக் கொள்ளாது தனது இராணுவ நலன்களையும் சிங்களப் பேரினவாதத்திட்டங்களுக்கு செயல் வடிவு கொடுப்பதையும் மையமாகக் கொண்டு செயற்பட முயற்சித்தமையுமே ஆகும். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கான சதி முயற்சியாக பேச்சுவார்த்தைகளை திட்டமிடும் இராணுவ தந்திரோபாயமே ஆகும்.

தமிழர்களுடைய இன்றைய தலைமைத்துவமான தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழத்தேசத்திற்கு தேசிய பாதுகாப்பு வழங்கும் ஆற்றலும் தியாகம் மிகு உறுதியான கொள்கையும் உள்ளவரை தமிழ் மக்களை அடிமை கொள்ள முடியாது என்பதை நன்கு இனங்கண்டு கொண்ட சந்திரிகா, தமிழீழ மக்களைத் தீர்த்தல் திட்டத்தின் ஒரு அங்கமாக தீர்வுத்திட்ட தந்திரோபாயத்தை கையாள முற்பட்டு வருகிறார். இதன் மூலம் தமிழ் மக்களிடை மனக்குழப்பத்தினைத் தோற்றுவித்தல், சர்வதேச சமூகத்திற்கு தான் ஏதோ அமைதி முயற்சிகளில் அக்கறை உள்ளவர் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தல் ஆகிய இரு தளங்களில் தனது இராணுவ நோக்குகளைப் பூர்த்தி செய்யமுனைகிறார். ‘அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட பொது மக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில் தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.’ எனும் எங்கள் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் கூற்றுப்படி தமிழ் மக்களின் மன உறுதியை அழித்தல் என்பதே சந்திரிகாவின் நோக்காக உள்ளது என்பது தெளிவுபடுத்துகிறது. இனங்காணக்கூடிய அச்சத்தை உருவாக்குவது, உணவை ஆயுதமாக்கி, மருந்துகளைத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தடுத்து, இருப்பிட வசதிகளை மறுத்து, மனித நேயத்துக்கு எதிரான குற்றங்களையும், யுத்தக்குற்றங்களையும், மக்கள் மீதான யுத்தத்தையும், மக்கள் மீதான முற்றுகையையும், சர்வதேச சட்டங்களுக்கோ அன்றேல் சர்வதேச உலகுக்கோ எவ்வித அச்சமுமின்றி சர்வசாதாரணமாகச் செய்து வரும் சிறீ லங்கா இவ்விதமாக மக்களை இனவதைப்பு செய்து கொண்டு அதேவேளையில் தான் நினைத்த சலுகைகளையும் தீர்வுகளையும் கொடுத்தால் புற அழுத்தங்கள் காரணமாக அதனை ஏற்பார்கள் என்ற சதி நோக்குடன் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. இவ்விதமான மக்களுக்கு எதிரான சதிச்செயல்களை நிறுத்தி மக்களது நாளாந்த வாழ்வு வழமைக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை தோன்றும் என்பதே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடாக உள்ளது. இதனை செய்ய மறுக்கும் சிறிலங்கா தமிழீழ விடுதலைப்புலிகளையும் மக்களையும் வேறாக்குதல், விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தல் எனும் இரு இராணுவ நோக்குகளை தனது அரசியல் நோக்காகக் கொண்டு செயற்பட முற்படுகிறது. இதனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையே தீர்த்துக்கட்டலாம் என தமிழ்ப் பகுதிகளில் உள்ளூராட்சி தேர்தல் முயற்சி போன்றவை அமைகின்றன.

தந்தை செல்வநாயகம் தமிழர்களுடைய பிரச்சினையே இறைமை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பொதுவாக இருத்தலே எனத் தெளிவாகக் கூறிவிட்டார். இதனைத் தீர்த்து வைக்கக்கூடிய அமைதி முறையிலான அல்லது ஜனநாயக வகையிலான பேச்சுவார்த்தைகளையோ வழிமுறைகளையோ எந்த சிறீலங்கா அரசாங்கமும் எடுக்காததினாலேயே தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை விடுத்தார். இதனை யுத்த நிலையாக சிறீலங்கா மாற்றியமைத்தது. அதன் பின்னர் யுத்த நிலையிலிருந்து அமைதி திரும்புவதற்கான பேச்சுக்களே இடம் பெறமுடியுமே தவிர சிறீலங்கா தான் நினைத்ததை தன் இஸ்டமாக செய்ய முடியாது. இந்த யதார்த்த நிலைகளின் அடிப்படையில் வைத்துப் பார்த்தால் தீர்வுத்திட்டத்தில் என்ன இருக்கின்றது என்பதுக்கு முன் தீர்வுத்திட்டத்தினை கொண்டு வருவதின் மர்மம் என்ன என்பதே தமிழர்க்கு முக்கியம்.

# தாயகம்



**பல்லவி**

தாயை நிகர்த்த எம் தாயகம் வாழும்
தமிழீழம் நிமிர நம் தடைகளும் வீழும்
(தாயை....)

**சரணம்-1**

செம்மண்ணில் மழை வீழ்ந்து சிருங்காரம் காட்டும் -யாழ்
புகையிலையும் பனைவளமும் நெஞ்சோரம் கூடும்
முல்லையில் பகையில்லை நெற்கதிர் ஆடும் - வன்னி
மந்திகள் தேனுண்ட போதையில் தாவும்
(தாயை.....)

**சரணம்-2**

வலைகொள்ள முடியாது கடலள்ளித் தருமே - மன்னார்
வள்ளங்கள் கரைசேர களிப்போடு வருமே
இயற்கையாய் துறைகொண்ட கோணமலை பதியும்-ஈசன்
எழுந்தருளிக் கொண்டதால் இதயத்தில் பதியும்
(தாயை..)

**சரணம்-3**

பாட்டோடு கூத்திணைய பகலவன் மறையும் - மட்டு
வாவிமீன் பாடுதெனில் இரு காதும் நிறையும்
பாலோடு தயிரள்ளும் அம்பாறை அழகும் - கண்
பார்த்திருக்க தென்னையில் குலைமுற்றி நழுவும்
(தாயை...)

-**சோதியா** (நோர்வே)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விடுதலைப்புலிகள் இல்லாமல் ஈழத் தமிழர் பிரச்சினை தீராது

## பட்டாளி மக்கள் கட்சி மாநாட்டில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் முழக்கம்

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு 01.02.97 சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. சென்னை கடற்கரையில் நடைபெற்ற மாநாட்டில், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ், இந்திய சமதாக் கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னான்டஸ், நீதிபதி அஜித்சிங் பெயின்ஸ், கோ.மு. வீரபத்திரன், திருமதி மதலின் மைக்கேல் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியின் பல தலைவர்கள் பேசினார்கள்.

அகில இந்திய சமதாக்கட்சியின் தலைவர் ஜார்ஜ் பெர்ணாண்டஸ் இம்மாநாட்டில் பேசும்போது இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசின் அணுகுமுறையைக் கண்டனம் செய்தார். அவர் ஆற்றிய உணர்ச்சிகரமான உரையில் இருந்து...

'ராஜீவ் காந்தியின் கொலையினைக் காரணம் காட்டி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இருந்து இந்தியா ஒதுங்கி நிற்பது சரியான நிலை அல்ல. கனத்த இதயத்தோடு இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் தினமும் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இராமேஸ்வரம் பகுதியில் உள்ள ஏழை மீனவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இவர்களின் அவல நிலைமையை ஏழை விவசாய பிரதமரான தேவகௌடவால் புரிந்து கொள்ள முடியாதா? காங்கிரசின் சதிவலையில் சிக்கிய கைதியாக அவர் இருக்கிறார். அதிலிருந்து வெளியே வந்து இந்தப் பிரச்சினையை தீர்க்க அவர் முயல வேண்டும்.

இலங்கையில் உள்ள தமிழர்களை அடியோடு ஒழித்துக்கட்ட சதித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினை அந்நாட்டின் உள்விவகாரம் என்று சொல்லி இந்தியா வாய்பேசாமல் இருப்பது மனிதாபிமானமற்ற நடவடிக்கை ஆகும். இலங்கையிலிருந்து உயிர்தப்பி ஓடிவந்திருக்கும் அகதிகளை ஐ.நா.சபையின் உதவியுடன் காப்பாற்ற வேண்டும்.

1948–ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் தமிழர் பிரச்சினை இருந்து வருகிறது. இதற்கு விடுதலைப்புலிகள் காரணம் என்று சொல்வது தவறானது. இது உண்மையை மறைப்பதற்காக செய்யப்படும் முயற்சியாகும்.

விடுதலைப்புலிகள் இல்லாமல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு எவ்விதத் தீர்வும் காணமுடியாது. உலக நாடுகள் எல்லாம் இந்த உண்மையை உணர்ந்து செயல்படுகின்றன. இந்தியாவுக்கு மட்டும் இந்த உண்மை புரியவில்லை. இலங்கையில் உள்ள தமிழர்களின் துயரத்தை துடைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர விடுதலைப் புலிகளின் இயக்கத்தைத் தடைசெய்வது போன்ற முயற்சிகளை மேற்கொள்வது தவறானதாகும்.

இலங்கையில் அமெரிக்க கூலிப் படையினரும், பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் இராணுவ உதவியும் அதிகரித்துக் கொண்டே இருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அபாயகரமானது. இந்த உண்மையை டில்லியில் இருப்பவர்கள் உணர மறுப்பது ஏன்? இலங்கையில் உள்ள தமிழர்கள் திட்டமிட்ட இனப்படுகொலைக்கு ஆளாகி வருகிறார்கள் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் கிடைத்த வண்ணமுள்ளன. உணவு, மருந்து போன்றவை கூட இல்லாமல் அவர்கள் சாகிறார்கள். இதையெல்லாம் ஏன் இந்திய அரசு பார்க்க மறுக்கிறது. ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை மிகத் தவறானது.

முன்பு தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளை பகிரங்கமாக ஆதரித்தார்கள். இப்போது இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கவே அச்சப்படுவது ஏன்? இத்தகைய சந்தர்ப்பவாதிகளை தமிழ்மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

### இந்த மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளில் இலங்கையின் முப்படைத் தாக்குதலால் 7 இலட்சம் ஈழத் தமிழர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகள் ஆக்கப்பட்டு வவுனியா காடுகளுக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீண்டும் இயல்பான வாழ்க்கை நடத்தவேண்டுமானால் படைகளை இலங்கை அரசு திரும்ப பெறவேண்டும். எனவே, பாரம்பரியத் தமிழ் மாகாணங்களிலிருந்து படைகளை விலக்கிக் கொண்டு போர் நிறுத்தத்தை இலங்கை அறிவிக்க வேண்டும் என இந்தியா வற்புறுத்தவேண்டும்.

1948 முதல் 1976 வரை ஈழத்தமிழர் தலைவர்கள் நடத்திய அறவழிப் போராட்டங்களை இலங்கை அரசு ஏற்க மறுத்தது. எனவே தான் தனி ஈழம் ஒன்றே தீர்வு என்கிற முடிவை அந்த தலைவர்கள் மேற்கொண்டனர். தீர்வான தமிழீழம் பெற ஈழத்தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

இராணுவ தாக்குதலில் இருந்து தப்பி, தமிழகம் வருபவர்களை மத்திய அரசு, கடலில் தடுத்து நிறுத்துவதும், கரை சேர்ந்தவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்வதும் மனித நேயமற்ற செயல்கள்.

இந்தியா வந்துள்ள இலங்கைத் தமிழர்களைச் சிறப்பு முகாம்களில் அடைத்து சிறை வைத்துள்ளது நீதி ஆகாது. முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை விடுவிக்க வேண்டும். சர்வதேச அகதிகள் பராமரிப்பு விதிகளின்படி, அவர்களுக்கு எல்லா உதவிகளையும் மத்திய, மாநில அரசுகள் செய்ய வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் ஐ.நா. சபை கவனம் செலுத்தாமல் உள்ளது. இனியாவது அச்சபை இதில் தலையிட்டு, தமிழ் இனம் இலங்கையில் அழிவதைத் தடுக்க வேண்டும். இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளுக்கு பத்திரிகையாளர்களும், தொண்டு நிறுவனத்தினரும் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

அமைதிக்கான யுத்தம் என்ற பெயரில் இலங்கையின் அதிபர் சந்திரிகா தமிழீழத்தின் மீது தொடுத்துள்ள போர் பல ஆண்டுகளாக முந்தைய இலங்கை அரசுகள் நடத்தி வரும் தமிழின அழிப்பின் தொடர்ச்சி என்றே பா.ம.க. கருதுகிறது. இந்த இனவெறியைக் கண்டிக்கிறோம். ★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எச்சரித்தல் போதாது

"தமிழக மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படை மட்டில்லாத அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இந்நிலை தொடருமானால் ஆபத்தானவிளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்" இவ்வாறு சிறீலங்கா கடற்படையைத் தமிழக முதல்வர் மு. கருணாநிதி எச்சரிக்கை செய்துள்ளார். தமிழக மீனவர்களை சிறீலங்கா கடற்படை தொடர்ச்சியாக தாக்கி வருவதும், கொலை செய்வதும், இவர்கள் உடைமைகளை நாசமாக்குவதும் தொடர்பாகவே தமிழக முதலமைச்சர் கருணாநிதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஆனால் முதல்வர் கருணாநிதியின் எச்சரிக்கையை சிறீலங்கா கடற்படையோ அன்றி அரசாங்கமோ எந்தளவுக்குப் பொருட்படுத்தும் என்பது கேள்விக்குரியதே ஆகும். ஏனெனில் இந்த விடயத்தில் தமிழக முதலமைச்சரின் எல்லை எந்த அளவுக்கானது என்று சிறீலங்காவுக்குத் தெரிந்திருக்கும். தமிழக மீனவர்கள் மீது சிறீலங்கா மேற்கொள்ளும் தாக்குதல்கள் தற்போது ஆரம்பமானது அல்ல. இது பல வருடங்களாக இடம்பெற்று வரும் சம்பவமாகவே இருந்து வருகின்றது. இவ்வாறான தாக்குதல்கள் குறித்து, காலத்துக்குக் காலம் தமிழகத்தில் இருந்து கண்டனங்கள் எழுப்பப்பட்டன. ஆயினும் இவை ஒரு அரசியல் மயப்பட்டதான நடவடிக்கையாக முன் வைக்கப்படவில்லை. இடைக்கிடை 'கச்சைதீவை மீட்போம்', 'மீனவரைக் காப்போம்' என தமிழக அரசியல் தலைவர்கள் குரல்கள் கொடுத்திருப்பினும் அவை சோடாப் புட்டி காஸ் போல் சிறிது நேரத்தில் அடங்கிப் போனதாக, மறைந்து போனதாகவே இருந்துள்ளது.

இந்த நிலையில் தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் எச்சரிக்கையானது சிறீலங்கா அரசினாலோ அன்றி கடற்படையினாலோ அவ்வாறே நோக்கப்படும். இவ்வாறு அவர்கள் முடிவு எடுப்பதற்குக் காரணங்களும் இல்லாமல் இல்லை. ஏனெனில் தமிழக ஆட்சியாளரினால் நேரடியாக ஆபத்தான விளைவுகளை விளைவிக்கக்கூடிய ஆற்றல் இல்லை என்பது சிறீலங்காவுக்குத் தெரியும். அவ்வாறான ஆபத்துக்களை இந்திய மத்திய அரசினாலேயே செய்யமுடியும். ஆனால் தமிழக மீனவர்களுக்காக இவ்வாறான கடும் நடவடிக்கை ஒன்றை இந்திய மத்திய அரசு மேற்கொள்ளாது இருப்பதும் இதற்காக மத்திய அரசுடன் தமிழக அரசு பெரியளவில் இடைஞ்சல் ஏற்படுத்தமாட்டாது என்பதும் சிறீலங்காவுக்கு நன்கு தெரியும். இதனை சிறீலங்கா அரசு புரிந்துகொள்ள இலங்கைத் தமிழர் விவகாரமே போதுமானதாகும். அதாவது பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழரைக் கொன்று குவித்துள்ள போதும், பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமதியான அவர்களின் சொத்துக்களை அழித்து நாசப்படுத்திய போதும் அதற்கு எதிராக இன உணர்வுடன் கிளர்ந்தெழாத தமிழக அரசியல்வாதிகள் பின்னர் எவ்வாறு சில மீனவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்காக இன உணர்வுடன் கிளர்ந்தெழுவார்கள் என்று சிறீலங்கா எதிர்பார்க்கும்.



அவ்வாறு கிளர்ந்தெழுவார்கள் என்று தெரிந்திருந்தால், சிறீலங்கா அரசு தமிழக மீனவர்கள் மட்டுமல்ல இலங்கைத் தமிழர்கள் மீதும் கைவைக்க ஒருபோதும் துணிந்திருக்கமாட்டாது. தமிழகம் சிறீலங்காவை விட பல விதத்தில் பெரியதும் பலம் வாய்ந்ததுமாகும். அத்தோடு அது அங்கம் வகிக்கும் இந்திய அரசும் பலம் பொருந்தியது ஆகும். அவ்வாறு இருந்தும் சிறீலங்கா பொருட்படுத்தாது இருப்பது ஏன்? தொடர்ச்சியாகத் தமிழர்களைத் தாக்குவதற்கு அவர்களுக்கு துணிவு எங்கிருந்து வந்தது? இவற்றிற்கான ஒரே பதில், தமிழர் என்றால் சிறுபான்மையினர் என்ற ரீதியில் சிங்கள ஆட்சியாளர் மத்தியில் வளர்ந்துவிட்ட உணர்வும், தமிழர்கள் குடியில் அதிகாரத்துக்காக தமது இனத்தைக்காட்டிக்கொடுக்கக் கூடியவர்கள் உள்ளார்கள் என்று இலங்கையில் பெற்றுக்கொண்ட அனுபவமுமே. அதாவது சிறீலங்காவிலும் சரி இந்தியாவிலும் சரி தமிழர்கள் சிறுபான்மையினராகவே உள்ளனர். அவர்களுக்கென ஒரு சுதந்திர அரசு கிடையாது என்பதும் இவர்கள் சிறுபான்மையினமாக உள்ள இடங்களிலும் தமது அதிகார அபிலாசைகளுக்காக தமது இனத்தைக் காட்டிக் கொடுக்கவும் பணயம் வைக்கவும் தயங்காதவர்கள் அவர்கள் இனத்தில் உள்ளனர் என்ற நம்பிக்கையே ஆகும். இந்த ரீதியில் சிறீலங்கா அரசைப் பொறுத்து தமிழக முதல்வர் கருணாநிதி எச்சரிக்கையைச் செயல்வடிவில் காட்டினாலே தவிர அவரின் எச்சரிக்கையை சிறீலங்கா அரசு கருத்தில் கொள்ளப் போவது இல்லை என்பதே உண்மையாகும்.

– நன்றி: ஈழநாதம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மகளிர் படையணி ஒரு புதிய வரலாறு

**1994 செப்டெம்பர் 19 ஆம் நாள் 11.45 மணியை தாண்டிக் கொண்டிருந்தது. அந்த இரவு, அந்த நடுச் சாமத்தில் தான் பூகம்பம் போன்ற வெடியதிர்வுகள் கடலைப்பிளந்தன. இதன் தாக்கங்கள் மேற்கு கடற்பிராந்திய கடற்பரப்பை மட்டுமன்றி, இந்து சமுத்திரம் முழுவதையுமே அதிரவைத்துக் கொண்டிருந்தது.**

சர்வதேச கடற்பரப்பில் எவரும், எந்நேரமும் சஞ்சரிக்கலாம்; இது உலகின் நியதி. இப்படி இருப்பது தெரிந்தும் மீறிக் கொண்டது இந்திய அரசு.

ஆம், 17.11.1991–இல் புலிகளின் 'டொங்கோவா' என்ற கப்பலையும், 13.01.1993 அன்று எம். வி. அகத் என்ற இன்னொரு கப்பலையும், ஏப்பமிட்டிருந்தது அந்த அந்நிய வல்லாதிக்கம்.


தமிழீழத்திற்கு, பாரத தேசம் தந்த துரோகச் சின்னங்கள் இவை!

அப்படியென்றால் அயலில் சிங்கள தேசம் வழங்கிய பரிசுகள் எவை?

போர் நிறுத்தம்! எதிரும்புதிருமாக மோதிக் கொள்ளும் இருபடைகளிடம் ஏற்படும் ஓர் சமாதான உடன்பாடு, இலங்கையைப் பொறுத்தமட்டில் இது இசை இல்லாத பாடல், சிலம்பில்லாத ஆடல், இதை உணர்த்தவே இந்தச் சாடல்.

1987 ஒக்டோபர் 3–ஆம் நாள், இரு மூத்த தளபதிகள் உட்பட பதினேழு புலிவீரர்களை ஏந்திச் சென்ற 'கடற்புறா' இன்னும் தான் துறைமுகம் திரும்பவில்லை!

புயலடிக்கவில்லை! பூகம்பம் எழவில்லை! கடலில் மூழ்குவதற்கு. அடுத்தவன் கடலில் செல்லவில்லை, கள்ளத் தோணி என்று பிடிப்பதற்கு. அப்படி என்றால் அமைதிப்பூங்காற்று வீசும் போதுதான் சென்றார்கள்; அதுவும் எங்களின் சொந்தக்கடலில் 'அன்னை பூரணி' என்ற மரக்கப்பல், அமெரிக்கா செல்வதற்கு பாய்விரித்த வல்வைக்கடலில், போரென சூளுரைப்பவர்கள் சூடைகளையும், சுறாக்களையும் பிடிப்பதுபோல் அப்பாவி மீனவர்களை, அகதிகளாகச் சென்ற பலதரப்பினரையுமல்லவா பிடித்துச் சென்றார்கள்! கொன்றார்கள்! இப்படி எத்தனையோ புறாக்கள் துடிதுடிக்க, பதைபதைக்க



கடல் உரசும்
பனை நிறைந்த
வெளிகளில்
சிறை தகர்த்த
ஞானச் செருக்குடன்
பெண்கள் புறப்பட்டனர்

சுமார் 23000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட, தமிழீழ தேசத்துக்குரிய கடலெங்கும் கனே பரம் புரிந்தார்கள்; மகிழ்ந்தார்கள் அந்த 'லங்காபுரி'யினர்.

இது நேற்றுவரை எமது வரலாற்றில் நிகழந்த சாபக்கேடுகள்.

ஆனால், இனிமேல் இப்படி – இவ்விரு அராஜக ராஜாங்களின் புதல்வர்கள் இரத்தம் சிந்தி, உடல்சிதைந்து கடற்போர் கலன்களை இழந்தும் தங்களது கடலாதிக்கத்தை எங்கள் கடல் மீது நிலை நாட்ட முடியுமா?

இதை நாம் கூறவில்லை என்றாலும் அல்லிராணி கோட்டையை அண்டிய அந்தக் கடலில், தமிழன் ராணிகள் நடாத்திய வெடிமுழக்கங்கள் கூறியிருக்கும் இந்த ஒளிப்பிளம்புகள் இவர்களைத் தேடித் தேடி, கோடி கோடியான சித்திரவதைக்குள்ளாக்கியிருக்கும். இதைப்போன்ற அதிர்வொலிகள் இனி, தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று எதிரிகளுக்கு எடுத்துரைத்த அந்தப் பெருந்தாக்குதல் தமிழீழப் பெண்மையின் தீரமிகு வீரத்தையும் மதிப்பிலடங்காத ஈகத்தையும் கட்டுக்கடங்காத காவியமாக, ஊரறிய உலகறிய என்பதை விட மானுடம் வாழும் இடமெங்கும் அறிய, மூடு மறைவின்றி – முத்திரையிட்ட முகத்திரையை விலக்கி – முகவரியையும் காட்டி நிற்கின்றது.

இவை இன்றும் எமது வரலாற்றில் வரையப்பட்டுக் கொண்டிருக்கின்ற வீரகாவியங்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சமீபகாலங்களில், பெண்போராளிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் யாவற்றிற்கும் மேலாக விளங்கும் அந்த மன்னார்க் கடற்கள நிகழ்வு, மகளிர் அணி தரைச் சமர்களைப் போல் கடற்சமர்களிலும் முன்னணிப் படையணியாகத் திகழ வேண்டும் என்ற முழு நோக்கோடு குறுகிய காலத்திற்குள், தம்மை எவ்வளவு வேகமாகவும் உறுதி குலையாமலும் துணிவைக் காட்டி வளர்த்துள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றது.

இவர்களுடைய இந்த வேகமான வளர்ச்சியூடாக, தமிழீழ விடுதலைப் போராட்டம் மேலும் மேலும் வலுப்பெற்று வருகின்றது. இதையிட்டு நாம் பெருமை கொள்ளும் இதேவேளை, கடலிலும் கடல்சார்ந்த நடவடிக்கைகளிலும் மகளிர் அணியினரின் கள நிகழ்வுகள், எப்போது? எப்படி? எங்கே ஆரம்பமாகி படிப்படியாக வளர்ந்து, இப்போது எந்தளவு வளர்ச்சி நிலையில் உள்ளது என்பதுடன், இவற்றிற்கு முந்திய இவர்களது ஆரம்ப நடவடிக்கைகள் சிலவற்றுடன் இவ்வாக்கம் மேலும் தொடர்கின்றது.


*1985*–இன் மார்ச் பதினோராவது நாளில் திண்டுக்கல் சிறுமலைப் பகுதி இங்கே தான் அந்தப் பயிற்சிப் பாசறை பயிற்றுனர் மேஜர் செல்வராஜா அண்ணர் பயிற்சி வழங்க, தொண்ணூறு பேர் கொண்ட மகளிர் அணி, தனது முதலாவது இராணுவப் போர்ப் பயிற்சியை ஆரம்பித்துக் கொண்டது.

தங்களை நினைத்துத் தாங்களே வியக்கும், அளவிற்கு அன்றைய கடினமான பயிற்சிக்கும் இலட்சிய நோக்கில் குறிதவறிடாத அளவுக்கும் லெப். கேணல் பொன்னம்மான் வழிகாட்டிக் கொண்டிருந்தார்.

*1981* அம் ஆண்டில் ஓர் நாள் எமது தேசியத் தலைவரின் நினைவினில் உருவாகிய கரு இப்போது குழந்தை வடிவமெடுத்துத் தவழத் தொடங்கியது; தமிழ்த் தாயின் உள்ளம் பூரிப்படைந்தது.

எந்த நோக்கோடு பயிற்சிப் பாசறை தேடி கடல் கடந்து சென்றார்களோ அந்த நோக்கை நிறைவேற்ற, ஒருவருட பயிற்சியின் பின் படையணிக்குரிய வேங்கைகளாக சென்ற கடல் தாண்டி சொந்த நாடு வந்தார்கள்.

*1986*–ஆம் ஆண்டு யூலைமாத இறுதியில் ஓர்நாள் மன்னார் – வங்காலையில் இந்த வேங்கைகள் முதல் காலடி பதிக்க, அரச பயங்கரவாதம் மூச்சடங்கியது; ஆணாதிக்கம் பேச்சிழந்தது. தமிழன்னையின் மடியினில், ஊமையாய் உணர்விழந்து கிடந்த மற்றொரு கரமும் உரிமைப் பேச்சோடு சுதந்திரப் பூக்களை முகர்ந்திட ஆசை கொண்டது.



கடல் அவர்களுக்கு விளையாட்டுத் திடல் காலம் அவர்களிடம் வழி கேட்கிறது!

*1986* ஒக்ரோபர் *12*–ஆவது நாளில் அந்தச் சமர், சுற்றிவளைக்கப்பட்டிருந்த சிறுத்தைகளின் சீற்றம். சிங்களச் சேனைகளைச் சிதறிக் கொள்ளச் செய்தது. எமது தேசத்தின் வரலாறுகளில் ஒன்றாக அந்தச் சமர் பதியப்பட்டுக் கொண்டிருந்தது.

பதினாறு சிங்களச் சிப்பாய்கள் உயிரற்று விழ, உயிரை விட விரும்பாத இரு சிப்பாய்கள் சிறைபிடிக்கப்பட, இவ்விழப்பிற்கேற்ப ஆயுதங்களும் புலிகளின் கைகளிற்கு மாறிக்கொண்டன.



முள்ளுக் கம்பிகள் போன்ற சுற்றிப் பிணைத்த நச்சுக் கொடிகளில் நலிந்தது போதும் என உச்சத்தைத் தொடுகின்ற உன்னத பயிற்சியில்

இதன் பலாபலன், *1986*–ஆம் ஆண்டு ஒக்டோபர் *14* மாலை *6* மணியளவில் ஒன்பது இராணுவத்தினரின் உடல்களும் யாழ். காவல்நிலைய வாசலில் வைத்து கோட்டை இராணுவத்திடம் நேரடியாகப் புலிகளினால் கையளிக்கப்பட்டதோடு, *1986* ஒக்டோபர் *21*–ஆம் திகதி காலை எட்டு மணியளவில், யாழ்நகரில் கேணல் கிட்டுமாமாவும், இலங்கை மக்கள் கட்சிப் பொதுச்செயலாளர் விஜயகுமாரதுங்காவும் (தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர்) கைகுலுக்கிக் கொண்டனர். இதையடுத்து சிலமாதங்களில் இலங்கை வரலாற்றில் முதலாவது கைதிகள் பரிமாற்றமும் நடைபெற்றது.

அன்று சிறிலங்காவிற்கு இராணுவ, அரசியல் ரீதியாக பெரியளவில் தோல்விகளையும் நெருக்கடிகளையும் தேடிக் கொடுத்து, புலிகளின் இராணுவ – அரசியல் நோக்கங்களை உலகுணர வழிகோலிய அந்த வெற்றித் தேடலில் தான் முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதி விக்ரர் தலைமையில், கப்டன் நரேன் வழிநடத்தலில், பதினைந்து பேர் கொண்ட மகளிர் குழு, முதல்முறையாக எதிரிப்படைகளோடு நேரிடையாகப் போரிட்டுக் கொண்டது. தென்றல் தவழ, சாமரம் வீசும்நெல்மணிக் கதிர்களால் எழில் பூத்த அந்த அடம்பன் கிராமம் இவர்களது முதற்சாதனைக்கு வாழ்த்துச் சொல்லிச் சான்றாக விளங்கிட ஆரம்ப களத்தில் வீரத்தழும்பேற்றுத் தங்ககம் திரும்பினாள் மேஜர் தாரணி.

மேற்குறிப்பிட்ட தாக்குதல் போன்று அன்றைய நாட்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்ற குறிப்பிடக்கூடிய தாக்குதல்களில் மகளிர் குழு உதிரிகளாகச் செயற்பட்டு ஈட்டிய

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சாதனைகள், அன்று சுட்டிக்காட்டக் கூடியதாக இருந்தும், சூழ்நிலை காரணமாகவோ துரதிஷ்ட வசமாகவோ இவர்களுடைய வெற்றித் தடயங்கள் இலைமறை காய் போல் திகழந்ததே தவிர வெளியுணர்த்தப்படவில்லை என்றே கூற வேண்டும்.

1990 யூன்மாதம் 10–நாளில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் மண்ணில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாங் கட்ட போருடன் உதிரிக்குழுக்கள் ஒன்றிணைந்து, பெரும் படையணிகளாகக் களம் புகுந்தனர். எள்ளிநகையாடியவர்கள் தலைகுனிய எதிரிப் படைகள் புறமுதுகிட ஊர் உலகம் விழிகளை அகலத்திறந்தும் வியர்த்தும் விக்கித்தும் நிற்க இவர்களது வீரமும் தியாகமும் எல்லைகள் மீறின. பக்கத்து நாட்டில் மனிதக் குண்டுகள் வெடித்தாலும் பெண்போராளிகள் மீது சர்வதேசமே சந்தேகம் கொள்ளுமளவிற்கு இன்று இவர்களது ஈகம் இணையற்று நிற்கின்றது.

பார்போற்றும் இந்தப் புகழோடு தான் மகளிர் அணி, சரித்திரம் என்றொரு சித்திரம் வரைய சமுத்திரம் மீதும் எதிரிப்படைகளைத் தேடி உலாவரத் தொடங்கியது.

கடல்!

மூன்றெழுத்துக்குள் அடங்கும் ஒரு சொல்.

ஆனால், இதை முழுமையாக அறிய மூன்று தலைமுறைகளாலும் முடியுமா என்பது சந்தேகம்! இப்படிப்பட்ட கடலில் தான் அன்றொரு மாலை 7.20 மணி முதல் 11.30 மணி வரை நீச்சல் தெரியாது உவர்நீரின் தன்மை புரியாது அந்தப் பத்துப் பெண் புலிகளும், கையில் கிடைத்த மிதவைகளுடன் உயிருக்காகப் போராடினார்கள் என்பதை விட, மகளிர் அணியின் ஆரம்ப வளர்ச்சிக்காக போராடினார்கள் என்றே கூறிட வேண்டும்.

1986–ஆம் ஆண்டு ஒகஸ்ட் நடுப்பகுதியில், தமிழ்நாட்டில் இருந்து பத்துப் பெண்புலிகளுடன் வந்த படகு, ஓட்டுனரின் அவதானமின்மையால் வங்காலையில் இருந்து இரண்டு கடல் மைல் தூரத்தில் கவிழ்ந்து விடுகின்றது. இச் சம்பவத்தின் தான் மேற்குறிப்பிட்டவர்களுக்கு அந்த நிலை ஏற்பட்டது. இதே பெண்புலிகளால் தான் இன்று அதே வங்காலையில் இருந்து எட்டு கடல்மைல் தொலைவில், சிறிலங்காவின் பலம்மிக்க போர்க் கப்பல்களில் ஒன்று உருக்குலைந்து பரிதாப நிலையோடு மூழ்கிட, பல வருட கடலனுபவத்தில் முதிர்ந்த சிங்களக் கடற்படை அதிகாரிகள் உயிருக்காகத் தத்தளித்தனர்.

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பதைவிட, பேரலைகளைக் கண்டு பெரும்படைகளும் அஞ்சுவதுண்டு என்ற வரிகளுக்கு வலிமை அதிகம். ஏனெனில் நஞ்சுகொட்டும் நாகத்தை விட ஆர்ப்பரிக்கும் ஆழியின் அலைகள் புரியும் அடாவடித்தனம் மிகக்கொடியது. கொடியது எதுவோ அதை எதிர்கொண்டு ஒடித்து விடுவது தான் புலிகளின் மரபு; இதற்கு மகளிர் அணியும் விதிவிலக்காகி விட முடியுமா?

**பூக்களைத் தீப்பொறிகளாக்கிய தலைவனின் வழித் தடத்தில் பதியும் புயல்களின் சுவடுகள்**

1992 மார்ச் ஓராவது நாளில் கரும்புலி லெப். கேணல் நளாயினியின் பொறுப்பில், முப்பது பேர்கொண்ட சிறு அணி ஒன்று கடற்புலிகளாகியது. பாலைவனம் போன்ற அப்பகுதியை அண்டிய வெண்மணல் தரையும் கருநீலக் கடலும் இவர்களுக்குப் பயிற்சிக் களமாகியது. இவர்களால் இது முடியுமா? வினா எழுப்பியவர்களின் விழிகளை இமைகள் மூடிட முன்பே புரட்சியில் நனைந்தவர்கள் பயிற்சியிலும் புதுமைகள் புரிந்தனர்.

1993 யூலை 19– ஆம் நாள் மாலை கடற்தாக்குதலுக்காக மகளிர் அணி களமிறங்கிய முதல் நாள் லெப்ரினன்ட் கேணல் பாமாவின் கட்டளையில் நாலு பேர் கொண்ட குழு கனரக ஆயுதம் பூட்டிய வேகப்படகொன்றில், மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டது. ஏரிக்கடல் மீது எதிரிகளின் உடல்கள் விழ நீரூந்துப் படகுகள் ஓடித்தப்ப முயன்றும் இறுதியில் மாட்டிக் கொண்டன.

1994–ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15–ம் திகதி நள்ளிரவுக்குப் பின் நேரம் 12.35 மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. பதினாறுக்கு மேற்பட்ட 'தேடொளிகள்' சுமார் நாலு சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட அந்தக் கடற்படைத்தளத்தைச் சல்லடை போட்டுக் கொண்டிருந்தன.

இவ்வேளையில்தான், பெண் கடற்கரும்புலியின் முதலாவது அத்தியாயம் ஆரம்பமானது. ஐயாயிரம் தொன் எடை கொண்ட கண்காணிப்புக் கப்பல், இருபத்தைந்து அடி முதல் நாற்பது அடி வரை ஆழமான நீரில் அமிழத் தொடங்கியது.

கடற்சிங்கங்களிற்கு அது மையப் பகுதியாம். இருந்தாலென்ன? வையகத்தில் எங்குதான் எதிரிகள் இருப்பினும் அங்கே இது நிகழும். உயிரைக் கொன்று, உரிமையை அழிக்க நினைத்தவர்களின் எண்ணங்களுக்கு, எண்ணெய்யூற்றித் தீ மூட்டினாள் ஒரு கண்ணகி – அவள் தான் கடற்கரும்புலி அங்கயற்கண்ணி.

1994 செப்டம்பர் 19–ஆம் நாள் நேரம் 11.45 மணி முத்துக்கள் விளையும் மன்னாரின் நீலக்கடல் செங்கடலாகியது.

அலைகளின் அசைவுகள் கூட உணர்விழந்து விட அங்கே அதிரும் வெடிகளின் ஓசைகள் மட்டும் மனிதர்களின் உணர்வலைகளைத் தட்டிஎழுப்பிக்கொண்டிருந்தன. இது பெண் கடற்கரும்புலிகளின் மற்றொரு அரங்கேற்றம். கடலரசனின் கதை முடிந்து விட. நளாயினி, மங்கை சகோதரர்களின் பெயர்கள் நாவினில் தவழந்து விளையாடின.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியான இன்று, ஆழ்கடலின் ஆழத்தையும் வான்வெளியின் நீளத்தையும் கணித்துக் கூறும் இந்த விஞ்ஞான உலகம் மேற்குறிப்பிட்டவர்களின் கள நிகழ்வுகளை கணிப்பீடு செய்ய, ஒரு ஆராய்ச்சிக் கருவியைக் கண்டு பிடித்தாலும் இவர்களது வேகம், வீரம், தியாகம்யாவும் அக்கருவிக்குள் அடங்குமா என்பதே இன்றைய வினாவாகும்!

1986–ஆம் ஆண்டிற்கும், 1994–ஆம் ஆண்டிற்கும் எட்டு ஆண்டுகளில், மகளிர் அணியினரின் வளர்ச்சிகள் ஒவ்வொன்றையும் ஒப்பிடும் போது, கடந்த மூன்று ஆண்டுகளில் கடல் நடவடிக்கையில் இவர்களது வளர்ச்சி, அளவுகோலுக்குள் அடக்கிவிட முடியாது என்பதை இவர்களது இன்றைய சாதனைகளும் சரித்திர நிகழ்வுகளும் உணர்த்தி நிற்கின்றன.

நேற்று!

அலைகளைக் கண்டு அஞ்சியிருக்கலாம்;

தென்றல் தொட துவண்டிருக்கலாம்

இன்று!

இவர்களைக் கண்டு கடலே அஞ்சுகின்றது.

புயலோ வீச மறுக்கின்றது.

நாளை.....?

தம்பி

கடற்புலிகள்

★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ரூபசிங்காவின் எச்சரிக்கை

"இராணுவ அணுகுமுறை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. பல நாடுகளில் அரசியல் உடன்பாடுகள் ஊடாகவே தீர்வு காணப்பட்டுள்ளன. செச்சினியாவில் நடந்தது இதற்கு உதாரணமாகும்." இவ்வாறு சிறீலங்கா அரசுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார் சர்வதேச அலேர்ட் நிறுவனத்தின் செயலாளர் குமார் ரூபசிங்கா. அண்மைக்காலத்தில் தேசிய இனங்களின் போராட்ட வரலாற்றில் செச்சினியாவில் ரஷ்ஷிய இராணுவம் தோற்றமை இறுதியாக நடந்த நிகழ்வாகும். செச்சினியத் தலைநகரான குரோஸ்னியின் மீது போராளிகள் தாக்குதல் நடத்திய போது அங்கு நிலைகொண்ட ரஷ்ய இராணுவத்தினால் அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. நூற்றுக்கணக்கான துருப்பினர் கொல்லப்பட்ட அதே வேளை டாங்கிகள் உட்பட கனரக ஆயுதங்கள் பலவற்றையும் அவர்கள் போராளிகளிடம் பறி கொடுத்தனர். ஒரு தொகுதி உறுப்பினர் ஆயுதத் தளபாடங்களுடன் சரணடைந்தனர். இவ்வாறானதொரு அவமானகரமான தோல்வியை அண்மையில் ரஷ்ய இராணுவம் அடையவில்லை. ஆப்கானிஸ்தானிலிருந்தும் ரஷ்ய இராணுவம் தோல்வியுடனேயே வெளியேறியதாயினும் தனக்கு அனுசரணையான அரசை சிறிது காலத்திற்காயினும் ஆட்சியில் அமர்த்திவிட்டு வெளியேற முடிந்தது. ஆனால் செச்சினியாவின் நிலைமையானது வேறுவிதமானது. ரஷ்ய இராணுவம் செச்சினிய தலைநகர் குரோஷ்னியில் தோற்கடிக்கப்பட்டது என்பது நேரடியான நிகழ்வாக இருந்தது. அவ்வாறானால் ரஷ்ய இராணுவத் தோல்வியானது எவ்வாறு ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? செச்சினியப் போராளிகளை விட ரஷ்ய இராணுவத்தினர் எந்த வகையில் குறைந்தவர்களாக இருந்தனர்? ரஷ்ய இராணுவத்தினரிடம் நவீன போர்த் தளபாடங்கள் இல்லையா? அன்றி ரஷ்ய இராணுவத்திற்கு ஆள்



பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதா? அல்லது இராணுவத்திடம் அறிவு, ஆற்றல், அனுபவம் இல்லையா? எது இல்லை?

இவையெல்லாம் செச்சினிப் போராளிகளிடம் உள்ளதைவிடப் பலமடங்கு அதிகமாகவே ரஷ்ய இராணுவத்திடம் இருந்தது. அவ்வாறு இருந்தும் ரஷ்ய இராணுவம் தோற்றது. இதற்குக் காரணம் செச்சினியப் போராட்டத்தில் இருந்த நியாயப்பாடும் போராளிகளிடம் இருந்த மனோபலமும் ஆகும். இந்த வகையில் செச்சினியப் போராளிகளுக்கு கிடைத்த இந்த வெற்றியானது எந்தப் பெரிய இராணுவத்தினாலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிட முடியாது என்பதற்கு இறுதியாக நிகழ்ந்த உதாரணமாகும். இதனையே இன்று சர்வதேச அலேர்ட் நிறுவனத்தின் செயலாளர் சிறீலங்கா அரசுக்குச் சுட்டிக் காட்டி எச்சரித்துள்ளார்.

இராணுவத் தீர்வில் அவமானகரமான தோல்வி ஒன்றைச் சந்திக்க வேண்டி வரும் என சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் 'கெடுகுடி சொல் கேளாது' என்பது போன்று இந்த எச்சரிக்கையையும் சந்திரிகா அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளாது போகலாம். ஆனால் குமார் ரூபசிங்காவின் இந்த எச்சரிக்கையானது முற்றிலும் ஏற்புடையதொன்றே. செச்சினியப் போராட்டத்திற்கு முன்பு உலகில் இன விடுதலைப் போராட்டங்கள் இராணுவ ரீதியில் ஒடுக்க முற்பட்டு பலர் தோல்வி கண்டுள்ளார்கள். ஆனால் இறுதியாக உலக வல்லரசு இராணுவம் ஒன்று இவ்வாறு தோல்வி கண்டது முக்கியமானதொன்றாகும்.

மேலும் விடுதலைப் போராட்டத்தில் புலிகள் கொண்டுள்ள பற்றும், உறுதியும் உலகம் அறிந்தவையாகும். புலிகளின் மனோபலத்தை எந்த சக்தியாலும் முறித்துவிடமுடியாது என்பதும் ஏற்கனவே பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. இந்நிலையிலும் குமார் ரூபசிங்கா கூறுவது போன்று அரசியல் தீர்வு ஒன்று காணப்படாதுவிட்டால் செச்சினியாவில் ரஷ்ய இராணுவத்திற்கு ஏற்பட்டது போல் சிறீலங்கா இராணுவத்திற்கு தமிழர் தாயகத்தில் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது இருக்கும். இதனைச் சந்திரிகா அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது காலம் தாழ்த்தும் ஒவ்வொரு நாளும் அதி நெருக்கடியை அதிகரித்துச் செல்வதாகவே இருக்கும்.

---

எமக்கு முன்னைய சந்ததிகளுக்கும், எமக்குப் பின்னைய சந்ததிகளுக்கும் கிடைக்காத – கிடையாத ஒரு மிகப் பெரும் பாக்கியம் எமக்குக் கிடைத்திருக்கின்றது. எமது மக்களின் வாழ்வியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் எமது இனத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும், தமிழனுக்கு என்றொரு தனியரசை நிறுவும் பெறுதற்கரிய ஒரு பெரும் பேறு எமது சந்ததிக்குக் கிடைத்துள்ளது. நாங்களே எம் தேசத்தின் பலம். நாங்களே எம் இனத்தின் மீட்சி. நாளைய சந்ததி எம் பெயர்களை உரத்துக் கூவும். நாம் முன்னேறுவோம்... களையாமல், சளையாமல் முன்னேறுவோம்... எங்களுக்காக, எம் பெற்றோர்களுக்காக... எம் உற்றார்களுக்காக எம் கிராமங்களுக்காக, எம் தாயகத்திற்காக நாங்கள் இறுதி வரை முன்னேறுவோம்... 'தமிழீழம் வெறும் கனவல்ல! புயல் கிளம்பும்! வாயு சுழன்றடிக்கும்! கடல் பொங்கும்! அலை ஆர்ப்பரிக்கும்! நிலம் நடுங்கும்! பூமி பிளக்கும்! பிரபாகரனின் படைவீரர்கள் அடி எடுத்து வைக்கும்போது அட்டதிக்கும் அதிரும்! தமிழனின் சுதந்திர வேட்கையின் சுவாலைக்குள் சிங்களம் கருகும்! எங்களின் தாயகம் தனியரசாகும்! 'தமிழீழம், கனவல்ல அது நாளைய நாடு!

(நன்றி: போர்க்களம்)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புலிகளைத் தடுக்க முடியுமா?

"விடுதலைப் புலிகளின் மனித அலைத் தாக்குதல் தந்திரோபாயத்திற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் பல பகுதிகளிலுள்ள பெரும் முகாம்களும் ஆபத்துக்குள்ளாகலாம். யாழ்ப்பாணத்தில் உள்ள பல படை முகாம்களை மூடவும் நேரிடலாம்" என 'ஐலண்ட்' பத்திரிகை சிறீலங்கா அரசை எச்சரித்துள்ளது. 'ஐலண்ட்' பத்திரிகையின் எச்சரிக்கையானது விடுதலைப் புலிகள், ஆனையிறவு, பரந்தன் முகாம்களின் மீது அலை அலையாக வந்து தாக்கினார்கள் என இராணுவத் தரப்பு கூறியதற்குப் பதிலளிக்கையிலேயே எழுதப்பட்டது.

முல்லைத்தீவுப் படைத்தளத்தைப் புலிகள் தாக்கியபோதும் இராணுவத் தரப்பு 'மனித அலைத் தாக்குதல்' என்றே கூறியது. தற்போதும் அவவாறே கூறுகின்றது. இந்த அடிப்படையிலேயே 'ஐலண்ட்' பத்திரிகையின் எச்சரிக்கை வந்துள்ளது. ஆனால் இராணுவத் தரப்புக் கூறும் காரணம் தம் தோல்வியில் இருந்து தப்பிக்கொள்ளும் நடவடிக்கை என்றே கூறவேண்டும்.

ஏனெனில் மனித அலைத் தாக்குதல் என்பது உண்மையிலேயே நடத்தப்படுமானால் இராணுவத் தரப்பை விட புலிகளுக்கே பாரிய உயிர் இழப்பு ஏற்படும். அதாவது இராணுவ முகாம்கள் மீது தாக்கும்போது புலிகளின் இழப்பு இராணுவ இழப்பை விடப் பல மடங்கு இருக்கவேண்டும். சுடுகுழல்களால் கட்டுப்படுத்த முடியாத அளவில் மனித அலை எழும்போதே தாக்குதலில் இருந்து இராணுவம் பின் வாங்க வேண்டி வரும். ஆனால் புலிகளின் போர் யுக்தியானது அவ்வாறானதல்ல. புலிகள் வகுக்கும் தாக்குதல் யுக்தியானாலும் சரி தற்காப்பு யுக்தியானாலும்சரி இராணுவத்திற்கு பெரிய இழப்புக்களை ஏற்படுத்துவதாகவே இருந்தன. இதற்குப் பல்வேறு உதாரணங்கள் கூறமுடியும்.

ஆயினும் அண்மைக்காலத்தில் நடந்துள்ள முல்லைத்தளம் மீதான தாக்குதல், 'சத்ஜய' இரண்டாம் கட்டம், மூன்றாம் கட்டம் ஆகியவைக்கு எதிரான தாக்குதல், ஆனையிறவு, பரந்தன் மீதான தாக்குதல் என்பவை இதற்குச் சிறந்த உதாரணங்கள் ஆகும். ஒரு சில தாக்குதல்களில் புலிகளுக்கு இராணுவத்தை விட அதிகளவு இழப்புக்கள் ஏற்பட்டதானது மறுப்பதற்கில்லை. ஆனால், அவை தாக்குதல் திட்டத்தில் உள்ள தவறால் ஏற்பட்டவையல்ல. வேறு சில காரணிகளாலும், வழமைக்கு மாறான நிகழ்வுகளினாலும் ஏற்பட்டவையே ஆகும். இந்த நிலையில் வெறும் அலை அலையாகப் புலிகள் வந்து தாக்கினர் என இராணுவத் தரப்பினர் கூறிக்கொள்வது உண்மைக்கு மாறானது என்பது ஒருபுறம் இருக்க 'ஐலண்ட்' பத்திரிகை எச்சரிப்பதென்பது ஏதோ ஒரு வகையில் பொருத்தப்பாடானதுதான். ஏனெனில் அனேகமான முகாம்களைப் புலிகள் தாக்கியழித்துள்ளதோடு அதற்கு அஞ்சிப் படை முகாம்களை இராணுவமே மூடும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. சிறீலங்கா இராணுவ முகாம்கள் அழிக்கப்படுவது தற்போதுதான் என்பதல்ல. ஆனால் முன்னர் இருந்ததும் போன்றதல்ல.

ஆரம்பகாலத்தில் சில டசின் துருப்புக்களைக் கொண்டிருந்த முகாம்கள் தாக்கியழிக்கப்பட்டன. பின்னர் சில நூறு படையினரைக் கொண்டிருந்த முகாம்கள் தாக்கியழிக்கப்பட்டன. ஆனால், தற்போது சில ஆயிரம் துருப்புக்களைக் கொண்டிருந்த முகாம்கள் கூட தாக்கியழிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகையினால் வடக்கில் இராணுவம் நிலைகொள்வதானால் புதிய போர் யுக்திகளை இராணுவம் மேற்கொள்ள வேண்டும் என்ற 'ஐலண்ட்' பத்திரிகையின் எச்சரிக்கையானது சரியான ஒன்றே. ஆனால் இதனை சிறீலங்கா இராணுவத்தினால் மேற்கொள்ள முடியுமா? விடுதலைப் புலிகளினால் ஏற்படும் இராணுவ அழித்தல்களை தாங்கிக்கொண்டு நிலைத்து நிற்க முடியுமா என்பதே கேள்வியாகும்.

ஏனெனில் கடந்தகால அனுபவத்தின்படி புலிகளின் போர் யுக்திக்கு எதிராக இராணுவம் மேற்கொண்டுள்ள யுக்திகள் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன. இதனால் இராணுவத்திற்குப் புதிய போர் யுக்தி அவசியமாக உள்ளது எனப் பொதுவாக எழுந்துள்ள கருத்துக்களே தெளிவுபடுத்துபவையாக உள்ளன. இதற்கு தனியாக இராணுவ ரீதியில் புலிகள் பெற்றுள்ள ஆற்றல் மட்டுமல்ல விடுதலைப் புலிகள் தமது இலட்சியத்தில் கொண்டுள்ள பற்று அவர்களின் அர்ப்பணிப்பு அதன் தலைமைப்பீடத்தின் நேர்த்தியான திட்டமிடல் மற்றும் வழிகாட்டல் என்பவையும் காரணமாகும்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான புதிய போர் யுக்தியோ அன்றி போருபாயமோ இராணுவத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பையோ அன்றி இராணுவ ரீதியில் புலிகளை வெற்றிகொள்ளவோ உதவப் போவதில்லை. அதாவது இலட்சியப் பற்றுக் கொண்ட போராளிகளையும் ஆற்றல் மிக்க தலைமைத்துவத்தையும் கொண்ட ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பை இராணுவ ரீதியில் வெற்றிகொள்ளவோ மாறாக அதன் தாக்குதல்களில் இருந்து தற்பாதுகாத்துக்கொள்வதோ இலகுவான காரியம் அல்ல. இந்த நிலையில் 'ஐலண்ட்' பத்திரிகை கூறியுள்ளது போன்று புதிய போர் யுக்திகள் வகுக்கப்பட்டால் மட்டும் வடக்கில் உள்ள இராணுவ முகாம்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியாது. மாறாக வடக்கிலும் கிழக்கிலும் இருந்து ஒரு கட்டத்தில் இராணுவம் வெளியேற வேண்டி வருவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும்.

நன்றி: ஈழநாதம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ் மக்களின் அகதி வாழ்வு மனிதத்தை உலுக்குமா?



வாழ்நிலங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்ட பொழுது மக்கள் வெறுங்கையோடுதான் போனார்கள்.

வாழ்விடத்தை விட்டு இடம்பெயர்வது என்பது ஆத்மாவோடு கூடியதும் உயிர்ப்பிணைப்புமான உறவை அறுத்தெறிவதுமாகவே அமையும். இத்தகைய மானுட வாழ்வின் உயிர்மையத்தின் மீதே சந்திரிகா தனது ஆக்கிரமிப்பாளர்களை ஏவி விட்டார்.

வெறும் கட்டிடமும், கூரையும், மண்ணுமாகவே சந்திரிகா தமிழர் வாழ்நிலத்தை எண்ணி ஏறி மிதிக்கின்றார்.

இரத்தமும், சதையுமான உயிர்ப்பிணைப்பை எப்படி எப்போது இவர்கள் உணர்வார்களோ?

உலகில் நடந்த பல இடம்பெயர்வுகளோடு ஒப்பிடக்கூடிய ஒக்டோபர் 95 இடம்பெயர்வானது சிங்கள இனம் தமிழர் வாழ்வின் மீது ஏற்படுத்திய அனர்த்தங்களில், அவலங்களில் தலையாயதாக இருந்தது. அந்த மாபெரும் மனித அவலத்தின் போது மக்கள் பட்ட துயர்கள் ஏராளம்.

மனிதாபிமானம், இன ஒற்றுமை, சகோதரத்துவம் நிலவ அவரால் உழைக்க முடியாது. அவருக்கு அந்த தகுதி கிடையாது. என்பதற்கான சாட்சியங்களே அவை.

ஏன் சந்திரிகா தமிழர் மீது போர் வெறிகொண்டு செயற்பட்டு வருகின்றார்? ஏன் தமிழ் மக்களை நாடற்றவர்களாக்கி அலைய வைக்க வேண்டும் என்று முனைப்புக் கொண்டு நிற்கின்றார்?

தமிழ்த்தேசியத்தை அழித்தொழித்து, பலவீனமாக்கி அதனை அடிமை கொள்ள நினைக்கும் அவரது எண்ணமே அவரை இத்தனை தூரம் செயற்பட வைக்கின்றது.

சிங்கள பௌத்த பேரினவாதத்தினை முனைப்புற வைத்து அதனை நன்கு கூர்மையாக்கி அதனை தமிழ் மக்கள் மீது ஏவி விடுவதன் மூலமே ஆட்சியைத் தக்கவைக்க முடியும் என்ற எண்ணம் அவருக்கு ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை. சில வேளைகளில் அந்த பேரினவாதப் பூதமே அவருக்கு ஆபத்தானதாக மாறிவிடும் போக்கையும் மறுப்பதற்கில்லை.

'சந்திரிகா பாரிசில் படித்தவர் தான் ஆனால் அரசியல் தெரியாது' என்று சிறிலங்கா சென்ற வேகத்திலேயே திரும்பிய சிங்கள இளைஞன் கூறினான். அந்த இளைஞன் பட்டறிந்து கொள்வதற்கு சில வருட காலங்கள் தேவைப்பட்டிருந்ததைப் போல முழு சிங்கள மக்களுமே ஒரு பட்டறிவின் மூலமாக உணரத் தலைப்பட வேண்டிய தேவை இல்லை.

சந்திரிகா அரசால் ஏதிலிகளாக்கப்பட்ட மக்கள் வானமே கூரையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காடுகளுக்குள்ளும், மரங்களின் கீழும் படுத்துறங்கும் அவலவாழ்வை சந்திரிகா தமிழ் மக்களுக்கு பரிசாகத்தந்தார்.

எந்த ஒரு சிங்களத் தலைமைகளாலும் தமிழ் மக்களுக்கு தக்க ஒரு தீர்வை வழங்க முடியாது என்கின்ற பேருண்மையை தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டார்கள். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் உறுதியான தலைமையை மக்கள் ஏற்று அவரது காலத்திலேயே சுதந்திர தமிழீழத்தை நிர்மாணித்து விட வேண்டும் என்ற உறுதியின் வெளிப்பாட்டைக் காட்டுகின்ற உயரிய சித்திரம் இது.

மாட்டு வண்டில்களைக் குடில்களாக்கி மக்கள் வசித்து வருகின்றனர். விஞ்ஞானம், தொழில்நுட்பம், வர்த்தகம், போக்குவரத்து, தகவல் தொடர்பு வளர்ச்சி என பல்கிப் பெருகி உலகம் ஒரு கிராமம் ஆகிவிட்டது ,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வசதிகளும் வாய்ப்புக்களும் பெருகிய உலகில் எமது மக்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டனர்.

கடலில் தொழில் செய்யமுடியாது தடுக்கப்பட்டனர்; மண்ணில் விதைத்து, பயிரிட்டு வாழ முடியாது முடக்கப்பட்டனர்; எல்லா வழிகளையும் அடைத்து தெருக்களில் படுத்துறங்கும் நிலையை உருவாக்கி விட்டார் சந்திரிகா.

இத்தகையதொரு நிலை உலகத்தின் கண்களை ஒரு கணமேனும் கசிய வைக்காது போகாது.

நம்பிக்கை, திடம், இயல்பூக்கம், சந்தோஷம், கனவுகள், ஆசைகள், மகிழ்வுகளைக் கொன்று மக்களை காட்டுக்கு விரட்டி வீதிக்கு கொணர்ந்து வேடிக்கைபார்த்தார் சந்திரிகா.

ஆனால் எமது மக்கள் பன்மடங்கான உறுதியையும் மனோதிடத்தையும் அசையாத நம்பிக்கையையும் கொண்டு நிற்பதன் சாட்சியங்களாகவே இந்த தெருவோர வாழ்வு நிற்கிறது.

தாய் நிலமே வாழ்வின் நிலம்
தாய்நிலமே உயிரின் வேர்.

புலம் பெயர்ந்து பட்ட பல உள் வலி நிறைந்த பல அடிகள் இன்னும் சுமையாய் அழுத்த நலியும் இந்தவாழ்விலும் உன்னதமான உயிர்ப்பான வாழ்வுக்கான ஒரு தேடலில் எமது மக்கள் காட்டிய தீரத்தின் குறியீடு.



நாட்டை விட்டே விரட்டியடிக்கப்பட்ட போது, புலம்பெயர்ந்து அந்நிய நிலங்களில் எம் வாழ்வு வேர் விட அலைந்து தவிக்கையில், அவர்கள் உருளுகின்ற சக்கரத்தில் வாழ்வினை நகர்த்திக் கொண்டும் உறுதியான வேர்விடுகின்ற வீரம் துலங்குகின்றது.

*1983 களில் இருந்தே தமிழ் மக்கள் சிங்கள இராணுவ அனர்த்தங்களால் புலம்பெயரவும், இடம்பெயரவும் தொடங்கி இன்று வரை 4 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வீடு வாசல்களை இழந்து நிற்கின்றனர்.*

சிறிய வண்டிலில் செய்த கூடு எனினும் எதற்கும் என்றும் அசையாத அழியாத காதல் வாழ்வு இருக்கின்றது.

இந்தக் காதல் வாழ்வை இனவெறி சந்திரிகாவின் முப்படை அழித்துவிடத் துடிக்கின்றன.

ஆனால் தமிழீழ மக்கள் போற்றிப் புகழ்ந்து பொய்கேட்டோட மெய்மையின் பெருக்கை மேனிக்கே விளக்குவர்.

**- வாசன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பெருந் தீ!

- ச.ச.முத்து

'கிட்டு' என்றும்
'கிட்டர்' என்றும்
'கிட்டண்ணா' என்றும்
'கிட்டு மாமா' என்றும்
நெஞ்சகத்தின் ஆழத்திலிருந்து
எத்தனை விதமான அழைப்புக்கள்...!
எத்தனை எத்தனை உறவுகள்...!

எத்தனை அரவணைப்பு
எத்தனை ஆளுமை
சொல்லி எழுதிப்
புரியவைக்க முடியாப்
புயல் நீ.

உன்னை எண்ணி எவரும்
கண்ணில் நீர் வடிக்க முடியாது
ஏனெனில்

உன் வாழ்வும் மரணமும்
சோகமான சம்பவங்களல்ல
அவை மலையளவு உறுதிக்கும்
விண்ணளவு வீரத்துக்கும்
சொந்தமானவை.

அன்றொருநாள்,
மீசாலை வயற்காட்டில்
வீரச்சீலன் வீழ்ந்து மறுநாள்
பண்ணைக் கடலைப்
பார்த்தபடியே சொன்னாய்
'சீலனின் சாவுக்காக
அழுகை வரவில்லை.

ஆனால் இன்னும் இன்னும்
எதிரிமீது கோபமும்,
பழிதீர்த்து எரிக்க
வேணுமென்ற பலமும்
எழுகிறது" என்றாய்

உன் மரணமும்,
ஈழத்து மக்கள் மனங்களுடன் –
இப்படிப்
பெரு நெருப்பை மூட்டியது
உன்னைச் சமர்க்களத்தில்
சந்திக்கமுடியாப் பெரும்பூதம் – கொடும்
சதிக்களத்தில் இறங்கியது.
ஆனால்,
சதிகளுக்காக அழமுடியாது –
சதிகளைப் பழி தீர்க்க வேணும்
இதுவே ஈழத்து மாந்தரின்
மனங்களை ஆழத்தில்
இன்னும் உறுதியாக

சதிகளுக்காக அழமுடியாது
சதிகளைப் பழிதீர்க்க வேணும்

★★



# காலத்துக்குப் பெருமை

★★

கேணல் கிட்டு
காலநதியில் கரையாத
ஞானமலையே – ஈழத்தின்
காடுகள், தெருக்கள்
காணிகள் எங்கும்
கால்பதித்து நடந்த
வீர உருவே – நெஞ்சின்
நினைவுகள் தோறும்
ஆழப்பதிந்த
ஆதவப்புதல்வா,
அலைகடல் நடுவே நீ
ஆகுதியாகி ஆண்டுகள்
நான்கு அசைந்துவிட்டன
ஆண்டுகள் நகர நகர
நினைவுகள் கரைந்து,
தூரத்துக் கடலை மீது
மெல்லிய புள்ளியாய்
போய் மறையும் படகினைப்
போல் மறையும்
இதுதானே இயற்கை
ஆனால் நீ,

கும்பிட்டுத் தலைகுனிந்து
வாய்மூடி நின்ற மானுடத்தின்
தலைநிமிர,
தாயகத்தின் விலங்குதிர
வீரமுடன் போர்புரிந்தாய்

ஆதலால், உன் நினைவு
என்றென்றும் எழுந்து
எழுந்து அலைபாயும்.
நீ புயலைப் போல
சீற்றமானவன் – ஆனால்

ஒரு தென்றலைப் போலப்
புனிதமானவன்
உன்னை ஓயாத ஒரு புயல்
என்றும்

மெல்ல தவழ்ந்து வந்து
தலை தடவும் தென்றல்
என்றும்
எழுதமுடிந்தால் – அது
தமிழுக்குப்
பெருமை!

உன்னை ஈழத்தின்
தலைமகன் என்று
சொன்னால் – அது
உன்னை உருவாக்கிய
தலைவனுக்குப் பெருமை

இந்தக் காலத்துக்குப்
பெருமை எதுவெனில்
இதில் நீ கால் பதித்து
வாழ்ந்தாய் என்பதே!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காலையில் சூரியனை நோக்கி அம்மா கூப்பிய கரத்தோடு வணங்கியபடி எழுந்தாள். நீர்த்துவாலைகள் நிறைந்த தலைமுடியில் இருந்து நீர் துளித்துளியாய் சிந்த தலைமுடியைக் கோலி முடிந்தபடி மண்ணில் முட்டுக்காலிட்டு மண்ணை முத்தமிட்டு எழுகின்ற பெருவாழ்வை ஒருகணம் நினைந்தபடி எழுந்தாள். வீட்டுக்கூரையெல்லாம் சிதறுண்டு கற்குவியலுக்குள் அமிழ்ந்து கிடந்தது.

'குடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கவே நிற்கும் அன்னம்' அம்மாவின் புராணத்துக்கு பதில் சொல்லும் விதமாகப் அப்பா பாடுகிற கூத்துப்பாட்டு ஒன்றின் பாடலடியை நினைக்கச் சிரிப்பு வந்தது.

வேப்ப மரத்தில் செதுக்கியஅழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய கதவுகள் நிலை பெயர்ந்து கிடந்தன. அதில் ஒட்டியிருந்த மகாலட்சுமியின் படமும் சிதைந்து கற்குவியலுக்குள் அமிழ்ந்து போய்க் கிடந்தது.

அம்மா சீமெந்தைக் குழைத்து சுவர் வெடிப்புக்களை [illegible]

ஒருநாள் மாலையில் மீளவும் குண்டு வீச்சு விமானங்கள் கொட்டிய குண்டுகளின் அதிர்வில் வெடிப்புக்கள் அதிகமாகி இடிந்து வாழ்விற்கு உதவாத கட்டிடங்களாக போய்விட்டதன் பின்னாலே விழுந்த குண்டதிர்வில் தென்றலாய் நின்ற வீடு படுத்துவிட்டது. அதற்குள் கடைசித்தம்பியனின் புத்தகங்கள், அப்பாவின் திருவாசகம், பெரியபுராணம், இலக்கிய நூல்கள் என மறுநாளும் அதற்குப்பின்னும் இடைவிடாது பெய்த மழைக்குள் அகப்பட்டு இத்துப்போய்விட்டன. அந்தப் புத்தகங்களை தம்பி அடம்பிடித்து அழுது தான் வாங்கினான். தேங்காய் தோட்டத்தில் தென்னை மரங்களில் ஏறி அதன் மூலம் கிடைத்த தேங்காய்களை சந்தையில் விற்றுப் பெற்ற பணமே அந்த நூலை வாங்க உதவியது. அவன் கண்கள் கலங்கி அழுதான். அம்மா எத்தனையைப் பார்த்துப் பார்த்து கலங்குவது; எந்த நேரமும் ஈரம் காயாத விழிகளோடு. அம்மாவைப் பார்க்க மனிதம் மீதான உயிர்வாழ்தல் பற்றிய நம்பிக்கைகள் எனக்குள் நிறையவே கிளைக்கும். நூல்களில் பல அடிக்குறிப்புக்கள் அப்பா எழுதி வைத்திருந்தார். பெரிய புத்தகங்களுக்குள்தான் ஆபத்து அந்தரத்துக்கு என்று அப்பா ஒழித்து வைக்கின்ற சேமிப்புக்களும் இருந்தன. அதை அம்மாதான் எனக்கு ஒரு நாள் சொன்னாள். அவற்றை நாங்கள் தொடுவதேயில்லை. அப்பா நெருப்பு விழிகளோட சிவதாண்டவக் கோலம் பூண்டுவிடுவார். 'என்ர கல்யாணப்பட்டுச் சேலையும் ராசா அதற்குள் எரிஞ்சு போயிற்று' ஏதோ துர்ச்சகுனமாக எண்ணிச் சொன்னாள். வீடு குடிபுகலின் போதும், தான் பல துர்ச்சகுனங்களை சந்தித்தாகச்சொன்னாள்.

# எங்கட வானமும் கட்டாக்காலி எருமைகளும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஊரே கூடி அழுதது; விமானக் குண்டு வீச்சின் போது பறிகொடுத்த பிஞ்சுகளின் இறுதி ஊர்வலங்களில் மக்கள் கலந்து கொள்வதற்கான வேலைகள் நடந்து கொண்டிருந்தன. சின்னம் சிறிய பூக்கள். மண்ணில் ஓடித்திரியத் தொடங்கிய ஓரிரு வருட காலத்துள் அவர்கள் வாழ்க்கையை சிறிலங்காவின் விமானப் படை முடித்து வைத்து விட்டிருந்தது. இறுதி ஊர்வலத்தில் மக்கள் கவலை தோய்ந்த முகங்களோடு போய்க் கொண்டிருந்தார்கள். அப்போதும் வானம் அமைதியாகக் கிடக்கவில்லை; அச்சுறுத்தும் வண்ணமான சமிக்ஞைகள் வான் வெளியில் இருந்து எழுந்தன.



தெருநாய்கள் இவ்வளவு சீக்கிரமாய் மௌனமாய் வாய் அடைத்துக் கிடக்கும் என்றும் ஒரு போதும் நான் நம்பியிருக்கவில்லை. அவை கட்டுப்பாடில்லாதவை; ஒழுக்கம் குறைந்தவை என்று தான் நம்பியிருந்தேன். ஒரு குழிக்குள் பதுங்குவது அல்லது எங்காவது முடங்கிக் கிடப்பது என்கிறவிதமாய் அவை நின்று கொண்டிருந்தன.

முகில்கள் தவழுகின்ற வானம்; பெரிய வெளி; முடிவில்லாதது – கடல்; ஓய்வில்லாதது. மனிதர்களுக்கும் அவற்றுக்குமான உறவு அருமையானதாக வளர்ந்து கொண்டே போனது அந்த வெளியைப் போல. சின்னக் குழந்தையாய் இருக்கையில் வாய் நிறைய மண்ணை அள்ளித் தின்ற நாள் தொடங்கி வளர்ந்த உறவு விரிந்து கொண்டே போனது. விரிந்த வானத்தில் சூரியன் பல்லாயிரம் ஒளிக் குதிரைகளின் மீது ஏறி எப்படி கடலுக்குள் இருந்து வருவான் தெரியுமா? அப்போது அம்மா கூப்பிய கரத்தோடு எப்படி ஒளித் தரிசனத்துக்காக நிற்பாள் தெரியுமா? காதல் தான்; அது பேர்காதல் தான். பட்சிகளின் கூட்டம் காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாக போகின்றன. பின்னே பாட்டு என்னவாய் காதில் வந்து விழுகின்றது.

அயல் வீட்டாரின் பிள்ளைகள் எல்லோருமாக வீடுகள் கட்டி சோறு கறிகள் சமைத்து, தேர் இழுத்து தெரு வீதியால் வந்த போது அனேகமானோர் திக்கும் சிதறி ஓடினர். காலில் நல்ல காயம்; காய்ந்த கரடுமுரடான தரை சிராய்த்த காயத்துக்கு பச்சிலைகளைப் பிழிந்து கட்டுப்போட்டார்கள். மாலையில் அதன் ரணங்கள் ஆறும்வண்ணமாய் விண்ணில் பட்டம் ஏற்றுவதற்காக எல்லோரும் தயாராய் நின்றார்கள். பெரிய கொக்குப் பட்டம்; பல வர்ணங்கள் கொண்டு கட்டிய பட்டம், அருகே பெரிய வீட்டுப் பட்டம் பறந்து கொண்டிருந்தது. கொக்குப் பட்டம் விண்ணில் கூவத் தொடங்கியது; அது இரவு பூராகவும் தனிமையில் கிடந்து ஒரு வீணையைப் பழிக்கும் வண்ணமாக இசை கூட்டியபடி பறந்து கொண்டிருந்தது.



வெளி – வானம் இடையில் மனிதர்கள்... பூமியை அகழ்ந்தெடுத்துக் கொள்ள வேண்டி வந்தமை ஒரு காலத்தின் வரவாயிருக்கும் என்று ஒரு போதும் நினைக்கவில்லை; ஊழிக் காலம்.

அம்மா மண் வெட்டிகளைக் கொண்டு குழி எடுத்தாள். குழிஎடுக்கும் சத்தம் காதுகளை ரணப்படுத்தின. பெரிய குற்றிகளை உருட்டி வந்து குழியின் அருகில் சேர்ப்பதில் தம்பியனும் தங்கையும் கஸ்டப்பட்டார்கள். தம்பியன் அம்மாவின் சேலையால் நெற்றி வியர்வையை ஒற்றி எடுத்துக் கொண்டிருந்தான். அம்மா பூமியை அகழத் தொடங்கியது மண்புழுக்களை, உடும்புகளை ஞாபகப்படுத்தியது. குழிக்குள் விசிறியைப் பொருத்துவது; விளக்கை வைப்பது; போன்ற காரியங்களை தங்கச்சி ஓடி ஓடிச் செய்தாள்.

'ஒரு மேசை போட்டால் இருந்து படிக்கலாம்' என்றபடி கடைசித் தம்பியன் தங்கச்சியோடு அபிப்பிராயப்பட்டான்.

தங்கச்சி சம்மதிக்கவில்லை. அவனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவளே எதோ காரணங்கள் சொல்லி சமாளித்து விட்டாள். பின்னர் இருவருமாய் சிரித்துக் கொண்டு குழியைச் சுற்றிய வெளிப்பரப்பை நன்கு சுத்தம் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்பாவுக்கு மனதும் உடலும் சரியில்லை. இடிந்து கிடந்த வீட்டைப் போலவே அவரும் சில நாட்களாக காணப்பட்டார். வீட்டைச் சுற்றி வந்து யாரும் காணாமல் அழுது கொண்டார். அதுவே அவருக்கு வழமையாகி விட்டது. ஒரு குழந்தையைப் போல சிணுங்கிச் சிணுங்கி அழுவார். வயதானால் குழந்தைப் பருவம் மீளவும் வந்து விடுமோ என்கிற நினைப்புத் தான் எனக்கும் அப்பாவைப் பார்க்கையில் வரும். அப்பா எவ்வளவு கம்பீரமானவர். அந்தக் கம்பீரம் எப்படியோ உடைந்து போய் கிடந்தது. வாழ்க்கை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பற்றிய கனவுகளின் சிதைவோ அல்லது ஏதோ அவரை பிசாசு பிடித்தவரைப் போல் ஆட்டிப்படைத்தது. வானத்தை வெறித்தபடி இருப்பார். பாட்டுக் கட்டுவதும் நின்றுபோயிற்று. 'அப்பா ஒரு பாட்டுப் பாடுங்களன்' தங்கச்சியின் கெஞ்சல் கூட அப்பாவை உருக்கமுடியாத அளவுக்கு அப்பாவின் இதயம் நின்று போய்க்கிடந்தது.

அம்மா அப்பாவை பரிவோடு அழைத்தாள்.

'இஞ்ச வாங்கோவன்' எனக் குரல் கொடுத்தாள்.

'என்னப்பா' எனக் குரல் கொடுத்தபடி குழியின் அருகே அப்பா வந்திருந்தார்.

'வீடு தானே அப்பா கட்டிற்றாப் போயிற்று. நீங்கள் கவலைப்பட்டு உடைந்து போனா கட்டேலுமே'

'இல்லையப்பா; என இழுத்தார். பின்னர்,

'ஏன் இப்படி இடிந்துவிழவேண்டும் என்ற கவலைதான்' என்று கூறியபடி பெருமூச்சொன்றை எறிந்தார்.

'வானம் மழை பொழியும்'
'வானத்தில் முகில்கள் உலவும்'
'வானத்தில் நிலவு எறிக்கும்'
'வானத்தில் பட்சிகள் பறக்கும்'
'வானத்தில் சூரியன் உதிப்பான்'
'வானத்தில் நட்சத்திரங்கள் காலிக்கும்'

**கொக்குப் பட்டம் இரவு பூராகவும் தனிமையில் கிடந்து ஒரு வீணையைப் பழிக்கும் வண்ணமாக இசை கூட்டியபடி பறந்து கொண்டிருந்தது.**

ஆனால் எங்கட வானத்தில் மேலிருந்து......

அம்மா சேலைத் தலைப்பை இடுப்பில் சொரிந்தபடி எழுந்து அப்பாவைப் பார்த்தாள்.

இப்படியொரு குழி போதும் நிம்மதியாக உறங்க என்கிற விதமாய் அம்மாவிடம் அப்பா பார்வையில் சொன்னார்.

அம்மா கண்கள் கலங்கியபடி வானத்தை நிமிர்ந்து பார்த்தாள்....

மீளவும் வீட்டைக் கட்டுவதற்காக அம்மா வேலைக்காக சிலரை அழைத்து வந்தாள்.

வீட்டின் சிதைவுகளுக்குள் அப்பாவினதும் அம்மாவினதும் திருமணத்தின் போது எடுத்த அழகிய வர்ணப் போட்டோ சிதைந்து கிடந்ததைக் கண்டு அம்மா நெக்குருகி அழுதாள்.

இளமையின் வசந்தகால நினைவுகளும் அவளைப் பாடாய் படுத்தின.

வசந்தகால நினைவுகள் யாவும் மங்கிய வர்ண ஓவியங்களாக அவளுக்குள் தெரிந்தன. ஒரு அருமையான வாழ்க்கையை வான் வழி வந்து அச்சுறுத்திச் செல்கின்றமை மீளாத துயரை அவளுக்குள் எழுதிச் சென்றது.

வேலைசெய்பவர்கள் கையில் அகப்படும் பொருட்களை மிகுந்த கவனத்தோடு நிலத்தில் ஓரிடத்தில் பக்குவமாய் வைத்தார்கள். உயிருள்ளவற்றோடு பழகுவது போன்ற உணர்வில் அவர்கள் வேலையாற்றிய விதத்தை தங்கை கண்டுகொண்டவாறே தேனீரை பரிமாறிச் சென்றாள்.

தென்னை மரங்கள் காற்றுக்கு அசைந்து பாடுவது உளத்துக்கு சுகமளிக்க எப்போதோ அப்பா புன்னகைத்த ஞாபகம் நெஞ்சை அழுத்த அம்மா வேலியை அறுக்கை பண்ணுவதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள். கட்டிட வேலை செய்பவர்கள் புதிய தொரு சிறிய வீட்டைக் கட்டி முடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

வானம் எதிரியின் வசம் சிறைப்பட்டுக் கிடக்கையில் அது தேவையற்றதாகவே தம்பி உணர்ந்தான். அதை எப்படி தடுப்பது என்பது தெரியாமல் தடுமாறினான். ஒரு ஓலைக் குடில் தற்போதைக்கு போதும் என்கிறவிதமான அவனது உணர்வை தாயிடம் சொல்லத் தயங்கியபடி நின்று கொண்டிருந்தான்.

'அம்மா' இப்ப இந்த வீடு கட்டுற வேலையை விடுவம் அவங்கள் தொடர்ந்தும் குண்டு போடுவாங்கள்'

'அவங்கள் திரும்பவும் குண்டு போடட்டன் ராசா நாங்கள் திரும்பவும் கட்டுவம்' தாயின் முகமாற்றம் அவனுக்குள் ஊர்க் காளியின் நினைவை நினைவுபடுத்தியது..

'அப்பாவைப் பார்த்தாயா? நாளுக்கு நாள் எப்படி வாடிக்கொண்டு போறார்; அவரைத் தேற்ற வேற வழி எனக்குத் தெரியவில்லை'.

'அப்பாவுக்கும் இப்ப இருக்கின்ற கொட்டில் போதும் எண்ட நினைப்புத் தான் இருக்கும்' நீயம்மா அப்பாவோடு கதைத்துப் பாரன்'.

வீட்டின் வெளி முற்றத்திற்கப் பால் மேய்ச்சலுக்கு சென்றிருந்த மாடுகளை சாய்த்துக் கொண்டு வந்தார் அப்பா. மாட்டுக் கன்றுகள் துள்ளித் துள்ளி முட்டி மோதி விளையாடின.

மேலே வானம் இருண்டு விட்டது. முகில்களை கிழித்தபடி பேரிரைச்சலோடு சிறிலங்கா போர்விமானங்களின் இரைச்சல் காதைச் செவிடுபடுத்தியது. எல்லாவற்றையும் சடுதியாக விட்டு விட்டு வாழ்க்கையின் சௌந்தர்யங்கள் குலைய குழியை நோக்கி அச்சத்தோடு ஓடிப் பதுங்கினார்கள்.

குண்டுகள் விழுந்து பேரதிர்வோடு வெடிக்கின்றன.

கரும்புகைகளால் அந்தத் திக்கே சூழ்கின்றபோது ஒரு கரிய சிங்கள பேரினவாத அரக்கன் கொடூரமாகச் சிரித்தான். தம்பியும், தங்கையும் பதுங்குகுழி வாசிகளைப் போல அழுக்கும், புழுதியும் படிந்த முகத்தோடு வெளியை நோட்டமிட்டனர்.

கறவைப் பசுக்கள் வீரிட்டுக் கத்துகின்றன.

அம்மா கலங்கியபடி தங்கச்சியை அணைத்து தலைமுடியை கோதிவிட்டாள்.

வீதியெங்கும் சிறுவர்களின் காதல் குழைந்த விளையாட்டுப் பொருட்கள் கிடந்தன. குண்டுச் சிதைவுகள் தைத்து அவை உடைந்தும் போயின. அவற்றை விட்டு வந்த வேதனையை அவர்கள் முகங்கள் என்னமாய் படுத்தியது. திரும்பப் போய் எடுத்து வருகிற துணிச்சலும், பயமும் கலந்த உளப் போருக்குள் நின்று கொண்டு அருகே நிற்பவர்களை துடியாய் துடிக்கும் வண்ணமாய் அசத்தினார்கள்.

மக்கள்கூட்டம் வானத்தை நோக்கி தலைகளை உயர்த்தி விழிகளை மிரள மிரள முழித்தபடி பகை விமானங்கள் பறந்து போவதை வெளியில் வந்து நின்று கொண்டு பார்த்தார்கள். குத்துக்கரணம் அடித்தன, வான்முகில்களுக்குள் ஒழித்தன, நெடுக்கும் குறுக்குமாக பறந்து விமானச் சாகசங்கள் காட்டின, திரும்பி நிலத்தில் தாள வந்து குண்டு குத்திப் போகப் போவதாக பாசாங்கு செய்தன, விரட்டின, மிரட்டின. வானமே சிறையுண்டு கிடந்தது.



எல்லாம் மங்கிய வர்ணங்களாக மனதில் கரைந்து கொண்டிருக்க நீல வர்ணம் பூசிய வானம் அழகையிழந்து கிடந்தது. உறவு அறுந்ததைப் போன்ற உணர்வுதான் அம்மாவுக்கும் எஞ்சி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யது. கந்தக நெடில் காற்று முகத்தில் அடிக்க அம்மா கடுமையான இருமல் கண்டாள். அம்மாவுக்கு உதவியாக தங்கச்சி அருகிருந்தாள். வெந்நீர் வைப்பது, சமையல் செய்வது, பசுக்களில் பால்கறப்பது என அவளே சுற்றிச் சுழன்று வந்தாள்.

வீட்டின் சிறிய தோட்டத்துக்குள் பயிர்கள் வாடாது நீர் இறைத்துக் கொண்டிருக்கையில் கட்டறுத்து வந்து கட்டாக்காலி மாடுகள் பயிர்களை மேய்ந்து விட்டன. தம்பி விரட்டிச் சென்று கொண்டிருந்தான். கடும் கோபமாக அவன் அவற்றின் மீது கற்களால் வீசினான். சாட்டையால் விளாசினான். தோட்டத்துக்குள் வந்து பயிர்களை மேய்ந்து பசுமையை, கொலுவீற்றிருந்த அழகை மேய்ந்த மாடுகள் மீது அவனுக்கு ஏற்பட்ட கோபம் மூண்டெரிய மூசி மூசி ஓடினான். 'டேய் விட்டிற்று வாடா' அம்மா வெளியதிரக் கூவினாள். ஊரில சனங்கள் இருந்தால் தானே கட்டறுக்கையா வைச்சிருக்கிறதற்கு அதுகள் வாயில்லாச் சீவன்கள் ஐயா அதுகளை வருத்தாதே வாடா' தகப்பனாரும் தாண்டி தாண்டி வெளியை நோக்கி இரைந்தார். காயப்பட்ட மாடுகளின் சொந்தக்காரர்கள் சிலர் முகத்தை ஒரு மாதிரியாய் வைத்துக் கொண்டு மறுநாள் போனது கண்டு தாய்க்கு வேதனையாக இருந்தது. தங்களுக்கு விழுந்த அடியாக அவர்கள் உணர்ந்து கொண்டார்களோ என்னவோ தெரியாது அவர்களை முகம் கொண்டு பார்க்க அம்மாவும் சங்கடப்பட்டாள். தம்பியிடம் சொன்னாள்; அவன் கோபமாகவே இருந்தான் நஸ்டஈடு பெற்றுத் தருமாறு கோரினான்.



குண்டு விழுந்து சிதைந்த வீட்டின் முன்றலில் நின்று பன்மடங்காய் குமுறினான். சிங்கள விமானப்படை மீதான கட்டாக்காலி குணத்தின் மீது அவனுக்கு இருக்கின்ற கோபம் எரிமலையாய் உறங்கிக் கிடந்தது.

அயல் வீட்டுக்காரர்கள் எல்லாம் முன்னரைப்போல் இல்லை. சிரிப்பைத் தொலைத்த அந்த முகங்களைக் காணச் சகியாதவர்கள் திடீர் திடீர் எனக் காணாமற் போனார்கள். தம்பியனும் ஒரு நாள் எங்கையென்று சொல்லாமலே போய்விட்டான்.

தங்கச்சி தேடாத இடமெல்லாம் தேடினாள். பதுங்கு குழிக்குள் அவன் தனது படத்தை மாட்டி வைத்திருந்தான். ஓடிப்போய் பார்த்தாள்.

'தம்பி எங்கையடா போயிற்ற எனக்கும் சொல்லிக் கொள்ளாமலே எங்கயடா போயிற்ற' கேவிக் கேவிக் அழுதாள்.

'படிக்கிறதற்கு மேசை போடுறன்ரா' ஒப்பாரி வைக்கிற விதமாய் சொல்லி அழுதாள்.

ஊரில் தம்பி காயப்படுத்திய கட்டாக் காலிமாடுகளுக்கு புல்லுப் பிடுங்கிப் போட்டாள். அவளுக்கு அவற்றின் மீது ஒரு பரிதாபம் ஏனோ தெரியாது. தன்ர பிள்ளைக்கு அன்றைக்கு வந்த கோபமும் அந்த ஓட்டமும் கண்களில் ஆடியது.

அம்மா ஒரு நாள் காட்டை அண்டிய சிறுவெளியால் விறகு பொறுக்க போய் வருகையில், வானம் வசமாகும் பாடலை தம்பியும் சில தோழர்களுமாய் நம்பிக்கையோடு பாடிச் சென்றதை மகிழ்ச்சியோடு அப்பாவோடு பேசிக் கொண்டிருந்தாள். தம்பியன் அம்மாவைக் கண்டு கையை அசைத்து சைகையால் பின்னர் வீட்டுக்கு வருவதாக் சொல்லியிருக்கிறான். காட்டிற்குள் வானத்தை நோக்கியபடி சென்று கொண்டிருந்த போது தாயைக் கண்டு சிந்திய புன்னகையை பௌத்திரமாக காத்தாள்.

**வசந்தகால நினைவுகள் யாவும் மங்கிய வர்ண ஓவியங்களாக அவளுக்குள் தெரிந்தன. ஒரு அருமையான வாழ்க்கையை வான்வழி வந்து அச்சுறுத்திச் செல்கின்றமை மீளாத துயரை அவளுக்குள் எழுதிச் சென்றது**

'அவன் வளர்ந்து பெரியாளாய் வந்திட்டான் உங்களை மாதிரியே இருக்கிறான்'

'அப்படியா ம்.. சொல்லு'

'அதே ஏன் கேட்கிறீங்க என்ன துடிப்பு அப்பா'

அப்பா சிரிக்கின்றார்.



சந்தோசச் சிரிப்பின் ஒலி திக்கெங்கும் பரவட்டும் என அடைத்திருந்த கதவுகளைத் திறந்து விடுகின்றேன்.

'வருவானா' அம்மாவிடம் அப்பா பவ்வியமாகக் கேட்டார்.

'பின்ன அவன் நிச்சயம் வருவான்'

அப்பா மெல்ல எழுந்து வந்து வானத்தைப் பார்க்கின்றார்.

கடலும் வானமும் புத்தொளியில் ஜொலித்துக் கொண்டிருந்தன.

அப்பா உரக்கச் சொன்னார், வானத்தில் நட்சத்திரங்கள்.. காலிக்கும்!!

அம்மாவும் சிரித்துக் கொண்டு சொன்னாள்;


வானத்தில் நட்சத்திரங்கள் காலிக்கும்!!!

- விதுரன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சுண்டிக்குளத்தில் அதிரடித் தாக்குதல்




**20** ஒக்டோபர் 1996, அதிகாலை வேளையில் சுண்டிக்குள பகுதியும் அதனையொட்டிய கடற் பிரதேசமும் அமைதியாகக் காணப் படுகின்றன. ஆனால் அவ்வமைதி யிலும் அடுத்து நடக்கப் போவதை எதிர்பார்த்தது போல ஒருவித திகில் காணப்படுகின்றது. சமுத்திர அலை கள் கரையோடு மோதி வெண்ணிற நுரையை உருவாக்கி அதை அழித்து விளையாட, தூரத்தே இயந்திரங்கள் இரையும் சத்தம் கேட்கின்றது.

வானத்தில் முன்னும் பின்னும் MI-24 HIND ரக உலங்குவானூர் திகள் பாதுகாப்பளிக்க, பிரமாண்ட மான MI-17 ரக உலங்குவானூர்திகள் சுண்டிக்குளத்தை நோக்கி வந்து கொண்டிருக்க அப்பிரதேசத்தின் அமைதி கலைகின்றது. தரைப்பகுதி யிலோ எவ்வித சலனமுமில்லை.

திடீரென சமுத்திரத்திலும் டோராக் கள், பீரங்கிப் படகுகள் புடைசூழ நீளமான பைபர் கிளாஸ் படகுகள் இரண்டு கரையை நோக்கி வந்து கொண்டிருக்கும் காட்சி உதயமாகின்றது.

MI-24, MI-17- களுக்கு மேலே திடீர் மிகை ஒலி யுத்த விமானங்களும், புக்காரா குண்டுவீச்சு விமானங்களும் உயரே பறந்து கீழே நடப்பவற்றைக் கண்காணிக்கின்றன.

சாதாரணமாக மிகுந்த அமைதி யான பிரதேசமாகக் கருதப்படும் சுண்டிக்குளம் கணநேரத்திற்கு தென் ஆசியாவில் ஆரவாரமான பகுதியாக மாற்றப்பட "ஒப்பரேசன் டிரிதர" எனப் பெயரிடப்பட்ட முப்படைக ளின் இணைந்த இராணுவ நடவ டிக்கை ஒன்று அரங்கேறுகின்றது.

"சுண்டிக்குளத்தில் இயங்கி வந்த கடற்புலிகளின் 'ராடர்' நிலையத்தை அழிப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது" எனப் பின் னர் இராணுவப் பேச்சாளர் தெரி வித்த போதிலும், தாக்குதலின் பின்ன ணியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்புலிகளின் ராடர் நிலையத்தை அழிப்பதோடல்லாமல் வேறு பல காரணங்கள் உள்ளதாகவே கருத வேண்டும்.

முல்லைத்தீவு சமரின் போதும் அதைத் தொடர்ந்த "ஒபரேசன் திரு விட பகர" நடவடிக்கையின் போதும் முப்படைகளிடையே (இராணுவம், கடற்படை, வான்படை) கடும் கருத்து வேற்றுமைகள் நிலவியதும், தோல் விக்கு ஒருவரை ஒருவர் சாடிக்கொண் டதும் நன்கு அறியப்பட்ட விடயம். ஆகவே முப்படைகளையும் இணைத்து ஒரு வெற்றிகரமான தாக்குதலை நடத்துவதற்கு இராணுவத்தின் தலை மைப்பீடம் நிர்ப்பந்திக்கப்பட்டது. இதைத் தவிர கடல், தரை, வான் கொமாண்டோக்களையும் முதன் முறையாக ஒன்றிணைத்து தாக்குதல் நடாத்தவும், இது வெற்றியளிக்கும் பட்சத்தில் இதேபோல் தொடர்ச்சி யான பல ஒன்றிணைந்த தாக்குதல் களை நடாத்தவும் திட்டமிடப்பட் டது. இத்தாக்குதலுக்கான நேரடி தலைமைப் பொறுப்பை கடற்படை தளபதிகளில் ஒருவரான வைஸ் அட் மிரல் தசநாயக்க ஏற்க நடவடிக்கை யின் மேற்பார்வையை அப்போதைய வடக்கு கிழக்கு அனைத்து நடவடிக் கைக்குப் பொறுப்பாளரான (OOC) மேஜர் ஜெனரல் சிறீலால் வீரசூரிய பொறுப்பேற்கின்றார். இவர்களைத் தவிர முப்படையைச் சேர்ந்த பல முன்னணித் தளபதிகளின் நேரடி கண் காணிப்பில் நடத்தப்பட்டதாக இந் நடவடிக்கை சிறப்புப் பெறுகின்றது.

முப்படைகளும் பங்கேற்ற ஒரு தாக்குதலுக்கு கடற்படைத் தளபதி ஒருவர் தலைமை தாங்கியது பல ருக்கு வியப்பைத்தரும். ஆனால், தாக் குதலில் முக்கிய பங்கு வகித்த கடற் படை கொமாண்டோக்கள் (SBS - Special Boat Squadran) பற்றி ஆராயும் பட்சத்தில் வியப்பு மறைந்துவிடும். SBS ஒரு பெருமை மிகுந்த கடற் படைப் பிரிவாகும். மேலும் சில கடற் படைத் தளபதிகளின் தீவிர முயற்சி யினாலேயே அமெரிக்காவின் கடற் கொமாண்டோ பிரிவான SEALS, பிரித்தானியாவின் கடற் கொமாண்டோ

**- வோன் நாடோடி**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பிரிவான SBS என்பவற்றை நினைவில் வைத்து உருவாக்கப்பட்டதாகும். கடற்படையின் அதிசிறந்த வீரர்கள் இதில் சேர்க்கப்பட்டு SEALS, SBS(UK) பயிற்சி முறைகளைத் தழுவிய ஒரு பயிற்சியே இவர்களுக்கு வழங்கப்பட்டதும், இது தவிர மேற்குலக நாடுகளினாலேயே "நவீன ஆயுதங்கள்" எனக் கருதப்படும் ஆயுதங்களே இவர்களுக்கு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

SBS உருவாக்கப்பட்டதின் பின் மிகப் பெரிய அளவில், மற்றைய கொமாண்டோக்களுடன் இணைந்து நடத்திய முதலாவது தாக்குதல் 'ஒப்பரேசன் டிரிதர'. எனவே இந்நடவடிக்கைக்கு கடற்படைத் தளபதி ஒருவர் தலைமை தாங்கியதில் வியப்பேதுமில்லை. மேலும் SBS-இன் செயல்திறனை அரசிற்கும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் காட்டுமுகமாகவும் இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாக கூறலாம். ஏனெனில் மிகுந்த செலவில் உருவாக்கப்பட்ட SBS-இன் செயற்திறன், அதை உருவாக்குவதற்காக மிகுந்த பிராயச்சித்தம் எடுத்த அதிகாரிகள், பலனை (விளைவை) அரசிற்கு காட்டியே ஆகவேண்டும் என்றொரு நிலைமை இருந்ததாகவும் கூறலாம்.

ஆகையால் "ஒப்பரேசன் டிரிதர" நுணுக்கமாக திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதல் நடவடிக்கை என்றே கூற வேண்டும். அத்துடன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்புலிகளின் ராடர் நிலையத்தை இலக்காகத் தேர்ந்தெடுத்ததிலும் வியப்படைய ஏதுமில்லை. இதைவிட தாக்குதலை வெற்றிகரமாக நடத்துவதற்காக பல வாரங்கள் உளவறிய செலவிடப்பட்டன. இதன்போது குறிப்பாக கடற்புலிகளின் 'ராடர்' நிலையத்தை அவதானிக்க அதிநவீன கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

இப்போது கரையை நோக்கி டோராக்கள், பீரங்கிப் படகுகள் புடைசூழ, கடற் கொமாண்டோக்களை (SBS) ஏற்றியபடி, 13 மீட்டர் நீளமான இரு பைபர் கிளாஸ் படகுகளும் எச்சரிக்கையோடு கரையை நோக்கிச் செல்கின்றன. இவ்வகையை சேர்ந்த படகுகள் (water jet) பாரம் குறைந்தவை. ஆனால் மிகுந்த வேகத்தில் செல்லக்கூடியவை. ஆகையால் அதிர்ச்சித் தாக்குதல்களுக்கு பல்வேறு நாட்டு கொமாண்டோ பிரிவினரால் பரவலாக பயன்படுத்தப்படுபவை.

கரையை அடைந்து கடற்புலிகள் மேல் அதிர்ச்சித் தாக்குதல் நடத்த




வந்த கடற் கொமாண்டோக்கள் கரையில் இருந்து சில மீட்டர்கள் தூரத்தில் வைத்து, நன்கு உருமறைப்புச் செய்த கடற்புலிகளினால் தாக்கப்பட்டு அதிர்ச்சியடைகின்றார்கள். பைபர் கிளாஸ் படகொன்று தீப்பற்றி மூழ்கின்றது. கடற் கொமாண்டோக்களுக்கு தலைமை தாங்கி வந்த அதிகாரி குண்டடி பட்டு மரணமடைய, கடல் சிவக்கின்றது. மற்றைய பைபர் கிளாஸ் படகு ரொக்கட் தாக்குதலுக்கு இலக்காகி பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதமடைகின்றது.

இதேவேளை MI-24 உலங்கு வானூர்திகள் ஒருமுகப்படுத்தப்பட்ட ரொக்கட் தாக்குதல்களை சுண்டிக்குளம் மத்திய பிரதேசத்தில் மேற்கொள்ளுகின்றன. 57 மி.மீற்றர் ரொக்கட் தாக்குதலினால் மரங்கள் முறிந்து விழுகின்றன. தரையில் ஏற்படும் சிறு அசைவுக்கும் ரொக்கட்டுக்களும் 50 கலிபர் ரவைகளும் அனுப்பப்படுகின்றன. MI-24—களின் அகோர தாக்குதலுக்கிடையே தரையிறங்கும் MI-17 உலங்குவானூர்திகள் கனரக ஆயுதங்களை தாங்கிய கொமாண்டோக்களை தரையிறக்குகின்றன.

சுண்டிக்குளத்தை அண்டிய பிரதேசங்கள் 'கிபீர்' யுத்த விமானங்களாலும், MI-24 உலங்குவானூர்திகளாலும் தாக்கப்படுகின்றன.

"வெளியில் இருந்து புலிகள் உதவிக்கு வருவதை தடுப்பதற்காக" என வான்படையினர் நியாயம் கற்பிக்க மக்களது வீடுகள், பொது இடங்கள் என்பன தாக்கப்படுகின்றன.

தரையிறக்கப்பட்ட இராணுவ கொமாண்டோக்கள் கடற்புலிகளின் தந்திரமான தாக்குதலுக்குள்ளாகி பின் வாங்க ஆரம்பிக்கின்றனர். அவர்களின் பயணத்திற்கு பயன்படுத்தப்பட்ட MI-17 உலங்குவானூர்திகள் கடற்புலிகளின் விமான எதிர்ப்பு படையணியால் சேதத்துக்குள்ளாக்கப்படுகின்றன.

கடலிலோ SBS கொமாண்டோக்கள் தம்மில் பலரை பறிகொடுத்து, காயமடைந்தவர்களைத் தூக்கியபடி பின்வாங்குகின்றார்கள். இதனைத் தொடர்ந்து சுண்டிக்குளத்திலும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் 'கிபீர்', MI-24, 'புக்காரா' தாக்குதல்களால் பல வீடுகள் சேதமடைய, பலர் காயமடைகின்றார்கள். காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் கூட MI-24 களினால் தாக்கப்படுகின்றன.

பிற்பகல் அளவில் சண்டை முடிந்த நிலையில் சுண்டிக்குளம் மீண்டும் தனது அமைதி நிலைக்கு திரும்புகின்றது.

இத்தாக்குதலில் SBS அணியினருக்கு தலைமை ஏற்று வந்த அதிகாரி உட்பட 12 SBS—இனர் கொல்லப்பட, 9 பேர் காயமடைகின்றனர். இராணுவக் கொமாண்டோக்கள் தரப்பில் 35 கொமாண்டோக்கள் காயமடைகின்றனர். இரண்டு 13 மீட்டர் நீளமான பைபர் கிளாஸ் அதிவேகப் படகுகள் முற்றாக சேதத்திற்குள்ளாக்கப்பட, 3 MI-17 மற்றும் 1 MI-24 என்பனவும் சேதமடைகின்றன.

இத் தாக்குதல்களின் போது புலிகள் தரப்பில் மூவர் வீரமரணம் அடைகின்றார்கள். மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டு பலர் காயம் அடைந்தார்கள். ★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கலாநிதி மகேஸ்வரன் அவர்களுடனான

# நேர்காணல்



தமிழர் புனர்வாழ்வுக் கழக அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் கலாநிதி ஜெ. மகேஸ்வரன் அவர்கள், கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிகளின் நிமித்தம் விஜயம் செய்திருந்தபோது, 'எரிமலை' இதழுக்காக வழங்கிய நேர்காணல்

ஏதிலிகளான எமது மக்களின் துயர் துடைக்க உழைத்து வரும் உங்களை 'எரிமலை' சஞ்சிகைக்காக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளராக நீங்கள் இருக்கின்றீர்கள். அந்த வகையில் நீங்கள் எவ்வகையான பணிகளை மேற்கொண்டு வருகிறீர்கள்?

தமிழீழ மக்களின் துயர்துடைக்க நான் உழைத்து வருகின்றேன் என்பதை விட உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழீழ மக்களின் நலத்தை கருத்திற் கொண்டு மக்கள் எடுத்து வரும் முயற்சிகளை ஒருங்கிணைக்கிறேன் என்பதுதான் சரியாகும். உலகின் ஒவ்வொரு திக்கிலும் எமது மக்களின் உண்மை நிலையறிந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக உதவுவதற்கு பல மக்கள் தாமாகவே முன் வந்திருக்கிறார்கள். இவர்கள் உண்மையிலேயே பாசம் கொண்டவர்கள். தமிழீழ மண்ணில் எமது மக்கள் படும் துன்பங்களை புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களும் நன்கு உணர்ந்துள்ளார்கள். எமது மக்கள் பாரிய இடப்பெயர்வுகளினால் இடம்பெயர்ந்து தவிக்கும் போதெல்லாம் உணர்வுடன் நிதியுதவிகளை வாரி வழங்கியிருக்கிறார்கள் இவர்கள். பங்களிப்புகள் இயல்பாகவே இருக்கும் பட்சத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளைகளை ஒருங்கிணைக்கும் பணிகள் இலகுவாக அமைந்து விடுகின்றன.

தமிழீழ மக்கள் இன்றைய கால கட்டத்தில் பல நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு சட்டதிட்டங்களுக்கேற்ப தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்தந்த நாட்டு அரசாங்கங்களின் ஒத்துழைப்புடனும் செயற்பட வேண்டிய தேவைகள் இருக்கின்றன. இவ்வகையில், எமது தாயகத்தின் தேவைகளை வெளிநாடுகளின் சட்டதிட்டங்களுக்கேற்ப பூர்த்தி செய்வதில் பல முயற்சிகளை நாம் எடுத்து வருகின்றோம்.

★ இவ் வேலைத்திட்டங்களுக்கு நீங்கள் மக்களிடம் இருந்து எத்தகைய ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறீர்கள்?

தமிழீழ மக்களின் தேவைகள் இன்றைய போர்க்கால சூழ்நிலையில் அதிகரித்த வண்ணமே உள்ளன. இத்தருணத்தில் வெளிநாடுகளில் வாழும் எமக்கு இரண்டு முக்கிய கடமைகள் இருக்கின்றன. தங்குநிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் எமது மக்களின் நிலையை சுயசார்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு எமது பங்களிப்பையும், எம்மைச் சுற்றியிருப்போரது பங்களிப்பையும் வளர்ப்பதற்கு நாம் கூடிய முயற்சிகளை எடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இரண்டாவதாக, தமிழீழத்தில் மக்கள் படும் அவலங்கள் வெளியுலகுக்குத் தெரியாவண்ணம் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கும் நிலையை எதிர்கொண்டு எமது மக்களின் கஷ்டங்களையும் நியாயமான தேவைகளையும் வெளியுலகுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். இவ்விரு விடயங்களில் பங்களிப்புச் செய்யும் தேவையை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

★ 'அகதியுகம்' என்று இன்று உலகம் பூராகவும் பொதுவாக மக்களால் பேசக் கூடியதாக இருக்கும் நிலையில் அகதியான எமது மக்களின் பிரச்சினையை உலகின் மத்தியில் எப்படி முன்வைத்து வருகிறீர்கள்?

ஐ.நா. சபையின் வரைவிலக்கணத்தின்படி ஒரு நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து இன்னொரு நாட்டில் தஞ்சம் புகும்போதுதான் ஒரு மனிதன் அகதியாக கணிக்கப்பட்டிருக்கின்றான். தமிழீழத்தில் ஏதிலிகளாக்கப்பட்டிருக்கும் எமது மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் என்றே கருதப்படுகின்றனர். இதன் அடிப்படையில் எமது மக்களுக்கு உதவவரும் எந்தவொரு அரச, அல்லது அரச சார்பற்ற நிறுவனமும் சிறிலங்கா அரசின் அனுமதியுடனேயும், சிறீலங்கா வரையும் வரையறைக்குள்ளேயுமேதான் செயற்படுகின்றன. இதைவிட தமிழீழத்தை தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களோடு, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சேர்ந்து செயற்பட்டால், அவற்றை பக்கசார்பானவையாக சிறீலங்கா பார்த்துவிடுமோ என்ற தயக்கமான நிலைப்பாட்டையும் அந்நிறுவனங்கள் மத்தியில் காணமுடிகிறது. சர்வதேச அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட வேண்டியுள்ளன. வெளிநாட்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து சிறீலங்கா அரசின் மேல் அழுத்தங்களை போடுவதனாலேயே இம்மாற்றத்தை ஏற்படுத்த முடியும். எமது மக்களின் அவதிநிலையை அநேக அரசுகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் நன்கு உணர்ந்துள்ளன. ஆனால் இராஜதந்திர காரணங்களுக்காக தமிழீழ மக்களுக்குத் தேவையான அடிப்படையான மனிதாபிமான செயற்திட்டங்களைக் கூட செய்வதற்கு தயங்கி நிற்கிறார்கள். இச் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்ந்து சந்திப்புக்களை ஏற்படுத்தி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவர்களின் மனிதாபிமான கடமைகளைச் செய்வதற்கான தொடர்ச்சியான உந்துதல்களை நாம் கொடுக்க வேண்டியுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள், குறிப்பாக பலகாலமாக வெளியே வாழ்ந்து வருபவர்கள் மத்தியில், தவறான பிரச்சராங்களின் காரணத்தால், எமது மக்களின் அவதி நிலை பற்றிய போதிய விளக்கம் இல்லாமல் இருக்கின்றது. இந்நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியில் ஈடுபடுத்தும் முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றது.

நீங்கள் கூறும் இவ் 'அகதியுகத்தில்' இடம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் வெறும் எண்களாகவே கருதப்படுகின்றனர். எமது மக்களுக்கு அடிப்படை உணர்வுகள், அத்தியாவசிய தேவைகள், உணவு, மருத்துவ தேவைகள், வதிவிட தேவைகள், தொழிற் பயிற்சிகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களின் தேவைகள் இருக்கின்றன. ஆனால் இவை மறுக்கப்படுகின்றன என்பதை உணர்த்த வேண்டிய அவசியத்தையும் நாம் ஓரளவேனும் பூர்த்தி செய்து வருகின்றோம்.

★ தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தும், புலம்பெயர்ந்தும் உள்ளார்கள். இவர்களில் யாருடைய புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறீர்கள்?

ஆம் நீங்கள் கூறுவது போன்று தமிழீழத்தினுள்ளும், தமிழீழத்திற்கு வெளியேயும் எமது மக்கள் அகதிகளாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் தேவைகள் இருந்தாலும், இவர்களில் யாருடைய தேவை கூடுதலாக உள்ளது என்ற கணிப்பிலேயே தமிழீழத்தில் அகதிகளாக இருக்கும் எமது மக்களின் தேவைகள் பன்மடங்கு அதிகமாகவிருப்பதை உணர்கிறோம். தமிழீழத்தில் எமது மக்கள் ஏதிலிகளாக ஆக்கப்பட்ட நிலையில் உள்ளனர். உணவும் மருந்தும், இயற்கையின் அனர்த்தங்களிலிருந்து ஒதுங்குவதற்கு கூரையும் அற்ற நிலையில் இம்மக்கள் உள்ளனர். இவ் வடிப்படையில் தமிழீழத்தில் ஏதிலிகளாக்கப்பட்டுள்ள எம் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதே எமது பிரதான கடமையாக இருக்கின்றது.

★ தமிழீழத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் பிரச்சினைகளை இங்கு அகதிகளாக வாழும் மக்கள் மத்தியில் எவ்வாறு கொண்டு செல்கின்றீர்கள்? அப்படிச் செயற்படும் போது எத்தகைய அனுபவங்களை தாங்கள் பெறுகிறீர்கள்?

தமிழீழத்தில் அகதிகளாக வாழும் எம் மக்களின் அடிப்படைத் தேவைகளை வெளிநாடுகளில் அகதிகளாக உள்ள மக்களே அதிகளவு புரிந்தவர்களாக இருக்கிறார்கள். அகதி வாழ்வின் கஷ்டங்களை இவர்கள் நன்கு புரிந்திருப்பதனால் இவர்களின் பங்களிப்பும் தமிழீழ மக்களுக்கு அதிகமாகவே இருக்கிறது. தம்முடைய மட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்திலிருந்து கொண்டும் இவர்கள் பங்களிப்பு செய்வது வரவேற்க வேண்டிய ஒரு விடயம். வெளிநாடுகளிலே அகதிகளாக வாழும் மக்களிடையே தமிழீழத்தில் எம்மக்களின் தேவைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக எடுத்துச் சொல்லும் போது அவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயற்பாடுகளில் அதிக நம்பிக்கை வைத்திருப்பதை உணர முடிகிறது.



**இது எமது நாட்டின் பிரச்சினை; இது எமது மக்களின் பிரச்சினை; ஆகவே இது எமது பிரச்சினை. எமது பிரச்சினையை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்ல எந்த நிலையிலும் நாம் தயங்கவோ, தாழ்வு மனப்பான்மை உடையவர்களாகவோ இருக்க வேண்டியதில்லை.**

நாம் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் செயற்திட்டங்களுக்கு திட்ட அடிப்படையிலேயே உதவியை நாடுகின்றோம். இவ்வாறு மக்களின் உதவியை நாடும்போது, அவர்களின் பங்களிப்புக்கள் எமது மக்களை எவ்வாறு சென்றடைகின்றது என்பதை அவர்கள் கண்கூடாக காண முடிகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டங்கள் உடனடி, இடைக்கால, நீண்டகால அடிப்படையில் அமைந்துள்ளன. தமிழீழப் பகுதிகளில் திடீர் இடப்பெயர்வுகளோ அனர்த்தங்களோ நடைபெறும் போது, உடனடி நிவாரணப் பயிற்சிகளுக்கு பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. சிறுவர்களின் போஷாக்கு, பெண்கள் அபிவிருத்தி, முன்பள்ளி போன்ற இடைக்கால திட்டங்களுக்கும் குடியமைப்பு, கல்வி, தொழில்வாய்ப்பு, பல்துறை பயிற்சியகம் போன்ற நீண்டகால திட்டங்களுக்கும் கலை கலாச்சார, விளையாட்டு, பழைய மாணவர்கள் சங்கங்கள் மற்றும் சமூக நலன்புரி அமைப்புக்கள் தொடர்ந்து உதவிகளை வழங்குகின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் வாழும் மக்களின் தேவைகள், வாழ்க்கை முறைகள் மற்றும் சமூக சூழ்நிலைகள் மாறுபட்டு இருப்பதனால் எமது அணுகுமுறைகளில் மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அடிப்படையில் மக்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டங்களுக்கு பெரும் ஆதரவைத் தர முன்வருகிறார்கள். வெளிநாடுகளில் அவர்களுக்கு இருக்கும் அத்தியாவசியத் தேவைகளின் நிமித்தம் இடையிடையே தளர்வுகள் ஏற்பட்டாலும் உதவ வேண்டும் என்ற மனப்பான்மை மேலோங்கி இருக்கின்றது.

★ 'அகதிகள் யுகம்' என்று பேசப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஈழத் தமிழர்களின் ஏதிலி நிலையை வெளிக்கொணர முடிந்ததா? அவ்வாறு வெளிக்கொணர புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் என்ன செய்ய வேண்டும்?

உலகெங்கிலும் அகதிகள் பெருகி வரும் இக்காலத்தில், ஆபிரிக்க கண்டத்தில் அரசியல் சூழ்நிலைகளால் உருவாக்கப்படும் அகதிகளும், முன்னைய யூகோஸ்லாவிய நாடுகளில் உருவாகிய அகதிகளுமே அநேக நாடுகளின் கவனத்திற்குள்ளாகியுள்ளனர். அரசாங்கங்களுக்கிடையே ஏற்படுத்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தப்பட்டிருக்கும் வர்த்தக ஒப்பந்தங்களும், சில நாடுகளில் எப்பேர்ப்பட்ட அனர்த்தங்கள் நடந்தாலும் அவை புறக்கணிக்கப்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இந்த சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு எமது மக்களின் அவலநிலையை முன்வைக்க வேண்டியது தமிழீழ மக்களாகிய எம் ஒவ்வொருவருக்கும் உள்ள முக்கிய கடமையாக இருக்கிறது. இது எமது நாட்டின் பிரச்சினை; இது எமது மக்களின் பிரச்சினை; ஆகவே இது எமது பிரச்சினை. எமது பிரச்சினையை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்ல எந்த நிலையிலும் நாம் தயங்கவோ, தாழ்வு மனப்பான்மையுடையவர்களாகவோ இருக்க வேண்டியதில்லை. எமது கோரிக்கைகள், அடிப்படைத் தேவைகள் நியாயமானவையாக இருக்கும் பட்சத்தில் எங்கும் அவற்றை தைரியமாக கூற முன்வரலாம். ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு தமிழனும் எம்மினத்தின் துயரங்களை எடுத்துக் கூறும்போது தான் உலக நாடுகளின் கவனத்தை எம்பக்கம் திருப்ப முடியும்.

★ தமிழீழத்தில் அண்மைக்காலத்தில் அகதிகள் நிலைமை எவ்வாறிருக்கிறது? அத்தகைய நிலையில் வாழும் மக்களுக்கு எவ்வகையான புனர்வாழ்வுகளை மேற்கொண்டு வருகிறீர்கள்?

தமிழீழப் பகுதிகளில் அகதிகளின் நிலை எப்போதையும் விட மிகக் கவலைக்கிடமாக மாறியுள்ளது. 'சூரியக்கதிர்', 'சத்ஜய' இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து அகதிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளதுடன் அவர்களுக்குச் சென்றடையும் அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருட்களும் சென்றடையாத சூழ்நிலையே நிலவி வருகிறது. உதாரணமாக வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் மக்களுக்குத் தேவையான உணவில் பாதியேனும் அப்பகுதிக்கு எடுத்துச் செல்வதில் தடைகள் இடப்பட்டிருக்கிறது. சிலநேரங்களில் அரச மட்டத்தில் உணவுகளை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டால் கூட, தமிழீழத்தின் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாங்கள் அனுமதி வழங்குவதில்லை. இன்றைய சூழ்நிலையில் உணவுப் பற்றாக்குறையினால் ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்களில் கணிசமான தொகையினர் உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் குன்றிய நிலையில் உள்ளார்கள். இவர்களுக்கு போதிய சத்துணவு உடனடியாக கொடுக்கப்பட வேண்டியுள்ளது. மருந்துப் பற்றாக்குறையும் எமது மக்களின் சுகாதார நிலையை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. மலேரியா, மஞ்சள் காமாலை. செப்டசீமியா போன்ற நோய்கள் பயங்கரமாகப் பரவியுள்ளன என அறிய வருகிறோம். மேலும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளின் காரணமாக இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனாலும் இவர்கள் தொடர்ந்தும் தங்குநிலையில் இருப்பதனால், இவர்களை பராமரிக்க கணிசமான நிதி தேவைப்படுவதனாலும் எமக்கு தொடர்ச்சியாக பெருமளவு நிதி தேவைப்படுகிறது. அதே நேரத்தில் நீண்ட நாள் அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கும் திட்டங்களுக்கு தடங்கல்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது.



தற்போது, எமது திட்டங்களில் உடனடி நிவாரணப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் தங்கு நிலையில் இருக்கும் மக்களை இடைக்கால, நீண்ட காலத்திட்டங்களின் மூலம் ஓர் சுயசார்பு நிலைக்கு மாற்றுவதே எமது நோக்கமாகவுள்ளது. இதன் அடிப்படையில் பல இலட்சக் கணக்கான மக்கள் விரைவாகப் பயனடைய வேண்டும் என்ற நோக்கோடு, சென்ற நவம்பர் மாதம் முதல் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் தமிழீழப் பகுதிகளில் துரித புனர்வாழ்வுச் சேவைத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திட்டமொன்றை ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களும், சமூக நலனபுரி அமைப்புகளும் இணைந்து செயற்படுத்தக் கூடிய முறையில் முன்வைத்துள்ளது. சுகாதாரம், கல்வி, விவசாயம், வீடமைப்பு, புனர்வாழ்வு, தொழில், பொதுவிடயம் என்று ஏழு பிரதான அம்சங்களின் கீழ் பல திட்டங்களை முன்வைத்து, குறிப்பாக வெளியூரில் வாழும் மக்களின் உதவியுடன் நிர்மாணிக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்பட்டு வருகிறது. நாம் செயற்படுத்தும் திட்டங்கள் பல ஆய்வுகளின் அடிப்படையில் முடிவெடுத்து அமுலாக்கப்படுவதனால் அவை முற்றாக எமது மக்களுக்கு பலன்களை அளிக்கின்றது. இங்கு முக்கியமாக கூறப்படவேண்டிய இன்னுமோர் விடயம் என்னவென்றால், எமது செயற்திட்டங்களை அமுலாக்க அரசாங்க அதிபரின் ஒத்துழைப்பும், ஏனைய வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பும் கிடைக்கின்றது.

★ சிறீலங்கா அரசாங்கம் வேறு புனர்வாழ்வுப் பணிகளை தடுத்து வருகின்ற போதும் சில பகுதிகளில் தங்கள் பணிகளைச் செய்துவருவதாக வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்கள் கூறுகின்றன. அதில் புதிய சூழல் தோன்றியிருக்கிறதா?

சிறீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளிலேயே தமிழருக்குரிய புனர்வாழ்வுப் பணிகளை அரசாங்கம் ஒழுங்காக செய்யாதவிடத்து அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் தமிழர்களுக்கு அரசாங்கம் புனர்வாழ்வுப் பணிகளை புரியும் என்று எதிர்பார்ப்பது, மேற்கில் ஆதவன் உதிக்கும் வரை காத்திருப்பதைப் போன்றது. பட்டினிச் சாவின் விளிம்பில் தமிழீழ மக்களை வைத்திருக்கும் சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் வாயை அடைத்து அவர்களின் செயற்பாடுகளுக்கும் தடைகளை விதித்து, அந்நிறுவனங்கள் செய்ய முற்படும் பணிகளை தம்மூடாகவே செய்யவேண்டும் என்று நிபந்தனைகளை போட்டுக் கொண்டிருப்பதே இன்றைய உண்மையான நிலை. தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சர்வதேச ஸ்தாபனங்கள் புனர்வாழ்வுப் பணிகளை நடாத்த அரசாங்கம் தமது தயவினால் மக்கள் சுகமாக வாழ்கிறார் என்று பிரச்சாரம் செய்வதிலேயே உன்னிப்பாகவிருக்கிறது.

★ ஈழத்தில் அகதிகள் நிலையை சர்வதேச மயப்பட வெளிநாடுகளில் வாழும் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் ஆற்றவேண்டிய மிக முக்கியமான வரலாற்றுப் பணிகள் எவை எவையென்று தாங்கள் நினைக்கின்றீர்கள்?

புலம்பெயர்ந்து சர்வதேச ரீதியில் பல நாடுகளிலும் வாழும் தமிழீழ மக்கள் செய்ய வேண்டிய மூன்று முக்கிய பங்களிப்புக்கள் இருக்கின்றன. முதலாவதாக வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்களின் அடுத்த இளைய சந்ததி தமிழரின் கலை, கலாச்சாரத்தில் ஆர்வம் காட்டினாலும் எமது பாரம்பரியங்களையோ சரித்திரத்தையோ, தமிழீழ வரலாறையோ அறியாதவர்களாகவே வளர்கின்றார்கள். இச் சந்ததியினர் தாம் வாழும் நாடுகளின் கலாச்சாரத்தையும், மனித வள மேம்பாட்டையும், மொழியையும் நன்கு அறிந்து வாழும் சூழ்நிலையில்

# 1996–இல் பத்து ஆண்டு கடந்துவிட்ட பணியில் பங்காளி நிறுவனங்களை இணைத்துச் செயற்படும் சேவையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

1983–ஆம் ஆண்டு இலங்கையின் பெரும்பகுதி பெரும் துன்ப துயரங்களை தாங்கியதாகவும் வரலாற்றில் பதியப்பட வேண்டியவையாகவும் இருந்தது.

இலங்கையின் வரலாற்றில் 'ஆடிக்கலவரம்' என்றும் இலங்கையின் இருண்ட நாட்கள்' என்றும் குறிப்பிட்ட தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் இலங்கையின் பல பகுதிகளிலும் வாழ்ந்த தமிழ் மக்களை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நோக்கி இடம்பெயர வைத்தது.

தமிழ்மக்கள் வடக்கு, கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்திருந்தாலும் இப் பகுதிகளில் நடைபெற்ற யுத்தம் இப்பகுதிகளிலிருந்து பெருமளவு மக்களை இந்தியா நோக்கி இடம்பெயர வைத்தது.

அகதிகளான எமது மக்கள் இந்தியாவின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தஞ்சமடையும் சூழ்நிலை உருவாகியது.

உயிரிழந்து, உடமையிழந்து, உறவுகளைப் பிரிந்து ஏதிலிகளான இந்த மக்களின் உயிர் வாழ்வு நிலை பாதிக்கப்பட்டது.

இந்தவேளையில் இம் மக்களின் துயர் துடைப்பு பணியில் ஆர்வம்கொண்ட பெரியோர்களினதும், நலன் விரும்பிகளினதும் ஆலோசனைகளுடனும், ஒத்துழைப்புகளுடனும் இம் மக்களால் 1985–ஆம் ஆண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்தியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் தனது சேவையைத் 'தமிழர் புனர்வாழ்வுக் கழகம்' இந்தியாவில் ஆரம்பித்தாலும் பின்னர் இலங்கையின் வடக்கு–கிழக்கு பகுதியில் தனது சேவையை வழங்கி வந்தது.

நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்தி என்பவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டு சமூகநலனில் முன்னேற்றத்தையும், மனிதவள மேம்பாட்டையும் சுயசார்பு நிலையை ஏற்படுத்துதலையும் குறிக்கோளாக வைத்து சமூக பொருளாதார அபிவிருத்தியை கொண்ட சமுதாயத்தை ஏற்படுத்துதலை இலக்காகவைத்து கிராமிய மட்டத்தில் செயற்படும் 07 பேரைக் கொண்ட சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுக்களை அமைத்து அவர்களை கல்வி, சுகாதாரமும் போசாக்கும், வீடமைப்பு, விவசாயம், தொழில், புனர்வாழ்வு, பொது விடயங்கள் என செயற்படும் வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தி தனது 10 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பணியில் வெற்றியடைந்து மகிழ்வுடனும் நிறைவுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிமிர்ந்து நிற்கின்றது.

இந்த நிலையில் 10 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பணியில்,

★ இடம்பெயர்ந்தோர் நலன்புரித் திட்டம், ★ நிவாரணப் புனர்வாழ்வுத் திட்டம், ★ வீடமைப்புத் திட்டம், ★ போசாக்குத் திட்டம், ★ சுயசார்புத் தொழில் முயற்சித் திட்டம், ★ தொழில் துறை நிலையத் திட்டம், ★ பல்துறைப் பயிற்சித் திட்டம், ★ முன்பள்ளி மேம்பாட்டுத் திட்டம், ★ உழைப்பாளரை இழந்த பெண்களுக்கான திட்டம், ★ வலுவிழந்தோருக்கான திட்டம், ★ சிறுவர் நலத் திட்டம், ★ ஆதரவற்ற சிறுவர் பராமரிப்புத் திட்டம், ★ மரநடுகைத் திட்டம், ★ வருமான அதிகரிப்புத் திட்டம், ★ குடிநீர் வழங்கல் சேவைத் திட்டம், ★ சுகாதார சேவைத் திட்டம், ★ 1000 - குழந்தைகள் தத்தெடுக்கும் திட்டம், ★ கிராம மேம்பாட்டுத் திட்டம், ★ புத்தொளித் திட்டம், ★ எழுச்சி உதயத் திட்டம், ★ வர்த்தக சேவைத் திட்டம், ★ வறிய மாணவர் கல்வித் திட்டம், ★ விவசாய சேவைத் திட்டங்கள், ★ ஆய்வுப் பட்டறைகள், ★ கூட்டுப் பண்ணைத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இவர்களுக்கு எமது மக்களின் துயரங்கள், அவலநிலை என்பன எடுத்துக் கூறப்பட்டு இவர்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புனித பணிகளில் இணைக்க வேண்டும். இரண்டாவதாக, தமிழீழத்தில் எம் மக்களின் உண்மை நிலையுணர்ந்து அவர்களின் துயர் துடைக்க தமிழர் புனர் வாழ்வுக் கழகம் எடுத்துவரும் பணிகளுக்கு பங்களிப்பை அதிகரிக்க வேண்டும். மூன்றாவதாக எம்மக்கள் படும் வேதனைகளை வெளியுலகத்தின் எந்தவொரு தொடர்பு சாதன ஊடகமும் எடுத்துச் சொல்ல முடியாதிருக்கும். தற்போதைய சூழ்நிலையை மாற்றுவதற்கு முயற்சிகளை எடுத்து எமது சொந்தங்களின் அவலத்தை தயங்காமால் எந்தவொரு இடத்திலும் எடுத்துரைக்க வேண்டும். இம் மூன்று விடயங்களில் நாம் எமது பங்கை அளிப்போமானால் எமது மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒரு பகுதியினையாவது நாம் பூர்த்தி செய்ய முடியும்.

★ அறிவுஜீவிகள், கவிஞர்கள், ஓவியர்கள், எழுத்தாளர்கள் அகதிகள் வாழ்நிலையில் அக்கறை கொள்ளவில்லை என்கின்ற கருத்து நிலவுகிறதே அது பற்றி தங்களுடைய கருத்து என்ன?

நீங்கள் கூறும் அறிவுஜீவிகள், கவிஞர்கள், ஓவியர்கள், எழுத்தாளர்கள் எல்லோரிலும் குறைந்த விகிதாசாரரே முன்வந்து தமது நேரத்தையும், பகிரங்க பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் கொடுக்கின்றார்கள். அறிவுஜீவிகள் தத்தம் தொழில்சார் துறையிலே கவனத்தை செலுத்துவதோடு நிறுத்தி விடுகின்றனர். எப்படி எந்தவொரு தொழில்நுட்பமும் சமதர்மத்திற்கு பயன்படக் கூடியதாக அமைய வேண்டுமோ, அதேபோன்று, தமிழீழ மக்களாகிய நாம் எமக்குத் தெரிந்த நுட்பங்கள், துன்புறும் எமது மக்களுக்கு உள்ளூர் சூழ்நிலைகளில் எவ்வாறு பயனளிக்கக்கூடியதாக மாற்றலாம் என்று சிந்தித்து செயற்பட்டால் எமது நாட்டை வளம் கொழிக்கும் நாடாக மாற்ற முடியும். எமது மக்களுக்கும் அது ஒரு வரப்பிரசாதமாக அமையும்? எந்தவொரு சரித்திர முக்கியத்துவமான காலகட்டத்திலும் அன்றைய மக்களின் மன நிலையையும் சமுதாயத்தின் மன ஓட்டத்தையும் உணர்ந்து உணர்ச்சிகளைப் பிரதிபலித்த கவிஞர்கள், ஓவியர்கள் எழுத்தாளர்களின் பெயர்கள்தான் இன்றும் கற்களில் பதிக்கப்பட்ட காவியங்களாக திகழ்கின்றன. இன்று தமிழீழ மக்கள் சரித்திர முக்கியத்துவமான காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவராக இருந்தாலென்ன, இடம்பெயர்ந்து உள்நாட்டில் அவதியுறுபவர்களாக இருந்தாலென்ன, தமிழீழத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விடுதலைப் போராக இருந்தாலென்ன, இவை யாவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தன. கலைஞர்கள் இவற்றில் தம்மை முழுமையாக இணைக்க வேண்டும். வெவ்வேறு வடிவங்களில் எமதினத்தின் மனிதாபிமான கோரிக்கைகளை வெளிக்கொணர வேண்டும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், உலகெங்கிலும் பல்வேறு துறைகளிலும் தேர்ச்சி பெற்ற தமிழீழ மக்கள் ஒன்றாகக் குரல் கொடுக்க வேண்டும். இப்படியாக நாம் மாறும் போது நிச்சயமாக தமிழீழ மக்களுக்கு சுபீட்சமான வாழ்வொன்று அமையும். நன்றி.

★★

**திட்டம், ★ சமூக நலத் திட்டம், ★ மனித வள மேம்பாட்டுத் திட்டம், ★ சமூக அபிவிருத்தித் திட்டம், ★ கிராமியக் குழந்தைகள் திட்டம், ★ கல்விச் சேவைத் திட்டம்**

**எனப் பல திட்டங்களை செயற்படுத்தி வெற்றிகண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புதிய ஆண்டில் புனிதமான சேவையில் பங்காளி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் புதிய முயற்சியை ஆரம்பித்து ஒரு குடை நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.**

தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனங்கள்:

**யாழ்ப்பாண மாவட்டம்**

★ வடக்கு- கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், ★ யாழ்ப்பாண அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், ★ சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம், ★ முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், ★ உழைப்பாளரை இழந்த பெண்களுக்கான வாழ்வு நிலையம், ★ வலுவிழந்தோருக்கான வாழ்வு நிலையம், ★ போசாக்கு புனர்வாழ்வு நிலையம், ★ வாழ்வகம், ★ அறிவு வளர்ச்சி நிலையம், ★ வெண்புறா தொழில்நுட்ப நிறுவனம், ★ சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனம், ★ சமுதாய முன்னேற்றக் கழகம்

**கிளிநொச்சி மாவட்டம்**

★ வடக்கு – கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், ★ கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம், ★ கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம், ★ அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம், ★ கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழகம், ★ கிராமியப் புனர் வாழ்வு அபிவிருத்தி நிறுவனம், ★ அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், ★ பூநகரி – அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம், ★ பூநகரி – முழங்காவில் அபிவிருத்தி நிறுவனம், ★ வெண்புறா தொழில் நுட்ப நிறுவனம், ★ முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், ★ காந்தி நிலையம், ★ குருகுலம், ★ போசாக்குப் புனர்வாழ்வு நிலையம், ★ சமூக தேவைகள் உதவி நிறுவனம், ★ பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், ★ அறவழிப் போராட்டக் குழு, ★ அறிவு வளர்ச்சி நிலையம், ★ நடமாடும் துவிச்சக்கர வண்டி மீன் வணிகர் மன்றம், ★ சிறுவணிகர் மன்றம், ★ சமூக மேம்பாட்டு நிறுவனம், ★ சமுதாய முன்னேற்ற நிலையம், ★ பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், ★ யாழ் இடம் பெயர்ந்தோர் நலன்காக்கும் நிலையம்

**முல்லைத்தீவு மாவட்டம்**

★ விசுவமடு அபிவிருத்தி நிறுவனம், ★ சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், ★ அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், ★ வடக்கு – கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், ★ முல்லைத்தீவு மக்கள் நலன்புரிச் சங்கம், ★ முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், ★ மாங்குளம் அபிவிருத்தி நிறுவனம், ★ முறிகண்டி அபிவிருத்தி நிறுவனம், ★ பாண்டியன்குளம், துணுக்காய் புனர்வாழ்வுக் கழகம், ★ முல்லை விதை உற்பத்தி நிறுவனம்

**வவுனியா மாவட்டம்**

★ வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், ★ வவுனியா அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், ★ நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், ★ வடக்கிற்கு வெளியே செல்லும் வணிகர் மன்றம்

**மன்னார் மாவட்டம்**

★ மன்னார் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம், ★ மாந்தை மேற்கு அபிவிருத்தி நிறுவனம், ★ வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், ★ இரணை இலுப்பங்குளம் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 ஆண்டு சேவையில் ஆதரவற்ற, பாதிக்கப்பட்ட வறுமைக்குட்பட்ட, வலுவிழந்த, மக்களிற்கு ஆற்றப்பட்ட பணியில் எம்முடன் ஒத்துழைத்து நிதி உதவி அளித்து அன்பளிப்புக்கள் வழங்கி புரிந்துணர்வுடனும் பாசத்துடனும் மகிழ்வுடனும் நிறைவுடனும் செயற்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக சர்வதேச கிளையினருக்கும், சர்வதேச வாழ் தமிழ் மக்களுக்கும், பங்காளி நிறுவனங்களோடு தோளோடு தோள் நின்று செயற்பட்ட சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், அரச திணைக்களங்களிட்கும், பொது மக்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் நன்றி அறிதலையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு எதிர்காலத்திலும் ஆக்கமும், ஊக்கமும் பங்களிப்பும் நல்கி புரிந்துணர்வுடன் ஒருங்கிணைந்த சேவை செய்வோம் என்பதில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் நிறைவடைகிறது எனவும் தெரிவித்திருக்கிறார்கள்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

புலம் பெயர் வாழ்வு

# தாயகம் நோக்கிய பயணத்தேடல்

**புலம்பெயர் வாழ்வியல் சமூகச்சூழல் பல பிரச்சினைகளை, சிக்கல்களை கொண்டதாக இருக்கின்றது. இத்தகைய சூழல் பற்றிய தெளிவும், அறிவும் மிக அவசியமானதாக இருக்கின்றது. புலம் பெயர் வாழ்க்கைச் சூழலை மேம்பாடடைய வைப்பதற்கான முன்னெடுப்புக்களை பல வழிகளில் நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளோம். எமது சகல பிரச்சினைகளுக்குமான தீர்வு பற்றி பல கோணங்களில் நாம் அலசி ஆராயவேண்டியவர்களாக உள்ளோம். அதனை மக்கள் முன்வைக்கவேண்டும் எனும் ஆதங்கத்தில் எரிமலை சஞ்சிகையில் இவ்விவாத அரங்கை நடத்தினோம். சமூகத்தின் பலதரப்பட்ட நிலைகளில் உள்ளவர்களிடம் இக்கேள்விகளை அனுப்பி தனித்தனியாக அவர்களோடு நாம் பெற்ற விடைகளை உங்கள் முன் தருகின்றோம். இத்தகைய முயற்சிகள் பரவலாக பல வழிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எமது ஆதங்கம்; ஆனால் இது ஒரு ஆரம்பமே.**

## புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது தாயகத்திற்கு திரும்பிப் போவார்கள்; திரும்பிப் போகமாட்டார்கள்.

**தமிழர்களது பிரச்சினைகளை வேற்று மொழி பேசுபவர்களும் அறிந்து கொள்ளும் வகையில்ஆரம்பத்தில் saturday Reviw எனும் ஆங்கிலப் பத்திரிகையினையும் தற்போது Hot Spring என்னும் ஆங்கில இதழினை வெளிக்கொண்டு வரும் முயற்சியில் பல கஸ்டங்கள், பிரச்சினைகள் மத்தியிலும் தளராது செயற்பட்டு வரும் 'ஐயா' என்று எம்மால் அழைக்கப்படும் எஸ். சிவநாயகம் அவர்களுடன் உரையாடிய போது;**

புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது தாயகத்திற்கு போவார்கள்? போகமாட்டார்கள்? என்பதில் ஒரு விடயத்தை நாங்கள் எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டும். அதாவது ஒரு தீர்வு ஏற்படும் பட்சத்தில், புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் கிட்டத்தட்ட 5 இலட்சம் தமிழர்கள் என்று பார்த்தால் இதில் கூடுதலானவர்கள் அகதிகளாகவே இருப்பார்கள். இவர்களை இங்கு உள்ள அரசாங்கங்களே விரட்டுவார்கள்; எனவே அது அவர்களின் விருப்பத்தில் தங்கியிருக்கவில்லை; மேல் நாட்டு அரசாங்கங்களே அவர்களை திரும்பிப் போகும்படி கட்டாயப்படுத்தும். நீங்கள் கேட்ட கேள்விக்கு இது பதில் இல்லை; இருந்த போதும் எங்களது சொந்த விருப்பத்தின் படியாக இது நிகழாது.

பொதுவாக எந்த நாடுகளில் அரசாங்கங்கள் திரும்பிப் போகும்படி விரட்டுமோ அந்த நாடுகளில் வாழ்பவர்களிடம் நாட்டுப்பற்று அதிகமாக இருக்கும். அது ஒரு நிர்ப்பந்தம்; நாட்டுக்கு போக வேண்டுமே என்ற உணர்வை எப்போதுமே அணையாமல் வைத்திருக்கும். மற்றது பாருங்கள் மேல் நாடுகளில் சொகுசான வாழ்க்கையை வாழ்ந்து பழகியவர்களுக்கு அதை விட்டிற்றுப் போகமுடியாது என்ற எண்ணம் வரலாம்; சொந்த மண்ணிலேயே இந்த சொகுசுகளை அனுபவிக்க முடியும் என்பதை உணர்ந்தவர்கள் மத்தியல் மாறுதல்கள் இருக்கும்.

### — விவாத மேடை —

ஆனால் புதிய தலைமுறை, மேல் நாடுகளில் பிறந்து வளர்ந்த தலைமுறை அவர்களைப் பொறுத்த வரையில் எண்பது, தொண்ணூறு வீதமானவர்கள் திரும்பிப் போகமாட்டார்கள் என்றுதான் கூறமுடியும். நாட்டைப் பார்க்க விருப்பமாயிருக்கும். 'ரூறிஸ்ற்றாக' போகலாம். அவர்களிடம் பெற்றோரின் நாடு என்ற ஒரு தாகம் இருக்கும். ஆனால் நிரந்தரமாக வந்து தங்கி விடுவார்கள் என்பதற்கில்லை. தனித் தமிழ் ஈழம் வந்தாலும் அபிவிருத்தி அடைவதற்கு கொஞ்சக் காலம் எடுக்கும். இந்தியாவில் இருந்தே 'இஞ்சினியரிங்' செய்த எத்தனையோ பேர் இந்திய நாட்டுக்கு பயன்படாமல் அமெரிக்காவிலேயே போய் மேற்படிப்புக்களை மேற்கொள்கின்றார்கள். அந்த நாட்டில் ஆராய்ச்சிக்கூட வசதிகள், பல்கலைக் கழக வசதிகள் இருப்பதால் அவர்கள் அந்நிய நாடுகளையே நோக்கிப் போகிறார்கள். அப்படியிருக்கையில் அந்நிய நாட்டில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் திரும்பி தமிழீழத்திற்கு 'போவார்கள் என்று நாங்கள் நம்பியிருக்க முடியாது; மொழிப்பிரச்சினையும் வருகிறதே.

இப்ப பாருங்கள் அவர்கள் பிறந்த நாட்டு மொழியிலேயே படிப்பைத் தொடர்ந்தவர்கள். உதாரணத்துக்கு 60, 70–களிலே மேல்நாட்டுக்கு வந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழ்கிறார்கள்; அவர்களுக்கு இன்று இருக்கும் போர்ச்சூழலில் கூட நாட்டுக்கு போய் வரவேண்டும் என்ற ஆதங்கம், கவலை, துடிப்பு இருக்கிறது. அதற்காக அவர்கள் அங்கு நிரந்தரமாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

**லண்டனில் வாழும் நீற்றா பற்றி மாகரன் அவர்களை தொடர்புகொண்டு எமது கேள்வியை அவரிடம் தொலையெழுதி மூலம் அனுப்பினோம். அவர் அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கையில் தாயகம் பற்றிய தேடலின் களை கொண்டிருந்த குரலோடு யார்தான் இந்த நாடுகளில இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்றபடி தொடர்ந்தார்.**

புலம்பெயர்ந்த தமிழர்கள் திரும்பிப் போவதும் போகாததும் நாம் ஏன் புலம் பெயர்ந்தோம் என்பதிலும், இங்கு எப்படி வாழ நினைக்கின்றோம் என்பதிலும், நாளை எப்படி வாழ நினைக்கின்றோம், எம்மேல் நாம் வாழும் புலம்பெயர் தேசம் எத்தகைய அழுத்தங்களை ஏற்படுத்துகிறது, ஏற்படுத்தும் என்பதிலும் தங்கி உள்ளது.

பொதுவாக நாம் அனைவருமே சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தினால் உருவாக்கப்பட்ட இனங்காணக் கூடிய அம்சம் காரணமாக புலம் பெயர்ந்தவர்கள். நாம் எமது தாய் மண்ணை வெறுக்கவில்லை; மறக்கவில்லை; எங்கள் நெஞ்சங்களில் நாளும் பொழுதும் எம்தாய் மண்ணின் நினை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வுகளை நிகழ்வுகளை சுமந்து கொண்டேயிருக்கின்றோம். சுருக்கமாகச் சொன்னால் – என்று பிரச்சினை தீரும் எம் மண்ணில் விழுந்து புரண்டு எம் சொந்தங்களுடன் கட்டித் தழுவி மகிழ்ந்திடலாம் என்பதே எம் நெஞ்சத்து ஏக்கம். அது மட்டுமல்ல எமது குடும்பத்தின் கிட்டிய உறுப்பினர்கள் அங்கே வாழ்வுக்காக போராடுகையில் நாம் இங்கே வாளாவிருப்பது என்பது அர்த்தமற்ற ஒன்றாகவும் உள்ளது. அதனால் எங்கள் போராட்டமும் வெற்றிபெற்றால் தான் எம் மனப்போராட்டமும் முற்றுப்பெறும் என்பதை உணர்ந்து புலம் பெயர்ந்தவர்களாகிய நாம் அனைவருமே எங்களுக்காய் எங்கள் மக்களுக்காய் தேசவிடுதலையை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் தமிழீழத் தேசத் தலைவர் பிரபாகரனுடனும் இணைந்து எம்மாலான நிதியும், மதியும் அளித்து தாயக மக்களின் விடுதலைத் தேவையையும் சிங்கள அந்நிய அரசின் ஆக்கிரமிப்புக் கோலங்களையும் உலகுக்கு உணர்த்தியும் வருகின்றோம்.

**எரிமலை: இத்தகையதொரு உணர்வுப்பற்று நிலையை சாகடிக்கக் கூடியதான புறச்சூழல் ஒன்றிருப்பதாக கருதுகிறீர்களா?**

இந்த உணர்வுகள் எம்மில் பலரை தமிழீழ மக்களாகவே புலம்பெயர் நாடுகளில் வாழவைத்தாலும், வாழும் சூழ்நிலை, வாழும் வயது, அமையும் குடும்ப அமைப்பு, அந்நியசூழலில் வளரும் எமது குழந்தைகளின் எதிர்பார்ப்புக்கள் என்பன எம்மேல் புலம்பெயர் நாடுகளின் போக்குக்கும், நோக்குக்கும் ஏற்ப மாறவேண்டிய அழுத்தங்களை பிரயோகிக்கின்றன. இவைகளுடன் நாம் நடாத்தும் வாழ்க்கைப் போராட்டத்தில் நாம் முகமில்லாத மனிதர்களாக மாறி வருகின்றோம் என்றால் அதுதான் நாம் எமது சொந்த மண்ணைப் பிரிந்ததற்கான காலத்தண்டனையாக அமைகிறது. உறவில் தங்கி வாழாத் தன்மை (Independency), உயர் தொழில்நுட்ப வாழ்க்கைச் சூழ்நிலை (High technological life) என்பற்றில் சிறு பிள்ளை முதலே வாழும் எம் குழந்தைகள் நாளை எம்மோடு எம் மண்ணுக்கு வருவார்களா என்ற கேள்விக்கு, சுற்றுலாவாகத்தான் வருவார்கள் என்பதே என் பதில்.

அப்படியானால் அவர்கள் ஐரோப்பியராயோ, கனடிய, அமெரிக்க அவுஸ்ரேலியராயோ வாழ்ந்திடல் சாத்தியமா என்ற கேள்விக்கும் பெரும்பாலும் இல்லை என்றுதான் கூறுவேன். காக்கைக் கூட்டில் குயில் சேர்ந்து வாழ முடியவில்லை. இதற்கு உதாரணமாக வெள்ளைத் தோல் கொண்ட பிரெஞ்சு, ஐரிஸ், ஸ்கொட்லாண்ட், ஜேர்மனிய, அமெரிக்க, அவுஸ்ரேலிய மக்களிடையே ஒருவருக்கொருவர் நாகரீகமாக நடாத்தும் 'தேசிய உணர்வுப் போராட்டங்களை' நாம் பார்க்கின்றோம். அப்படியிருக்கையில், மொழியால், நிறத்தால், பெரும்பாலும் மதத்தால், பண்பாட்டால் மாறுபட்ட எம் குழந்தைகள் எப்படி இங்கு வாழப் போகின்றன. அதுவும் ஒரு போராட்டமே.


அப்படியானால் இந்திய – பாகிஸ்தான், கிழக்கு – மேற்கு பாகிஸ்தான் யுத்த நேரங்களில் வந்த இந்தியர், பாகிஸ்தானியர் ஆசிய ஆங்கிலேயராக இங்கேயே தங்கி விட்டனரே என்பவர்களுக்கு என்ன கூறலாம்?

அவர்கள் இங்கு வாழ்ந்தாலும் என்றும் அவர்கள் பிரதான சமூகத்தின் பார்வையில் அந்நியரே. 'பாக்கி' என்ற சுட்டுப் பெயரே யு.கே வாழ் அவர்களின் சொந்தப் பெயராக இருக்கின்றது. இருந்த போதிலும் அவர்கள் இங்கு துன்புறுத்தலுக்கு உள்ளாகாதவாறு அவர்கள் காக்கப்படுவது அவர்களுக்கு என்று ஒரு நாடு தனியான தேசிய பாதுகாப்புடன் திகழ்வதே. இந்தியா என்றொரு நாடு இருப்பதனால் தான் இந்தியன் உலகில் எங்கும் தலை நிமிர்ந்து வாழ்கின்றான். அவனின் கலாச்சாரமும் அவன் வாழும் நாடுகளிலும் தொடர்கிறது.

பாகிஸ்தானுக்கும், பங்காளதேஷுக்கும் இது பொருந்தும். ஆனால், எங்களுக்கு என்று ஒரு நாடு இதுவரை இல்லை. இனியாவது அந்நாடு உருவானால்தான் எமது குழந்தைகளும் எங்குவேண்டுமானாலும் தலை நிமிர்ந்து வாழலாம். நாமும் எங்கு வேண்டுமானாலும் தன்மானத்துடன் வாழலாம். விரும்பும் நேரம் சொந்தமண்ணிலும் சென்று வாழலாம். ஆகவே புலம் பெயர்ந்த தமிழர்கள் தமது தாயகம் திரும்பிப் போவதும் போகாததும் அவர்களது தாயகம் சுதந்திர நாடாக மாறுவதில் தங்கியுள்ளது என்பதே என் பதில். இறுதியாக, இன்று ஐரோப்பா ஐரோப்பியர்களுக்கு எனும் உணர்வு வேகப்படுத்தப்படுவதும், சர்வ தேச பொருளாதார மாற்றங்களும் நாளைய உலகில் ஆசிரியர்கள் ஆசியாவை நோக்கி திரும்ப வேண்டிய பலாத்கார பேரபாயமும் வளர்ச்சி பெற்று வருகிறது. இச்சூழலில் எமக்கென்று ஒரு நாட்டின் தேவை நிதர்சனமாகிறது. எனவே தமக்காக மட்டுமல்ல எமக்காகவும்தான் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தினை தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களும் மேற்கொண்டுள்ளனர் என்ற உண்மையினை மனதிருத்தி செய்ய வேண்டியவற்றை நாம் ஒழுங்காக செய்தால் இக் கேள்விக்கான விடையும் சுதந்திரமான பதிலாக அமையும்.

**ஆசிரியர் திரு. கி. செல்லத்துரை அவர்களுடன் நாம் பேசியபோது,**

தமிழ் மக்கள் புலம்பெயர்வதற்குரிய காரணிகளை தமிழ் மக்களின் நல்வாழ்வோடு சம்பந்தப்படாத வெளிச் சக்திகளே எப்போதும் தீர்மானித்து வந்துள்ளன. 1956 கலவரம் முதல் 1983 யூலைக் கலவரங்கள் வரை இலங்கைத் தீவிற்குள் தமிழ் மக்களைப் புலம்பெயர வைத்த சக்தி எது? இந்தப் புலம்பெயர்வுகளைத் தமிழ் மக்களா தீர்மானித்தனர்? தமிழகத்திலிருந்து ஈழத் தமிழ் அகதிகள் சுயவிருப்பின் பேரிலா நாடு திரும்பினார்கள்? 'சூரியக் கதிர்' தமிழ் மக்களில் எத்தனை இலட்சம் பேரை அகதிகள் ஆக்கியது? என்ற வினாக்களுக்கெல்லாம் தமிழ் மக்களின் சுயவிருப்பு என்பது விடையல்ல.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## மொழியால், நிறத்தால், பெரும்பாலும் மதத்தால், பண்பாட்டால் மாறுபட்ட எம் குழந்தைகள் எப்படி இங்கு வாழப் போகின்றன.

கிரேக்கக் கடலில் மூழ்கிச் சாகுமளவிற்கு பாரதூரமாகிவிட்ட புலம்பெயர் வாழ்வை எந்த இனமும் சுயவிருப்புடன் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. இது போலவே மேலை நாடுகளிலும் தமது இருப்பை தாமே தீர்மானிக்குமளவிற்கு புலம்பெயர் தமிழினம் காலூன்றியிருப்பதாகத் தெரியவில்லை. எப்போதுமே, திரும்புவதா? தங்கி விடுவதா? என்ற கேள்விக்கான பதிலை மக்கள் சுதந்திரத்தின் முன் ஒருவிதமாகவும்; சுதந்திரத்திற்குப்பின் வேறொரு விதமாகவும் தீர்மானிப்பதே வழமையும்; வரலாறுமாகும். தமிழீழ விடுதலைக்குப் பின் புலம்பெயர் சமூகம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய மாற்றத்திற்கு தன்னை எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டியது அவசியம். தவறினால் அதை எதிர்நோக்கக்கூடிய சூழ்நிலையை அவர்கள் எதிர்கொள்ள நேரலாம். அகதிகள் விடயத்தில் மேலை நாடுகளின் கொள்கை எந்தப் பக்கத்திலும் பாயக்கூடிய விதமாக மதில் மேல் பூனையாகவே இருந்து வருகிறது. தமிழ்மக்கள் தாமாகத் திரும்பலாம்; ஆனால் அவர்கள் தங்கியிருக்கலாமா? என்ற கேள்விக்கான விடையைத் தீர்மானிக்கும் வல்லமையை அவர்கள் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

**19 வயது மாணவியான செல்வி விஜிதாவிடம் கேட்டபோது,**

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில் மூன்றில் ஒரு பங்கானவர்கள் தான் தாயகத்திற்கு திரும்பிப் போகக்கூடிய நிலை வெளிநாடுகளில் இருந்து வருகின்றது. எமது புலம் பெயர்ந்த தமிழர்களில் பலர் வெளிநாட்டு சமுதாயத்துக்குள் சென்று கொண்டு இருக்கின்றனர். அவர்கள் அதுவே தமக்கு சிறந்தது என்றும், அதுவே தமக்கு பெருமை தரக்கூடிய ஒரு விடயம் என்றும் எண்ணி வருகின்றனர். இப்படி இருப்பவர்கள் தாயக வளர்ப்புக்கு எந்த உதவியும் செய்யாமல் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இவர்களில் பலருக்கு எதிர்காலத்தில் வரக் கூடிய பிரச்சினைகள் தெரியவில்லை. ஆனால் அவர்கள் திரும்பிப்போக விரும்புகின்றார்களோ இல்லையோ அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். எங்களின் சொந்த நாட்டைப் போல எந்த நாடும் இருக்காது என்ற எண்ணத்துடன் தாயகத்தை மீட்க உதவி புரியும், பாடுபடும் புலம்பெயர் மக்கள் நிச்சயமாக தமது தாயகம் திரும்புவார்கள்.

**குடும்பத் தலைவி திருமதி. புவனாவிடம் கேட்டபோது,**

புலம் பெயர்ந்து வாழும் எமது மக்கள் ஐரோப்பிய நாடுகளின் சொகுசு வாழ்க்கைக்கு தமது உடலைப் பழக்கப் படுத்தி விட்டார்கள். குழாயை திறந்ததும் குளிர் தண்ணீர், சுடுதண்ணீர், மற்றும் பல மின்சார சாதனங்களினால் தமது அன்றாட தேவைகளை இலகுவாக செய்யப்பழகி விட்டார்கள். உதாரணமாக மின் அடுப்பு, உடைகளைத் தோய்க்கும் இயந்திரம், கொம்பியூற்றர், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வீடியோப் படங்கள் ஓடும் டெக் என்பன. புலம் பெயர்ந்த ஆண்களில் அநேகமானோர் மதுவுக்கு அடிமையாகி விட்டனர். ஐரோப்பிய நாடுகளில் பலதரமான மது வகைகள் தாராளமாகவும் இலகுவாகவும் கிடைக்கிறது. மற்றும் புலம் பெயர்ந்து வாழும் ஒருவருக்கு வேலை இல்லாத பட்சத்தில் உதவித் தொகை கிடைக்கிறது. அத்தோடு புலம் பெயர்ந்து வாழும் எமது இளம் சந்ததியினர் ஐரோப்பிய பண்பாட்டுக்கேற்ப தம்மை மாற்றி அவர்களைப் போலவே வாழ முற்படுகிறவர்களும் இருக்கிறார்கள். இருந்தும் இந்த வாழ்க்கையை அலுத்துக் கொள்பவர்களும் இருக்கிறார்கள்; இவர்கள் நிச்சயம் தமது தாயகத்திற்கு போவார்கள்.

**டென்மார்க்கில் வசிக்கும் ஆசிரியை பாப்பாவைக் கேட்டபோது:**

புலம்பெயர்ந்து வாழும் பெரும்பாலான தமிழர் தாயகத்திற்கு திரும்புவார்கள் என்று சொல்வதை விடப் போவார்கள் என்று சொல்வதே பொருத்தமாகும். எந்த நிலையில் என்றால், யுத்தம் ஒரு முடிவிற்கு வந்ததன் பின் நிச்சயமாக போவார்கள். போகுமுன் நல்ல வசதியான வாழ்வுக்கான அத்திவாரங்களோடு போவார்கள். கோடை விடுமுறைக்குப் போயிற்று வருகிறவர்களும் இருப்பார்கள்.

**நோர்வேயில் வசிக்கும் சோதியா அவர்களைக் கேட்டபோது,**

விரும்பியோ விரும்பாமலோ புலம்பெயர்ந்த தமிழர்கள் இன்று வெவ்வேறு நாடுகளில் காலூன்றத் தொடங்கிவிட்டார்கள். நிரந்தர சமாதானமும், சமூக சூழ்நிலையும் தாயகத்தில் தாமதப்பட இந்தப் புலம்பெயர்ந்த சமூகம் தாயகம் திரும்புவது தள்ளிப் போடப்படவே செய்யும். இது இயல்பு. ஆனாலும் நாட்டில் ஒரு சகஜநிலை தோன்றும்போது கூட அனைவரும் திரும்புவார்கள் என்று கூறிவிடமுடியாது. அதற்கு இரு முக்கிய காரணிகளைக் குறிப்பிடலாம்.

1) பிள்ளைகளின் கல்வித் தொடர்ச்சி
2) தாயகத்தில் வாழ்க்கைக்கான தொழில் வாய்ப்பு

இந்த நாடுகளில் தாய் மொழியை ஆர்வத்தோடு கற்று வரும் மாணவர்களுக்கு இந்தக் கல்வித்தொடர்ச்சி என்பது கூட அங்கு பெரும் பிரச்சினையாக மாறாது. ஆரம்பத்தில் உடன் இணைவதில் சிறு தாமதமிருந்தாலும் விரைவில் இவ்விடைவெளி சீராகிவிடும். கணிசமான தொகையினர் நாடு திரும்பும்போது அவர்களுக்கான பிரத்தியேக பயிற்சி வகுப்புக்கள் மூலம் விரைந்து வழமையான வகுப்புக்களில் அவர்களை உள்வாங்கி விடலாம்.

பணமாகவோ அன்றி தொழில்நுட்பமாகவோ உள் வரும் மூலவளங்கள் கூட அங்கு வெவ்வேறுபட்ட தொழில் முயற்சிகளுக்கு அத்திவாரமிடப்பட்டு தொழில் வாய்ப்புப் பிரச்சினையைக் கூட ஓரளவு சீர் செய்யும். கௌரவமான நிரந்தர சமாதானம் தோன்றி இவை போன்ற சில முக்கிய தடைக்கற்கள் அகற்றப்படுமிடத்து கணிசமான தொகையினர் நாடு திரும்புவர்.

**ஜேர்மனியில் உள்ள ஓவியர் கண்ணாவிடம் கேட்டபோது,**

புலம் பெயர்ந்த நமது மக்கள் தாயகத்திற்கு நிச்சயம் ஒரு நாள் திரும்புவார்கள். ஆனால் எப்படித் திரும்புவார்கள். ஒன்று முதுமை விரட்ட தனிமை வாட்ட யன்னல் வழி விழி பார்த்து நிற்க கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெறுமை! வெறுமை இரண்டாவதாக இடம் தந்தவர்கள் தங்களுக்கு இடம் இல்லை என்னும் போது அதாவது பொருளாதார நெருக்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அவலப் பயணம்

இன்று உலகில் எந்தப் பகுதியிலும் விமான விபத்தோ அன்றி கப்பல் விபத்தோ இடம் பெற்றால் அதில் கொல்லப்பட்ட ஈழத்தமிழர்கள் எத்தனை பேர் என்ற கேள்வியும் அவர்கள் யார் யார் என்ற வினாக்களும் தவிர்க்க முடியாது எழுகின்றன. அந்த அளவிற்கு உலகமெங்கும் தமிழர்கள் அலைந்து திரிகின்றனர். இந்த வகையில் அண்மையில் நடந்த இரண்டு கோர விபத்துக்களிலும் இலங்கைத் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

முதலில், எத்தியோப்பியாவில் கடத்தப்பட்ட விமானம் பின்னர் இந்து சமுத்திரத்தில் உள்ள கொமோரோ தீவுக்கு அண்மையில் கடலில் வீழ்ந்து நொருங்கிய போது ஒன்பது இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அடுத்ததாக, நத்தார் தினத்திற்கு முன்னிரவில் மத்திய தரைக் கடலில் மூழ்கிய இழுவைப் படகு விபத்தில் 85 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இதில் பலியானவர் விபரங்கள் கூட இன்னமும் சரியாகத் தெரியவில்லை.



இந்து சமுத்திரக் கடற்பிராந்தியத்தில் உள்ள கொமொரோஸ் (Comoros) தீவுக்கடலில் புலம்பெயர்ந்த 9 தமிழர்களும் சிக்கி உயிரழந்து போனார்கள்

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணி கடலில் விழுந்து கொண்டிருக்கும் விமானத்தை தற்செயலாக தன் வீடியோ ஒளிப்பதிவுக் கருவிக்குள் அடக்கிய போது எடுக்கப்பட்ட புகைப்படம்

இவ்வாறாக கண்காணாத இடங்களில் அவலமாகப் பலியாகும் தமிழ் மக்களுக்காக எமது இனத்தவர்கள் என்று கவலைப்படுவதா? அன்றி ஆத்திரப்படுவதா? என்ற நிலையே இன்று உருவாகியுள்ளது. அதாவது எமது இனத்தவர்கள் என்ற ரீதியில் அவர்களின் மரணங்கள் குறித்து வருத்தமும், கவலையும் ஏற்படுகின்றன. ஆனால் இவர்களின் குறிக்கோள்கள் நோக்கங்கள் என்பவை குறித்து ஆத்திரமும் கோபமும் ஏற்படுகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டம் தீவிரம் அடைந்த பின்னர் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் மேற்கு நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இதில் பல நாடுகள் அவர்களை வேண்டா விருந்தாளியாகவே நடத்துகின்றபோதும், அவர்கள் அங்கு தமது வாழ்க்கையைத் தொடர விரும்புபவர்களாகவே உள்ளனர். இதற்கு அவர்களினால் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இந்தக் காரணங்கள் சரியானவையா? அன்றி அர்த்தமுள்ளவையா என்பது பற்றிய விடயங்கள் ஒருபுறம் இருக்கட்டும். அதே போன்று விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் தாயக மண்ணை விட்டு தப்பியோடி அந்நிய மண்ணில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும் சரியானதா? என்பது குறித்த விவாதங்களும் ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் இன்று முக்கியமாக எழுப்பப்படும் கேள்வியானது விமான, கப்பல் விபத்துக்களில் அவலமாக எமது தமிழ் மக்கள் இறக்க வேண்டுமா? என்பதே ஆகும். ஒரு வகையில் விமான விபத்துத்தான் தற்செயலான ஒன்றாக இருப்பினும் மத்திய தரைக் கடலில் ஏற்பட்ட கப்பல் விபத்தானது ஒழுங்கற்ற வசதியற்ற பயணத்தினால் ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை. மேற்கு நாடுகளுக்குச் செல்லும் ஒவ்வொருவரும் பல லட்சம் ரூபாவைச் செலவீடு செய்து செல்கின்றனர். அத்தோடு செல்பவர்களில் அநேகர் இளைஞரும், யுவதிகளுமாக இளைய தலைமுறையாகவே உள்ளனர். இவர்கள் தமது மக்களை விட்டு, மண்ணை விட்டு, அங்கு நடைபெறும் விடுதலைப் போராட்டத்தை விட்டு விலகிச் செல்பவர்களாக இருப்பினும் கூட இடை நடுவில் இவர்களுக்கு ஏற்படும் அவலமானது தமிழ்ச் சமுதாயத்தை ஏதோவொரு விதத்திலும் பாதிப்பதாகவே உள்ளது. இந்த வகையில் இவர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் கண்டனத்துக்குரியதோ அன்றி விமர்சனத்துக்குரியதோ என்பதை விட பாதுகாப்பானதா என்பது பற்றி அக்கறை காட்டப்பட வேண்டும். அடைக்கப்பட்ட கதவுகளுக்கு ஊடாக மேற்கு நாடுகளுக்குள் புகுவது சிரமம் என்பது வெளிப்படையான தொன்று. ஆகையினால் அதற்குள் புக முனையுமுன்னர் அதற்கான பாதை பாதுகாப்பா என்பதை ஊர்ஜிதப்படுத்துவது அவசியமானதாகும். இல்லாதுவிட்டால் வான் பரப்பிலும் கடலிலும் அவலச்சாவுகளைச் சந்திக்க வேண்டி வரலாம். ஆனால் இதில் தனியாக வெளிநாடு செல்லும் இளைஞர் யுவதிகளை விட அவர்களது பெற்றோரும் வெளிநாட்டிலுள்ள உறவினர்களுமே அக்கறை காட்ட வேண்டும். ஏனெனில் அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு அநேகமாக இவர்களே தூண்டுதலாக இருக்கின்றனர். இவர்கள் பெருந்தொகைச் செலவில் பாதுகாப்பு அற்ற வழியில் தங்கள் பிள்ளைகளைச் சகோதரங்களை உறவினர்களை அனுப்புவதும், அழைப்பதும் அவர்களை மரணப் பொறிக்குள் தள்ளுவதற்கு ஒப்பானது எனப் புரிந்து கொள்ள வேண்டும்.

★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆசிரியர்கள் மீது சேறுபூசும்

## சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தமிழ்ப்பகுதி ஆசிரியர்கள் எழுதிய திறந்த மடல்



சந்திரிகாவின் பிள்ளைகள் லண்டனில்
தமிழனின் பிள்ளைகள் மரத்தடியில்

அம்மணி,

உயர்நாகரிகமும் எதிர்காலமும் விடுக்கின்ற அறைகூவலை ஏற்கும் பக்குவமும் கொண்ட இளைய சமுதாயத்தை உருவாக்கும் சமூக விஞ்ஞானிகளே ஆசிரியர்கள். தன்னலம் கருதாத ஏணியாகப் பயன்படும் ஆசிரியர்கள் மீது சேறுபூசும் கருத்துக்களை வெயாங்கொடைப் பொதுக்கூட்டத்தில் தாங்கள் வெளியிட்டிருப்பது கண்டு தமிழ்ப்பகுதி ஆசிரியர்களாகிய நாங்கள் அதிர்ச்சிக்கும், அவமானத்திற்கும் உள்ளாகின்றோம். நாட்டின் அதி உயர் பதவியிலுள்ள தாங்கள் பொறுப்பற்ற வார்த்தைகளை உதிர்த்திருப்பதால் எங்கள் கண்டனத்தை தெரிவிப்பதற்கும் தங்கள் பிழையான பார்வையை சுட்டிக்காட்டுவதற்குமாக இந்த மடலை வரைகின்றோம்.

### கல்வித்துறை நிர்வாகத்துறை மாற்றமும் அதற்கான காரணங்களும்.

கல்வித்துறையிலும் நிர்வாகத்துறையிலும் பாரிய மாற்றங்களை கொண்டு வர இருப்பதாக தாங்கள் கூறியிருக்கிறீர்கள். மாணவர்கள் எதிர்காலச் சவாலை எதிர்கொள்ளும் முறையிலான கல்வி முறை, நிர்வாக முறை மாற்றங்களை கொண்டு வருவதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. காலத்திற்கு காலம் பதவிக்கு வரும் அரசுகள் தமது சொந்த சித்தாந்தங்களுக்கேற்ப கல்விமுறை மாற்றங்களைக் கொணர்வதும் அவர்தம் பதவிக்காலத்தின் போது கொண்டு வந்த கல்விச் சீர்திருத்தம் கண்காணாமல் மறைந்து போவதும் நாம் கண்டு அனுபவித்து சலித்துப்போன உண்மையாகும். எனவே தாங்கள் கூறிய அறைகூவல் எமக்கு வியப்பைத் தரவில்லை. கல்வித் தரத்தின் கடுமையான வீழ்ச்சிக்கு காரணம் முன்னைய அரசுதான் என்று சாடியுள்ளீர்கள். மாறி மாறி வரும் அரசுகள் ஒன்றின் மீது ஒன்று பழிகூறுவது, சிறீலங்கா அரசியலில் புதுமையான விடயமல்ல. அதனால் தங்களின் சாடல் எங்களுக்கு வியப்பைத் தரவில்லை. ஆனால் கல்வித் தரம் குறைந்ததற்கான பொறுப்பை ஆசிரியர்களும் ஏற்கவேண்டும் என்று தொடங்கி அதற்குச் சான்றாக தாங்கள் காட்டும் காரணங்களும் குற்றச்சாட்டுகளும் ஆசிரியர் சமூகத்தையே அவமானம் செய்யும் இழிநிலை அரசியலாகும் என்பதை நாங்கள் மிகுந்த பொறுப்புணர்வோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

### காரணவாதமும், புள்ளி விபரமும் தமிழ்ப்பகுதி ஆசிரியர்களுக்கு பொருத்தப்பாடானதா?

தங்களின் காரணவாதங்கள் காட்டுகின்ற புள்ளிவிபரங்கள் எவையும் போர் சூழலினால் சின்னா பின்னப் படுத்தப்பட்டுக் கிடக்கும் தமிழ்ப்பகுதி ஆசிரியர்களான எங்களுக்கு பொருந்தக்கூடியதல்ல என்பதை வெளிப்படையாகக் கூறிக்கொள்கின்றோம். சிங்களப் பகுதிகளின் கல்வித்தரத்தையும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் தகைமையையும் பற்றி மட்டுமே தங்கள் உரை முடிந்ததென்றால் அது ஆராய்ச்சிக்குரியதாகலாம். ஏனெனில் தங்கள் புள்ளி விபரங்கள் காட்டும் கோடிக்கணக்கான செலவுகள், வசதி வாய்ப்புக்கள், சலுகைகள் அங்கேதான் செய்யப்படுகின்றன. ஆனால் குண்டு வீச்சுக்குப் பயந்து பயந்து படிக்கும் மாணவர்களையும், உடைந்து, உருக்குலைந்து அகதியாகப் போன பள்ளிகளையும், மரநிழலிலேயே நின்று பயிற்றுவிக்கும் தமிழ்ப்பகுதி ஆசிரியர்களுக்கும் தங்கள் புள்ளி விபரங்கள் உண்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கருத்துக்களுக்கு கண்டனம்

மைக்கு மாறானது. உண்மைகளைப் புதைகுழிக்குள் மூடி மறைக்கும் அரசியல் நாடகம் என்றே எம்மை எண்ண வைக்கின்றது.

## செலவுப் புள்ளி விபரங்கள் தமிழ்ப் பிரதேசத்தில் செல்லுபடியாகவில்லை

பள்ளிக்கூடக் கட்டிடச் செலவாக வருடா வருடம் 3,000 மில்லியன் ரூபா செலவு செய்யப்படுவதாகக் கூறும் தாங்கள் அந்தத் தொகையில் எத்தனை சதங்களைத் தமிழ்ப்பகுதியிலே செலவிட்டீர்கள்? ஏற்கனவே கட்டப்பட்டிருந்த பாடசாலைகள் உடைத்தெறியப்பட்டனவே தவிர எந்தவொரு மூலையிலும் கட்டடப்பணியில் ஒரு பை சீமெந்து தானும் செலவிடப்படவில்லை என்பதுதான் உண்மையாகும்.

மாணவர் சீருடைக்காக வருடத்தில் 553 மில்லியனைச் செலவிடும் தாங்கள் அந்தச் சீருடைக்கணக்கில் 1 மீற்றர் கூட எமது பகுதிக்கு அனுப்ப

**தமிழ்ப்பகுதிப் பாடசாலைக்கு கூரை கூட இல்லை. மரநிழலின் மத்தியிலே மாணவர் இருக்க கரும்பலகைகூட இல்லா நிலையில் நாங்கள் கல்வி கற்பிக்கின்றோம்.**

வில்லை. வெளிநாட்டு உதவியாக வரும் இவற்றை தமிழ் மாணவரைத் தவிர்த்துத் தானே விநியோகம் செய்கிறீர்கள்.

பாடசாலை உபகரணங்களுக்காகவும், வேறுபல வசதிகளுக்காகவும் கோடிக்கணக்காகச் செலவிடுவதாகக் கூறியுள்ளீர்கள். ஒரு நூறு ரூபா பெறுமதியான கருவி கூட தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்குத் தாங்கள் அனுப்பவில்லை. சிங்களப் பகுதிப் பாடசாலைகளை கொம்பியூட்டர்களால் நிறைக்கும் தாங்கள் தமிழ்பிரதேசத்திற்கு எழுது கடதாசியைத் தானும் அனுப்பவில்லை.

தமிழ்ப்பகுதிப் பாடசாலைக்கு கூரை கூட இல்லை. மரநிழலின் மத்தியிலே மாணவர் இருக்க கரும்பலகை கூட இல்லா நிலையில் நாங்கள் கல்வி கற்பிக்கின்றோம்.

## சம்பள அதிகரிப்பும் தமிழாசிரியர்களின் சம்பளங்களும்

சம்பள அதிகரிப்பைச் செய்தேன் என்று தலைநிமிர்த்திப் பேசும் தாங்கள் தமிழ்ப்பகுதி ஆசிரியர்களின் இடர்களை அறிந்து கொள்ளவில்லை. பெரும்பாலும் எல்லாப் பொருட்களுக்குமே போர் என்ற காரணத்தோடு தடை விதித்துள்ளீர்கள். தடை தாண்டித் தப்பி வரும் பொருட்களோ தாளமுடியாத உச்சவிலைக்கு விற்கப்படுகின்றன. கொழும்பிலே சாதாரணமாக ஒரு ரூபாவுக்கு விற்கும் பொருளை தமிழ்ப் பகுதியில் பத்து ரூபாவுக்கு குறைவாக வாங்க முடியாது. உன்னத இடத்திலே தாங்கள் உயர்த்தி வைத்துப் பேசும் ஆசிரியர் கூட்டம் உடை தைக்கும் ஊசிக்கு கூட தடை இருப்பதால் தவிக்கிறது. மாவரிசை, அரிசிவரிசை, சவர்க்கார வரிசை என்று கடை வாசல்களில் தவம் கிடக்கின்றது. இதையெல்லாம் தாங்கள் உணர்ந்திருந்தும் சம்பள அதிகரிப்பைச் சாதனையாகப் பேசுவது எமக்கு வியப்பைத் தருகிறது.

## ஆசிரியருக்கு சலுகை என்ற பேச்சு தமிழ்ப்பகுதிக்கு இடர்ப்படி மறுப்பு

வேறு எவருக்கும் வழங்கப்படாத சலுகைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதாகப் பேசியிருக்கிறீர்கள். இடம் பெயர்ந்த ஆசிரியர்களை இன்னலின் விளிம்பிலே தள்ளியதைத்தான் சாதனை, சலுகை எனக் கருதுகின்றீர்களோ என நாம் ஐயுறுகின்றோம். குண்டு வீச்சு, எறிகணை வீச்சு, போர் மேகங்கள் ஆகியவற்றின் மத்தியிலே பணிபுரியும் தமிழ்ப்பகுதி ஆசிரியர்களுக்கு மீட்கப்படாத பிரதேசம் என்ற வரைவிலக்கணத்தோடு இடர்படி மறுக்கப்படுகின்றது. போரின் கொடுமைகளும், இடர்களும் பாதுகாப்புப் படைகளால் மீட்கப்பட்ட இடம், மீட்கப்படாத இடம் என்று பேதம் பார்ப்பதில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளோருக்கு இடர்படி வழங்கப்படுவதும், இராணுவக் கட்டுப்பாடுள்ள பகுதிகளுக்கு அப்பாற்பட்டவர்களுக்கு மறுக்கப்படுவதும் தங்கள் அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையைத்தான் காட்டுகிறது. ஒரு கண்ணில் வெண்ணெயும் மறுகண்ணில் சுண்ணாம்பும்தான் ஆசிரியர்களுக்கு தாங்கள் வழங்கும் விசேட சலுகையா?

## ஆசிரியர் மீதான குற்றச்சாட்டுக்கள்

ஆசிரியர் நேரம் தாழ்த்தி பள்ளிக்கு வருவதாகவும், வகுப்பு நேரத்தைப் புறக்கணித்து வம்பளப்பதாகவும், பலருக்கு தொழிற்தகைமையே கிடையாது என்றும் குற்றம் சாட்டியுள்ளீர்கள். இந்த அவசரப் பேச்சானது உண்மையாக உழைக்கும் ஆசிரியர் வர்க்கத்தின் மீது சாக்கடை நீரை வீசுவதற்கு ஒப்பாகும். தங்கள் கருத்துக்கள் சிங்களப் பகுதிகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் கூடும். ஆனால் எமக்கு எவ்வகையிலும் பொருந்தாது. தமிழ்ப் பகுதிகளின் இன்றைய நிலை தங்களுக்குத் தெரியாததன்று. போக்குவரத்துக்கு வாகனங்கள் கிடையாது. இருக்கும்



வாகனங்களுக்கு எரிபொருள், உதிரிப் பாகங்கள் கிடையாது. குண்டும் குழியுமான மரணப் பொறி போன்ற வீதிகளில் எல்லோரும் சைக்கிளின் துணையோடு அல்லது கால்நடையாய்த்தான் நடக்கின்றோம். சைக்கிளுக்குக் கூட உதிரிப்பாகங்கள் கிடையாது. ஒரு சோடி ரயர், ரியூப்பின் விலைக்கு கொழும்பில் ஒரு புதிய சைக்கிளையே கொள்வனவு செய்துகொள்ள முடியும். இத்தகைய நிலையில், நீண்ட தொலை தாண்டி திடீர் திடீரென ஏற்படக் கூடிய போர் நெருக்கடி, உயிர் அச்சுறுத்தல்களைக் கடந்து நாங்கள் எங்கள் பணியைச் செய்கின்றோம். காலதாமதம் செய்வது சமாதானத்திற்கான தங்களின் போர் விளைவிக்கும் கட்டாயமே அன்றி ஆசிரியர்களின் பொறுப்பின்மை அன்று. பாட ஆயத்தத்தை செய்வதற்கான வசதியாவது எமக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குண்டா? சிங்களப் பகுதியில் மின்சார வெளிச்சம் இரவைப் பகலாக்க நாங்கள் குப்பி விளக்கில் கண்களைக் குருடாக்கிக் கொள்கிறோம். பயிற்சி தேர்வு நடத்துவதற்கு எமக்கு வசதியுண்டா? கேள்வித்தாள் தயாரிக்கும் காகிதத்திற்குக் கூட தடை இருக்கிறது. கதிரை, மேசை, கரும்பலகை, கூரையுள்ள பள்ளிக்கூடம், நிம்மதியான சூழ்நிலை என்று எதுவுமே இல்லாத சூழ்நிலையிலும் கூட இவைகளுக்கு எதிராக எதிர் நீச்சலடித்து தாங்கள் குறிப்பிட்டதை



விட மேலான கல்வி அறிவுகளை எமது மாணவர்களுக்கு நாங்கள் பெற்றுத்தந்திருக்கின்றோம். எங்களில் எவரும் வம்பளப்பதில்லை. ஏனெனில் அதற்காக எமக்கு நேரம் கிடைப்பதில்லை. வறுமை, துயரம், உயிர்ப்பயம், கடமை இவற்றுக்கு மத்தியிலே உல்லாச உரையாடலுக்கு எமக்கு நேரமில்லை. எங்களில் எவரும் தகுதியற்ற ஆசிரியர்களில்லை. இத்தனை வசதியீனங்களுக்கு மத்தியில் எமது மாணவர் வெல்லப் படமுடியாதவராக இருப்பதே அதற்கான சான்றாகும். இதனால் தாங்கள் முன்வைத்த புள்ளிவிபரச் செலவுகள் எமது பகுதிக்குப் பயன்படுத்தப்படாததாலும் தாங்கள் சொல்லிய வசதிகள், வாய்ப்புக்கள் எமது ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்கப்படாததாலும் தங்களின் பொறுப்பற்ற குற்றச்சாட்டுக்கள் எம்மைச் சாராது என்பதை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

## இராணுவத்தின் செயற்திறமை.

ஆசிரியர்களின் தகமை பற்றி ஐயக் குரல் எழுப்பும் தாங்கள் இராணுவத்தின் செயற்திறமை பற்றி வியந்து பாராட்டியிருப்பதை எண்ணி நாங்களும் வியப்படைகின்றோம். செயற்திறமை பற்றிய தங்கள் வரைவிலக்கண விளக்கத்தை தங்கள் உரை எமக்கு அடுத்தடுத்து காட்டும் பளிங்கென விளக்குவதால் எமக்கு வியப்புண்டாவது இயல்பானதே. முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் இராணுவம் கட்டம் கட்டமாக ஆளணிகளையும் ஆயுதங்களையும் புலிகளிடம் இழந்ததென்றால் தங்களின் இராணுவம் மொத்தமாகவே வழங்கியிருக்கின்றது. தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. இத்தகைய செயலைத்தான் செயற்திறன் என்று தாங்கள் கருதுவீர்களாயின் அத்தகு நுட்பச்செயற்திறன் எங்கள் ஆசிரியர்களிடம் குன்றியிருப்பதைப் பணிவுடன் ஒத்துக் கொள்கின்றோம்.

## அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அணுகுமுறை

'அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஆசிரியப் பெருமக்களின் அணுகுமுறை பற்றிய தங்கள் கருத்தையும் பார்த்தோம். அமைதி சூழ்நிலையில் அனைத்து வளங்களும் சமமாகப்பங்கிட்டு வழங்கப்படும் சரியான அரசில் கல்வி நிர்வாகத்தில் அந்நாட்டு ஆசிரியப்பெருமக்கள் அச்சமற்று எதிர்காலத்தைத் திட்டமிடுகின்றனர். இங்கே பயந்து பயந்து மண்ணிலே குந்திப் பாடம் படிக்கும் மாணவர்களுக்கு குப்பி விளக்கிலே பாடம் தயாரித்து உயிரைக் கையிலே பிடித்தபடி நாங்கள் படிப்பிக்கின்றோம்.



## ஆசிரியர் தகமை பரீட்சைப் பெறுபேறில் மட்டும் இல்லை

தனித்து பரீட்சை பெறுபேற்றை மட்டும் வைத்து ஆசிரியர்களின் தகமையை தாங்கள் மதிப்பிட்டிருப்பது தவறாகும். கல்வி வீழ்ச்சிக்கான காரணிகளைக் கண்டுபிடித்து நோய் தீர்க்க மருத்துவம் செய்வது தங்களின் கடமையாகும்.

## தமிழ்ப்பகுதிகளின் கல்வி வீழ்ச்சிக்கான காரணம்

தமிழ்ப்பகுதிகளைப் பொறுத்த வரையில் கல்வி வீழ்ச்சிக்கு ஆசிரியர் காரணம் இல்லை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். முன்னைய அரசும் தங்களின் அரசும் கடைப்பிடிக்கும் இனவாதப் போர் முழக்கமே தமிழர் கல்வித் தரத்தின் வீழ்ச்சிக்கான காரணம் என்பதை அழுத்தமாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். அமைதியான சூழ்நிலையை உருவாக்கி இதற்கு உத்தரவாதம் வழங்கி வளங்கள் தரப்பட்டு தமிழ் ஆசிரியர், மாணவர் மனங்களிலே நம்பிக்கையூன்றப்பட்டால் என்றுமே கல்வியின் வல்லமை கொண்ட தமிழ்மாணவ சமூகம் உங்கள் இலக்குளை நூறுமடங்கு தாண்டிச் சென்று திறமையை நிரூபிக்கும்.

## வெளிப்படையாக உண்மைபேசுதல்

சகல வசதிகளும் நிறைந்து வானளாவும் கட்டடங்களைக் கொண்டிருக்கின்ற சிங்களப் பாடசாலைகளையும் அதிலே பயிற்றுவிக்கும் ஆசிரியர்களையும் மனதிலே கொண்டிருந்தால் தங்களது உரையினில் மயக்கத்திற்கிடமின்றி அதனை வெளிப்படையாகக் கூறியிருக்கவேண்டும். மாறாக இருப்பிட வசதிகளின்றி, பாடசாலைகளுக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய வசதிகள் எதுவுமன்றி சமுதாய விருத்தி ஒன்றினையே நோக்கமாகக் கொண்டு, ஆசிரியர் பற்றாக்குறைப் பளுவினைக் கொண்டு, ஆசிரியர் பற்றாக்குறைப் பளுவினைக் கூட தோளில் சுமந்து நலிந்து போன தமிழ்ப்பகுதி ஆசிரியர் சமூகத்தினையும், வாய்ப்பு மறுக்கப்பட்டு வாழும் தமிழ் மாணவ சமூகத்தையும் தங்கள் உரையிலே உத்தேசித்திருப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு முற்று முழுதாக நிராகரிக்கின்றோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






**"காஷ்மீர் மக்கள் இந்தியாவிடமிருந்து விலகிச் சென்று அந்நியப்பட்டதற்கு இந்தியப் பத்திரிகைகளின் வக்கிரப் போக்கே காரணம். காஷ்மீரில் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் திரித்தும், புனைந்தும் இந்தியப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன. இந்திய இராணுவத்தின் அத்துமீறல்கள், அட்டூழியங்கள் பற்றிய செய்திகளை மூடி மறைத்தன. இந்தியாவின் காலனி நாடாக காஷ்மீரை இந்தியப் பத்திரிகைகள் கருதின. முஸ்லீம் நாடான பாகிஸ்தானுடன் சேராமல் இந்தியாவுடன் இணைந்த காஷ்மீர் முஸ்லீம்கள் இந்தியாவுக்கு எதிராகத் திரும்பியதற்கு இந்தியப் பத்திரிகைகளே காரணமாகும்" என பிரபல பத்திரிகையாளரான திருமதி. தல்லின்சிங் எழுதியுள்ளார். "காஷ்மீர் தவறுகளின் சோகவிளைவு" என்ற தலைப்பில் அவர் அண்மையில் எழுதியுள்ள நூலில் இந்தியப் பத்திரிகையாளர்களைக் கடுமையாகச் சாடியுள்ளார். "இந்தியன் - எக்ஸ்பிரஸ்" இதழில் தொடர்ந்து எழுதும் பிரபல பத்திரிகையாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**இந்த நூலை நான் அண்மையில் படிக்க நேர்ந்தபோது, வியப்பினால் என் விழிகள் விரிந்தன.**

# தமிழ் நீரோட்டத்தின் எதிரிகள்

"காஷ்மீர் மக்கள் இந்தியாவிடமிருந்து விலகிச் சென்று அந்நியப்பட்டதற்கு இந்தியப் பத்திரிகைகளின் வக்கிரப் போக்கே காரணம். காஷ்மீரில் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் திரித்தும், புனைந்தும் இந்தியப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன. இந்திய இராணுவத்தின் அத்துமீறல்கள், அட்டூழியங்கள் பற்றிய செய்திகளை மூடி மறைத்தன. இந்தியாவின் காலனி நாடாக காஷ்மீரை இந்தியப் பத்திரிகைகள் கருதின. முஸ்லீம் நாடான பாகிஸ்தானுடன் சேராமல் இந்தியாவுடன் இணைந்த காஷ்மீர் முஸ்லீம்கள் இந்தியாவுக்கு எதிராகத் திரும்பியதற்கு இந்தியப் பத்திரிகைகளே காரணமாகும்" என பிரபல பத்திரிகையாளரான திருமதி. தல்லின்சிங் எழுதியுள்ளார். "காஷ்மீர் தவறுகளின் சோகவிளைவு" என்ற தலைப்பில் அவர் அண்மையில் எழுதியுள்ள நூலில் இந்தியப் பத்திரிகையாளர்களைக் கடுமையாகச் சாடியுள்ளார். "இந்தியன் – எக்ஸ்பிரஸ்" இதழில் தொடர்ந்து எழுதும் பிரபல பத்திரிகையாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நூலை நான் அண்மையில் படிக்க நேர்ந்தபோது, வியப்பினால் என் விழிகள் விரிந்தன.

**பழ. நெடுமாறன்**

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியப் பத்திரிகையாளர்கள் செய்த தவறுகளும், தமிழீழப் பிரச்சினையில் தமிழகப் பத்திரிகையாளர்கள் சிலர் செய்து வரும் தவறுகளும் ஒரே மாதிரியானவை என்பது எனக்குப் புலப்பட்டதுதான் எனது வியப்பிற்கு காரணமாகும். தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர்களில் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் தமிழ் நீரோட்டத்திற்கு எதிராகவே செயல்பட்டு வருகின்றனர். அவர்களது எழுத்தும், கருத்தும் எப்போதும் தமிழர் நலனுக்கு எதிரானவையே.

தமிழ் நாட்டிலிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகளில் பெரும்பாலானவற்றின் போக்கு பத்திரிகைத் தர்மத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திற்கு எதிரானதாகும்.

இந்தியாவிலுள்ள பிறமொழிப் பத்திரிகைகளைவிட தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கு விருப்பும், வெறுப்பும் மிக அதிகமாகும். பொதுவாக ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒரு கருத்தோட்டம் இருக்கும். அவ்வாறு இருப்பது தவறல்ல. தங்கள் கருத்துக்களை அவர்கள் தலையங்கங்களில் வெளிப்படுத்த வேண்டுமே தவிர செய்திகளில் பிரதிபலிக்கக் கூடாது. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு பார்த்துச் செய்திகளை வெளியிடுவது பத்திரிகை தர்மத்தைக் குழிதோண்டிப் புதைப்பதாகும். குறிப்பிட்ட சாதிப் பத்திரிகையாளர்களின் இந்தப்போக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நீண்டகாலமாக அவர்கள் இதைத்தான் செய்துவருகிறார்கள்.

சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற காலத்தில்கூட மிகப் பெரிய தியாகத் தலைவர்களின் செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. வ. உ. சிதம்பரனார், திரு. வி. க. சிங்காரவேலர் போன்ற மாபெரும் தலைவர்களின் செய்திகளுக்கு அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் மேற்கண்ட பத்திரிகையாளர்கள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதை இன்றைக்கு நினைத்துப் பார்த்தாலும் நாம் வேதனைப்பட வேண்டியிருக்கும். நாட்டின் விடுதலைக்காக அவர்கள் பட்ட துயரங்களை, அடைந்த கொடுமைகளை, அனுபவித்த அடக்குமுறைகளை தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் பெரும்பாலானவை கண்டுகொள்ளவே இல்லை என்று சொன்னால் அது சரியாக இருக்கும். தமிழக மக்களை தட்டியெழுப்பும் வகையில் பட்டி – தொட்டிகளிலெல்லாம் சென்று இவர்கள் செய்த வீர முழக்கங்கள் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்டன என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால், இவர்களின் பேச்சுக்களை எந்த அளவுக்கு அந்த நாளில் குறிப்பிட்ட பத்திரிகைகள் வெளியிட்டன என்பதை எண்ணிப் பார்த்தால் நமக்கு கோபம் தான் மிஞ்சும். தமிழகப் பத்திரிகைகளின் இந்தப் போக்குக்கு எதிராக ஏதாவது செய்தாகவேண்டும் என்ற நோக்கத்தில்தான் திரு. வி. க. டாக்டர் வரதராஜலு நாயுடு போன்றவர்கள் சொந்தப் பத்திரிகைகளைத் தொடங்கி நடத்தினார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த காமராஜரைக் குறிப்பிட்ட பத்திரிகைகள் தொடர்ந்து இருட்டடிப்பு செய்தன. காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான தலைவர் பற்றிய செய்திகளை மறைத்துவிட்டு ராஜாஜியைத் தூக்கி நிறுத்துவதில் இந்தப் பத்திரிகைகள் தீவிரம் காட்டின. தமிழ்நாட்டிற்கு ராஜாஜி மட்டுமே தலைவர் போல் இந்தப் பத்திரிகைகள் சித்தரித்தன. ஆனாலும் மக்கள் ஆதரவு என்பது காமராஜருக்குத்தான் இருந்தது. பத்திரிகைகளால் தூக்கி நிறுத்தப்பட்ட ராஜாஜியால் இரண்டு ஆண்டுகள் கூட தொடர்ந்து

> **இலங்கைத் தமிழர் செய்திகளை வெளியிட்டால்தான் தங்கள் பத்திரிகைகளும் விற்பனை ஆகும் என்பதால் வியாபார நோக்கத்துடன் இச் செய்திகளை வெளியிட முன்வந்தன. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக செய்திகளை வெளியிட வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு ஒரு போதும் இருந்ததில்லை. ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் விளைவாகத் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் அனுதாப உணர்வு வளர்வதைக் கண்டு இந்தப் பத்திரிகைகள் பதட்டம் அடைந்தன**

முதலமைச்சராக பதவி வகிக்க முடியவில்லை. பத்திரிகைகளால் இருட்டடிப்பு செய்யப்பட்ட காமராஜர் ஒன்பது ஆண்டு காலம் முதலமைச்சராகப் பதவி வகித்தார். அந்தப் பதவியை வேண்டாம் என்று அவரே தூக்கி எறிகிற காலம் வரை அசைக்கமுடியாத முதலமைச்சராக அவர் விளங்கினார். அதன் பின்னால் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக அவர் உயர்ந்தார். உலக பத்திரிகைகளெல்லாம் அவரை "King Maker" என்று பாராட்டிய பிறகுதான் குறிப்பிட்ட பத்திரிகைகளும் வேண்டா வெறுப்புடன் அவரைப் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் தரத் தொடங்கின.

தமிழகத்தின் தனிப்பெரும் தலைவரான பெரியார் அவர்களை இந்தப் பத்திரிகைகள் முழுமையாக இருட்டடிப்பு செய்தன. ஆனால் அவர் இந்தத் தடையெல்லாவற்றையும் தாண்டி மக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டார். பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும், தனது சொந்தப் பத்திரிகைகளின் வாயிலாகவும் மக்களிடம் அவர் கொண்டிருந்த உறவு பிரிக்கமுடியாததாக இருந்தது. 'சுதேசமித்திரன்', 'தினமணி', 'இந்து', 'எக்ஸ்பிரஸ்' போன்ற அந்த நாட்களில் வெளியான பத்திரிகைகளில் பெரியாரின் பேச்சுக்களோ, அறிக்கைகளோ ஒருபோதும் வெளிவந்ததில்லை. ஆனால் பெரியாருக்கு எதிராக யாரேனும் அறிமுகம் இல்லாத ஒருவர் ஒரு அறிக்கை வெளியிட்டால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தப் பத்திரிகைகள் வெளியிட்டன. பெரியாருக்கு மட்டும் இந்தக் கதி என்பது இல்லை. அண்ணா, ம. பொ.சி. ஜீவானந்தம், கி. ஆ. பெ. விசுவநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் பலருக்கும் இதே கதிதான். மேற்கண்டவர்கள் நடத்திய கட்சி இதழ்களில்தான் அவர்களின் பேச்சுக்குகளும் கட்டுரைகளும் வெளியாகின. இதில் வேடிக்கை என்னவென்றால் *1967*–ஆம் ஆண்டுவரை அண்ணாவை இருட்டடிப்புச் செய்த அதே பத்திரிகைகள் அவர் ராஜாஜியுடன் கூட்டு சேர்ந்த பிறகு பக்கம் பக்கமாக அவரது செய்திகளை வெளியிடத்தொடங்கின. பெரும்பாலான தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கு வாழ்ந்தாருக்கு மாரடித்தே பழக்கம். இந்தப் போக்கு இன்னமும் தொடர்கிறது.

ஈழத் தமிழர் பிரச்சினையில் இப்பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்து வருவது மட்டுமல்லாமல் விஷமத்தனமான செய்திகளையும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. *1948*–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஈழத்தமிழர்களும், இந்திய வம்சாவழித் தமிழர்களும் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளானபோது அவர்களைப் பற்றிய செய்திகளை இந்தப் பத்திரிகைகள் கண்டு கொள்ளவே இல்லை.

*1983*–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கொழும்பில் பெரும் கலவரம் மூண்டெழுந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போது உலக பத்திரிகைகளும், வட இந்தியப் பத்திரிகைகளும் இந்தச் செய்திகளைப் பரபரப்புடன் பிரசுரித்தன. அதற்குப் பின்னால் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளும் விழித்தெழுந்தன. இச்செய்திகளை வெளியிடத் தொடங்கின அதுகூட தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே காணப்பட்ட கொதிப்புணர்வின் விளைவினாலேயேயாகும். இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

படுவதைக் கண்டித்துத் தமிழகமெங்கும் மக்கள் பெரும் போராட்டங்களை நடத்தினார்கள். மக்கள் மத்தியில் காணப்பட்ட இந்த எழுச்சி தமிழ் நாட்டுப் பத்திரிகைகளை ஓரளவுக்குச் சிந்திக்க வைத்தது. இலங்கைத் தமிழர் செய்திகளை வெளியிட்டால்தான் தங்கள் பத்திரிகைகளும் விற்பனை ஆகும் என்பதால் வியாபார நோக்கத்துடன் இச் செய்திகளை வெளியிட முன்வந்தன. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக செய்திகளை வெளியிட வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு ஒரு போதும் இருந்ததில்லை. ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் விளைவாகத் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் அனுதாப உணர்வு வளர்வதைக் கண்டு இந்தப் பத்திரிகைகள் பதட்டம் அடைந்தன.

1987–ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதிலும் ராஜீவ்–ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்தான பிறகு இப்பத்திரிகைகளின் போக்கு அடியோடு மாறத் தொடங்கியது. ராஜீவ்–ஜெயவர்த்தனா உடன்பாட்டை இந்தப் பத்திரிகைகள் விழுந்து விழுந்து ஆதரித்தன. அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்ட புலிகளைக் கடுமையாகச்சாடின. இதற்கு என்ன காரணம்? தமிழீழம் உருவானால் எதிர்காலத்தில் தமிழகமும் பிரிந்துவிடும். சுதந்திரத் தமிழகத்தில் தங்கள் சாதியின் நலன் பாதிக்கப்படும் என இவர்கள் அஞ்சுகிறார்கள். எனவேதான் தமிழீழப் போராட்டத்திற்கு எதிரான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடத் தொடங்கினார்கள். தவறான செய்திகளை, பொய்யான செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டார்கள். இந்த விஷமப் பிரச்சாரத்திற்கு துணைபுரியும் வகையில் இந்திய அரசின் வெளிநாட்டுத் துறையில் அதிகாரியாக இருந்த பார்த்தசாரதி என்பவர் சென்னையிலேயே முகாமிட்டு பொய்யான செய்திகளை உருவாக்கித் தருவதில் முக்கிய பங்கு வகித்தார். இந்திய அரச உளவு நிறுவனம் "ரா" விடுதலைப் புலிகள் பற்றிய தவறான தகவல்களைத் தருவதையே தனது வேலையாகக் கொண்டிருந்தது. இந்தத் தவறான செய்திகளை மறுத்து யாராவது அறிக்கைகள் கொடுத்தால் அவற்றை பத்திரிகைகள் முழுமையாக இருட்டடிப்பு செய்தன.

அமைதிப் படையின் தளபதி லெப். ஜெனரல் கலகத், பார்த்தசாரதி ஆகியோர் ஒருமுறை செய்தியாளர் கூட்டம் ஒன்றினை சென்னையில் நடத்தினார்கள். புலிகளின் முதுகெலும்பை முறித்துவிட்டதாக கல்கத் அறிவித்தார். வட இந்தியப் பத்திரிகை நிருபர் ஒருவர் பின்வரும் கேள்வியைக் கேட்டார்.

"நீங்கள் நாள்தோறும் சுட்டுக் கொன்றதாக அறிவித்த புலிகளின் எண்ணிக்கையைக் கூட்டினால் பத்தாயிரத்திற்கு மேல் வருகிறது. ஆனால் பிரதமர் ராஜீவ் புலிகளின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரம்தான் என்று கூறினாரே, இது எப்படி? என்று கேட்டபோது கல்கத்தும் பார்த்தசாரதியும் திருதிருவென்று விழித்தனர். கூட்டத்திலிருந்த செய்தியாளர்கள் அனைவரும் சிரித்தார்கள். அதைப் போல் கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள பத்திரிகைகள் திரிக்கும் சரடுகளை அப்படியே வெளியிடுவதை குறிப்பிட்ட பத்திரிகைகள் வழக்கமாகக் கொண்டிருந்தன.

தமிழ்நாட்டுப் பத்திரிகையாளரான துக்ளக் "சோ" விடுதலைப் புலிகளுக்கு எதிராக தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறார். 1984–ஆம் ஆண்டில் சென்னை சூளைமேட்டில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு தமிழரை ஈ.பி.ஆர்.

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் பல கொச்சைப்படுத்தியதைப் போல வேறு எந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தையும் யாரும் கொச்சைப் படுத்தியிருக்க முடியாது.**

எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா என்பவர் சுட்டுக் கொலை செய்துவிட்டார். ஈ.பி.ஆர். எல்.எப். இயக்கத்தின் படைத்தளபதியாக இவர் இருந்தவர். அப்போது சென்னை நகரப் பொலிஸ் கமிஷனராக இருந்த தேவாரம் விரைந்துவந்து டக்ளஸ் தேவானந்தாவையும், மற்றும் சிலரையும் கைது செய்தார். அவர்கள் மீது கொலை வழக்குத் தொடுக்கப்பட்டது. அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். 'துக்ளக்' பத்திரிகையில் சோ இந்த நிகழ்ச்சி குறித்து மிகக் கடுமையாக எழுதினார். "தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழர்கள் நமது நாட்டு மக்களை படுகொலை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததே தவறு. அனைவரையும் வெளியேற்றி ஆக வேண்டும்" என்கிற தோரணையில் கட்டுரை தீட்டினார். குறிப்பிட்ட பத்திரிகைகளும், இச்செய்தியையொட்டி கடுமையான தலையங்கங்களைத் தீட்டின. ஆனால் ராஜீவ்–ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்தான பிறகு அதை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்துவிட்டார்கள் என்ற நிலைமையில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு சிறையில் இருந்த டக்ளஸ் தேவானந்தா விடுவிக்கப்பட்டு இந்திய இராணுவ விமானம் மூலம் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டு அவருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு விடுதலைப் புலிகளை வேட்டையாடும்படி ஏவி விடப்பட்டார்.

இன்றைக்கும் டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் அடிக்கடி செய்தியாளர்கள் கூட்டத்தைக் கூட்டி விடுதலைப் புலிகளுக்கு எதிரான அறிக்கைகளை கொடுத்து வருகிறார். அவ்வப்போது சென்னைக்கும் வந்து இங்கும் செய்தியாளர்கள் கூட்டத்தைக் கூட்டி அறிக்கைகள் தருகிறார்கள். தமிழ்நாட்டுத் தமிழர் ஒருவரைப் பட்டப் பகலில் படுகொலை செய்து கையும் களவுமாக பிடிக்கப்பட்ட ஒருவர் மீது தொடரப்பட்ட கொலை வழக்கு என்ன ஆயிற்று? சிறையில் இருந்தவர் தப்பி எப்படி இலங்கைக்குப் போனார்? மறுபடியும் எப்படி சென்னைக்கு வருகிறார்? அதைப்பற்றியெல்லாம் 'துக்ளக்' சோ கவலைப்படவில்லை. ராஜீவின் கொலை வழக்கில் அரசியல் உள்நோக்கத்துடன் சேர்க்கப்பட்ட பிரபாகரனை பிடித்துக் கொண்டு வரவேண்டும் என்று கூப்பாடு போடுகிற துக்ளக் சோவும் மற்ற பத்திரிகை ஆசிரியர்களும் டக்ளஸ் தேவானந்தா விஷயத்தில் வாய் மூடி மௌனம் சாதிப்பதேன்? ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரனின் பங்கு என்ன என்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் டக்ளஸ் தேவானந்தாவோ கொலைக்களத்தில் கையும் களவுமாக பிடிபட்டவர். தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தவர். அவர் எப்படி சென்னையில் பகிரங்கமாக உலவ முடிகிறது. இதைப் பற்றி 'துக்ளக்' ஆசிரியர் கவலைப்பட்டதுண்டா?

1982–ஆம் ஆண்டு ஆசியாவின் மிகப் பெரிய நூலகங்களில் ஒன்றான யாழ் நூலகம் சிங்கள இராணுவத்தினரால் திட்டமிட்டுக் கொளுத்தப்பட்டது. ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையில் முக்கிய அமைச்சராக விளங்கிய காமினி திசநாயகா நேரடியாக யாழ்ப்பாணம் வந்திருந்து நூலக

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தகனத்தை முன்னின்று நடத்தினார். அவருடைய ஆணையின்படி சிங்கள இிராணுவத்தினர் தமிழர்களைக் கொன்று குவித்தார்கள்.

"ஈழத் தமிழினத்தை ஒழித்துக் கட்டியே தீருவேன்" என்று சூளுரைத்து அவ்விதமே செயல்பட்ட திசநாயகா 1994–ஆம் ஆண்டு சந்திரிகாவை எதிர்த்து ஜனாதிபதி தேர்தலில் போட்டி போட்ட போது அவர் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு தமிழ் நாட்டுத் தொழிலதிபர்களிடம் நிதி திரட்டித் தரப்பட்டது. தமிழின எதிரி ஒருவருக்கு தமிழர்களிடம் தேர்தல் நிதி திரட்டப்பட முன்னின்று செயல்பட்டவர் "இந்து" நாளிதழின் இணையாசிரியரான என். ராம் ஆவார். திசநாயகா தேர்தலில் வெற்றிபெற "இந்து" பத்திரிகை பிரச்சாரம் செய்தது.

தமிழின விரோதிகள் யாராக இருந்தாலும் அவர்களுடன் கைகோர்த்துச் செயல்பட இவர்கள் தயங்கமாட்டார்கள் என்பதைத்தான் "இந்து" என். ராம் போன்றோரின் போக்கு எடுத்துக் காட்டுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னாள் "தினமலர்" பத்திரிகையும் முற்றிலும் பொய்யான ஒரு கட்டுக் கதையை வெளியிட்டது. "பிரபாகரன் – மாத்தையா சண்டையில் பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் சடலம் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. மக்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள்" என்று ஈனத்தனமாக எழுதியது. அதே பத்திரிகை சிறிது காலம் கழித்து மாத்தையாவை பிரபாகரன் கொலை செய்துவிட்டதாக செய்தி வெளியிட்டது. இரு செய்திகளும் பொய்யானது என்பது அம்பலமானது. ஆனாலும் இந்தப் பத்திரிகைகள் தங்கள் போக்குக்கு வெட்கப்படவில்லை. மக்களின் மறதியைப் பயன்படுத்திக் கொண்டு புளுகு வியாபாரம் நடத்துகிறார்கள்.

பி.பி.ஸி. செய்தியாளர் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் செய்தியாளர்கள் யாழ்ப்பாணம் சென்று உண்மை நிலைமைகளை நேரில் அறிந்து செய்திகளை வெளியிடுகிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து 'தினமணி'யின் சார்பில் கார்மேகம், 'இந்தியா டுடே' தமிழ்ப் பதிப்பின் சார்பில் வசந்தி, 'சுபமங்களா' பத்திரிகை ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் ஆகியோர் கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் சென்று வந்தார்கள். கார்மேகம் 'தினமணி'யில் எழுதிய கட்டுரைத் தொடர் திடீர் என்று மழுப்பி முடிக்கப்பட்டது. அப்போது அதன் ஆசிரியராக இருந்த மாலன் குறுக்கிட்டு, கார்மேகம் நேரில் கண்டு அறிந்த உண்மைகளை வெளியிட அனுமதிக்கவில்லை. 'இந்தியா டுடே' வசந்தியின் கட்டுரையும் மென்று முழுங்கி எழுதப்பட்டது. தான் கண்ட உண்மைகளை வெளியிட வசந்திக்கு மனமில்லை. 'சுபமங்களா' கோமல் சுவாமிநாதன் ஓரளவு உண்மையை எழுதினார். ஆனால் அவரும் கட்டுப்படுத்தப்பட்டார் என்பது புரிந்தது. ஏன் அவர்கள் இவ்வாறு செய்தார்கள்? வியட்நாம் போராட்டம் பற்றியும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் பற்றியும், தென்னாபிரிக்க மக்கள் நடத்திய போராட்டம் பற்றியெல்லாம் எழுதி நெக்குருகி கண்ணீர் வடிக்கும் இவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி மட்டும் ஏன் கசப்புணர்வுடன் செய்திகளை வெளியிடுகிறார்கள்? தமிழர்கள் நெஞ்சில் எழும் இந்த




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நியாயமான கேள்விக்கு விடை என்ன?

குறிப்பிட்ட தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் தங்களுக்கு எதிராக ஏதேனும் அடக்குமுறைகள் ஏவப்பட்டால் பெரும் கூச்சல் போடுகின்றன. ஆனால், தமிழ் நாட்டில் அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழ் எழுத்தாளர்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளைப் பற்றி இந்தப் பத்திரிகையாசிரியர்கள் கண்டுகொள்ளவே இல்லை. உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் மதிக்கப்படும் எழுத்தாளர்களான சிவநாயகம், கவிஞர் யோகரத்தினம், குகதாசன் ஆகியோர் தமிழ் நாட்டில் அடைக்கலம் புகுந்து இருந்தார்கள். அவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைபிடிக்கப்பட்டார்கள். 60 வயதுக்கு மேற்பட்ட சிவநாயகம் , கை, கால்களில் விலங்கிடப்பட்டு ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்திற்கு இழுத்து வரப்பட்டார். இந்த மூவரும் பின்னர் வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது போடப் பட்ட வழக்குகள் பொய்யானவை என்பது நிரூபிக்கப்பட்டன. அன்றாடும் பத்திரிகை தர்மத்தைப் பற்றி பேசும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் தங்கள் சக பத்திரிகையாளர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி வாயையே திறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போதும் தமிழ்நாட்டில் கடுகளவுகூட செல்வாக்கு இல்லாத சுப்பிரமணியம் சுவாமிக்கு இந்தப் பத்திரிகைகள் கொடுக்கிற விளம்பரம் அளவுக்கு மீறியது. அவருடைய அபத்தமான உளறல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. தமிழீழப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் அவர் சொல்லும் பொய்யான செய்திகளை தொடர்ந்து பிரசுரிக்கின்றன. அவர் தங்கள் சாதிக்காரர் என்பதே இவர்களின் ஆதரவுக்குக் காரணமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் பல கொச்சைப்படுத்தியதைப் போல வேறு எந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தையும் யாரும் கொச்சைப்படுத்தியிருக்க முடியாது. இதே பத்திரிகைகள் நாளை சுதந்திரத் தமிழீழம் மலரும்போது சுதந்திர மலர்களை அச்சிட்டு முகப்பில் பிரபாகரனின் வண்ணப்படத்தை வெளியிட்டு அவற்றையும் விற்றுக் காசாக்கிக் கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. தமிழ்நாட்டு மக்களின் மறதியும், உணர்வற்ற தன்மையும் இந்தப் பத்திரிகைகளுக்கு மூலதனமாக விளங்குகின்றன. வேறு ஒரு நாடாக இருந்தால் இந்தப் பத்திரிகைகளை மக்கள் அடியோடு புறக்கணித்து இருப்பார்கள்.

தமிழ்நாட்டில் தமிழில் பத்திரிகை நடத்தி வயிறு வளர்க்கும் தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் தமிழுக்கும் தமிழனுக்கும் எதிராக எழுதுவதையே தங்களது கடமையாகவும் வாழ்க்கையின் நோக்கமாகவும் கொண்டிருக்கிறார்கள்.

தங்களது வக்கிரப் போக்கினால் இந்தியப் பத்திரிகையாளர்கள் காஷ்மீர் மக்களை அன்னியப்படுத்திவிட்டார்கள். தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்கள் சிலர் தமிழர்களை அன்னியப்படுத்தும் வேலையை வெற்றிகரமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கிரேக்கத்தில் தைத்த முள்

ஒரு பெரிய மலை உச்சியில் வெள்ளை வெளேரென்று பெரிய தூண்கள் எவ்வளவு அழகாகக் காட்சியளிக்கின்றன.

பல்லாயிரம் வருடம் முன்னர் எழுந்த நாகரிகத்தின் சின்னங்களை எப்படிப் பாதுகாக்கின்றனர் கிரேக்கர்கள்.

'அக்ரோபலிஸ்' சைப் பார்க்கும் பொழுதெல்லாம் அருகில் செல்லும் பொழுதெல்லாம்...... அந்த மேதை 'சோக்கரட்டீசின்' 'உன்னையே நீ அறிவாய்' என்ற வார்த்தைகள் காதில் ரீங்காரமிடுகின்றன.

மனித குலத்தின் மேம்பாட்டுக்கு எவ்வளவோ பங்களிப்பை அள்ளி வழங்கியிருக்கிறது கிரேக்க நாகரிகம்.

எந்தத் துறையை எடுத்தாலும் அவர்களது அத்திவாரத்தில்தான் அந்தந்தத் துறை கட்டப்பட்டுள்ளது என்பதைப் பலர் அறிவர்.

கண்கள் கட்டப்பட்டு... கையில் தராசுடன் நீதி தேவதை 'தேமிஸ்' எவ்வளவு தத்துரூபமாய் சிலை வடிக்கப் பட்டிருக்கிறாள்.



'பல்கலைக்கழகம்' என்ற பெயரையே உலகுக்கு அறிமுகப்படுத்தியவனும், 'போலியின் போலியை நாடு கடத்துங்கள்' என முழங்கியவனுமான 'பிளேட்டோ' சிரித்துக் கொண்டிருக்கிறான்.

'பிற்கூற்றிலிருந்துதான் முற்கூற்றின் உண்மை நிரூபணமாகிறது' என்று சொன்ன 'அரிஸ்டோட்டலின்' அளவையியல் தத்துவம் எப்படி இங்கே பொருத்தமாகிறது எனச் சிந்தித்தபடியே 'ஏதன்ஸ்' தெருக்களில் நடந்து கொண்டிருக்கிறேன். அருகில் என் மகனும் தெரு வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டு இழுவிண்டு கொண்டு வருகிறான்.

அவன் கேட்கும் கேள்விகள் ஏராளம்? எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்வது மாபெரும் கடினம் எனினும் முடிந்தவரை முயன்று கொண்டு நடக்கின்றேன்.

கிரேக்க புராணங்களில் வரும் ஏராளமான தெய்வங்களுக்கெல்லாம் சிலை வடித்து வைத்திருக்கிறார்கள்.

அவற்றில் ஏதோ ஒன்றைக்காட்டி இது யார்? என்று என்னைக் கேட்பான். நான் பதிலுக்குத் திண்டாடும் பொழுதுதான் 'கற்றது கை மண்ணளவு' என்ற ஞானம் உதிக்கும். எனினும் 'சமாளிப்புக் கலை'யை சமுத்திர மளவு கற்றதனால் அது அடிக்கடி உதவிக்கொண்டிருந்தது.

விடுமுறையை எப்படிக் கழிக்கலாம் என்ற எண்ணம் வந்தபொழுது, 'பபிலோனியா' நாகரீகம் எப்படி இருந்திருக்கும் எனப் பார்வையிடலாம் என்ற எண்ணம் எழுந்தது.

உலகின் தொன்மையான நாகரிகங்கள் இரண்டு. 1. சிந்துவெளி நாகரிகம் 2. பபிலோனிய நாகரிகம். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் சிந்துவெளி நாகரிகத்தில்தான் மற்றைய நாகரிகம் எப்படி இருந்திருக்கும் என்ற ஆர்வம் நீண்ட நாட்களாகவே இருந்தது. அந்த ஆர்வம் இம்முறைதான் சாத்தியமாகிறது என்பதில் உள்ளூர ஒரு சிறிய ஆனந்தம். 'ஏதன்ஸ்' நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஏதாவது ஒரு தீவில் போய் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு வரலாமென முடிவு செய்தேன். பல அழகிய தீவுக்கூட்டங்களையும் கிரேக்க நாடு கொண்டிருந்தது.

ஏதன்ஸிலிருந்து ஐந்து மணித்தியாலங்கள் ஒரு சிறிய கப்பலில் பயணம் செய்தால் PAROS (பாரஸ்) எனுந் தீவை அடையலாம் என்றார்கள்.

சரி அங்கேயே போகலாம் என முடிவெடுத்து ஏகப்பட்ட உல்லாசப் பயணிகளுடன் நாங்களும் சேர்ந்து கொண்டு பயணித்தோம்.

நீலமும் வெள்ளையுமாய் அழகிய ஒரு தீவு அது. அத்தீவிலுள்ள வீடுகள் எல்லாவற்றுக்கும் வெள்ளைச் சுண்ணாம்புதான் அடித்திருக்கிறார்கள். நீல வானமும் சுற்றவர நீலக் கடலும் இடையிடையே வெள்ளை வீடுகளுமாய் காட்சியளிக்கிற அத்தீவை 'நீல வெள்ளைத் தீவு' எனப் பெயர் சூட்டியிருக்கலாம்.

அந்தத் தீவிலும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் நிலத்தைத் தோண்டி பபிலோனிய நாகரிகத்தின் வேர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

அங்கே NAOSA (நௌசா) எனும் இடத்தில் ஒரு அரும்பொருட்காட்சி சாலை ஒன்றுண்டு. அதனைப் பார்வையிடுவதற்காய் நானும் மகனுமாய்ச் சென்றோம்.

நல்ல வெய்யில், சனக்கூட்டமும் அதிகம். முடிந்தவரை பார்த்துவிட்டு ஒரு மதில் கரையோரம் உட்கார்ந்திருந்தோம். அநேகமாக வெள்ளையர்கள் தான் எல்லோரும். குறிப்பிட்ட சில கறுப்பு உல்லாசப் பயணிகளைத் தவிர. எங்களையும் தவிர.

நாங்கள் இருந்த இடத்தை நோக்கி ஒரு பெண் ஒரு கைக்குழந்தையையும் இடுப்பில் தாங்கிக் கொண்டு எம்மை நோக்கி வந்தாள். அழுக்கேறிய கிளிந்த கந்தல் ஆடை அணிந்திருந்தாள். தலை பறட்டையாய்க் கிடந்தது. முகம் மிகவும் கோரமாய்க் காட்சியளித்தது. கையில் ஒரு 'பிளாஸ்ரிக்' பை வைத்திருந்தாள். அதற்குள் சில அலுமினியப் பாத்திரங்களும் ஒரு நீட்டுப் பாண் துண்டும் சில வாழைப் பழங்களும் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவர்கள் சரியாக எமது நிறத்தினையே கொண்டிருந்தனர். நிச்சயமாக அவர்கள் ஆசியாவிலிருந்துதான் குடிபெயர்ந்திருக்க வேண்டும். அவர்கள் தமிழராகக் கூட இருந்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை.

**க . ஆதவன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


எம்மை நெருங்கிய அவள் அழகான ஆங்கிலத்தில்

"நாளைக்கு எனக்குச் சாப்பாடு இல்லை. பிள்ளையும் பட்டினிதான். உன்னிடம் பணமிருந்தால் கொஞ்சம் கொடேன்" என்றாள்.

அவள் உண்மையான பிச்சைக்காரி என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் எமது சாயலையும் கொண்டிருந்தது மேலும் எனக்கு இரக்கத்தை ஏற்படுத்தியது. அவளுக்கு சிறிது பணத்தைக் கொடுத்தேன்.

அவள் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. "நன்றி, நன்றி" என இரு தடவை சொன்னாள். பின்னர், "எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டாள். "சிறீலங்கா என்றேன் நான்.

"அப்ப பிரச்சினைதான்" என்றபடியே சனக்கூட்டத்தினுள் மறைந்து விட்டாள். அவள் போன பின்னர், மகன் கேட்டான்.

"சிறீலங்கா என்ற சொல்லுக்கு பிரச்சினை எண்டும் வேறை கருத்திருக்கிறதா?" என்று.

எனக்கு நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து ஏதோ இனம்புரியாத ஒரு வலி வாட்டத்தொடங்கியது.

பபிலோனிய நாகரிகத்தின் வேர்களைத் தேடிக் கண்டுபிடித்தும், பாதுகாத்தும் கொண்டிருக்கிறார்கள் கிரேக்கர்கள்.

எனது மகனின் வேரைக்கூட என்னால் பாதுகாக்க முடியாது நான் திண்டாடுகின்றேன்.

பல்லாயிரம் வருடம் முன் தோன்றிய திராவிட நாகரிகம் எமது மண்ணில் எப்படிச் சிதைக்கப்படுகிறது.

அரிய பொக்கிஷங்களாக நாம் சேகரித்து வைத்த லட்சத்திற்கும் அதிகமான புத்தகங்களைக் கொண்ட எங்கள் யாழ் நூல் நிலையத்திற்கு என்னாயிற்று?

ஆயிரம் ஆயிரமாண்டுகளாய் எம் மண்ணில் வாழ்ந்த மக்கள் எப்படி 24 மணி நேரத்தில் இடம்பெயர்ந்தார்கள்? ஏன்?

பல்கலைக்கழகம் என நாம் பாதுகாத்து வந்த எமது அறிவுப் பூங்காவை பாழடித்தவர் யார்?

எமது வழிபாட்டுத் தலங்களில் கூட குண்டுகளைப் பொழிந்த கொடியவர்களை என்ன செய்யலாம்?

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கீரிமலை நகுலேஸ்வரர் போன்ற கோவில்களிலும் திருட்டு.

எங்களுடைய புதைபொருளாராய்ச்சியாளர்கள் தேடித்தேடிக் கண்டுபிடித்த திராவிட நாகரிகத்தின் அடையாளங்கள் வேர்கள் அடங்கிய யாழ் அரும் பொருட்காட்சிச்சாலை எங்கே?

வரலாற்றுச் சின்னங்களை அழிப்போர் மனிதரல்ல. வரலாறு ஒரு முறைதான் நிகழும்.

"ஓடுகின்ற ஆற்றில் நீ இரண்டு முறை குதிக்க முடியாது" என்று சொன்னானே. 'கெராக்லிஸ்டஸ்' என்னும் கிரேக்க ஞானி.

எனது மகன் எந்த அடையாளத்தைக் கொண்டு வாழ முடியும்? அவனது திராவிடவேரை அவனுக்கு எப்படி என்னால் விளங்கப்படுத்த முடியும்?

நெஞ்சின் அடி ஆழத்தில் ஏற்பட்ட இந்த வலியிலிருந்து மீளமுடியவில்லை. உடனேயே அருகிலிருந்த 'தொலைபேசி' யை நாடிச் சென்று நாட்டின் செய்திச் சேவையைக் கேட்டேன். அதில் கேட்ட ஒரு புள்ளி விபரம் மேலும் வலியைக் கூட்டியது. இது வரை 9481 போராளிகள் வீரமரணம் அடைந்துள்ளார்கள் என்பதே அது.

எமது மண்ணைக் காக்க எமது வருங்காலம் தனது அடையாளத்தை உலகுக்கு நிரூபிக்க அவர்கள் செய்த தியாக வேள்வி.

இறந்தவர்களை மாவீரர் துயிலும் இல்லமாக எவ்வளவு புனிதமாகப் பூஜித்தோம். அதைக்கூட 'புல்டோசரால்' சிதைத்த அரக்கர்களை உலகம் மன்னித்தாலும் வரலாறு மன்னிக்கப் போவதே இல்லை.

அந்த 'நீல வெள்ளைத்' தீவிலிருந்து மீண்டு வருகையில் நெஞ்சில் தைத்த அந்த முள் வலித்துக் கொண்டே இருந்தது. 'ஏதன்ஸ் வந்ததும் மீண்டும் ஒரு முறை 'அக்ரோபலிஸ்' சைப் பார்த்தேன்.

"உன்னையே நீ அறிவாய்"

ஆம்! நாங்கள் எங்களை அறியும் வரை ஈழத்தமிழர் தமது இருப்பிற்கான உத்தரவாதத்தையும் தமது சுய அடையாளங்களைத் தேடுவதற்கான உரிமை இருக்கும் வரையும் திராவிட நாகரிகத்தின் ஆணிவேர் இருக்கும் வரையும் போராட்டம் ஓய்ந்துவிடப் போவதில்லை.

புதிது புதிதாய்ப் பிறப்பர் வரலாற்றின் அத்தியாயங்களில் வேர்களாய் இருப்பர்.

★★

## அதுவரை......!

அமைதி....
நல்ல அமைதி...
கதைக்க வேண்டாம்!

கவனமாய்
மிகமிகக் கவனமாய்
நான் நடக்கலாமா?
எனக்கு ஏதும்
தேவையென்றால்....
தனியே நான் நடக்கலாமா?

இல்லை,
இன்னும் நான் காணவில்லை
என் வீடு....
என் காதலன்....
என் வயல்கள்.....
இவையெல்லாம்
நான் போகமுடியா இடத்தில்....
எங்கோ வெகு தொலைவில்

நான்
வெகுதூரம் நடந்துவிட்டேன்
சில வேளை
இன்னும்
நடக்க வேண்டி வருமோ?
கவனமாய்
மிகமிகக் கவனமாய்
தன்னந்தனியே
நான் நடக்கலாமா?
என் வேரைத் தேடி!
எனக்கான
எனது வீட்டைத் தேடி!

எனக்குத் தெரியும்
எனக்கான வீடு
எனக்கான வயல்கள்
அங்கே ஓரிடத்தில்
என் காதலன்
எனக்காக
எப்பொழுதும் காத்திருக்கிறான்
நான் இன்னும்
நீண்ட தூரம் போகவேண்டும்
என்னுடன் கதைக்க வேண்டாம்
சிலவேளை
தாமதமானாலும் ஆகலாம்

அமைதி.... அமைதி....
எனது இருப்பிடத்தை
நான் மீட்கும்
வரையில்.....
அமைதி......
நல்ல அமைதி....
யாரும் கதைக்க வேண்டாம்

டேனிஷ் மூலம்:
GUSTAF MUNCH PETERSEN
தமிழ் தழுவல்: பாப்பா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பரந்தன் சமர்



# இனவாதப் பூதத்தின் தொண்டையைக் கிழித்த சமர்!

**- வேந்தன் -**

முல்லைப் பெருஞ்சமருக்குப் பின் நடைபெற்ற பெருஞ்சமராக ஜனவரி மாதம் 9ம் திகதி நடைபெற்ற பரந்தன் சமர் வர்ணிக்கப்படுகிறது. முல்லைப் பெருஞ்சமரினைப் போல் எட்டு நாட்களுக்கு நீடிக்காமல் ஒரு நாளிலேயே முடிவுக்கு வந்த சமராகப் பரந்தன் சமர் அமைகிறது.

இராணுவத் தரப்பு ஆள் இழப்பு, மற்றும் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் பெறுமதி ஆகியவை முல்லைப் பெருஞ்சமரில் அதிகமாக இருப்பினும் பரந்தன் சமர் முல்லைப் பெருஞ்சமரினை விட முக்கியத்துவம் வாய்ந்ததாக சில இராணுவ ஆய்வாளர்கள் கணிப்பிடுகின்றனர். "முல்லைப் பெருஞ்சமருக்கு, இராணுவ வெற்றி ஈட்டித் தந்த அரசியல் பலம் மகுடம் சேர்ப்பது போல பரந்தன் சமரின் முக்கியத்துவம் சிறீலங்கா அரசின் எதிர்காலத் திட்டங்களுக்குக் கொடுக்கும் பலத்த அடியில் வெளிப்படுகிறது" என என்னிடம் கருத்துத் தெரிவித்தார் இராணுவ ஆய்வாளர் ஒருவர்.

பரந்தன் சமர் எவ்வாறு நடைபெற்றது? எவ் வகையில் இச்சமர் முக்கியத்துவம் பெறுகின்றது? பரந்தன் சமரின் பின் சிறீலங்கா தரப்பு சந்திக்கப் போகும் நெருக்கடிகள் எத்தகையானவையாக அமையும்?

பரந்தன் சமரின் களம் இரு பாரிய இராணுவத் தளங்களுக்கிடையில் அமைந்திருந்தது. படைத்தரப்பிடம் இருந்து வெளியாகும் தகவல்களின் படி. 3 பட்டாலியன்களுக்குக் குறையாமல் ஏறத்தாழ 2500 இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த ஆனையிறவுப் படைத்தளத்திற்கும் 4 பட்டாலியன்களைக் கொண்ட 3000க்கும் குறையாத இராணுவத்தினரைக் கொண்ட கிளிநொச்சி இராணுவத்திற்கும் இடையில் நீண்ட தொடர்ச்சியான இராணுவ வேலிகளுக்கு மத்தியில் பாதுகாப்பான முறையில் பரந்தன் படைத்தளம் அமைந்திருந்தது. ஏறக்குறைய 1000 இராணுவத்தினர் வரை இப்பகுதியில் நிலைகொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. உண்மையான தொகை இதனைவிடக் கூடுதலாக இருக்கும் எனக் கருத இடம் உண்டு.

எதிர்கால இராணுவ நடவடிக்கைகளுக்குப் பரந்தன் பகுதி முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இராணுவத் தரப்பு கணிப்பிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிய தரைவழிப் படையெடுப்புத் திட்டத்திற்குத் தேவையான "ஆட்டிலறித் தாக்குதல்களை" பரந்தன் பகுதியிலிருந்தே மேற்கொள்ளும் திட்டம் சிறீலங்கா இராணுவத்திடம் இருந்ததாகவும், பரந்தனில் அமைக்கப்பட்டிருந்த 'ஆட்டிலறி மையம்' மாங்குளம் வரையில் தாக்குதல் நடத்தகூடிய சக்தியினைக் கொண்டிருந்ததாகவும் அறிய வருகிறது. வட பகுதியில் சிறீலங்கா இராணுவத் தரப்பின் பாவனையில் இருந்த 36 ஆட்டிலறிகளில் கணிசமானவை பரந்தன் பகுதியினை நோக்கி நகர்த்தப்பட்டி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரு பாரிய படைத்தளங்களுக்கு இடையில் மிகுந்த பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வேலிகளை ஏறத்தாழ 16 – 20 கிலோ மீற்றர் தூரம் வரை உடைத்தெறிந்து பரந்தன் பிரதான கட்டளை மையம் தாக்கியழிக்கப்பட்டதுடன் அப் பகுதியினை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கின்றனர்.

09–01–97 அன்று அதிகாலை 3.30 மணியளவில் பரந்தன் படைத்தளத்தின் கிழக்குப் பகுதியின் ஊடாகவும் மேற்குப் பகுதியினூடாகவும் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள், உக்கிரமமான சண்டையின் பின் பரந்தன் பகுதியினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்து ஆனையிறவு முகாம் மீதும் தாக்குதலினைத் தொடுத்தனர்.

பரந்தன் பகுதியுடன் இருந்த வானொலித் தொடர்பு அறுந்த நிலையில், கிளிநொச்சிப் படைத்தளத்தில் இருந்த படையினருக்குக் கிலி பிடிக்கத் தொடங்கியிருக்கிறது. முல்லைத்தீவுப் படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்டது போல கிளிநொச்சிப் படைத்தளமும் தாக்கி அழிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சமே இக் கிலிக்குக் காரணமாம். கொழும்பில் இருந்து வானொலிக் கட்டுப்பாட்டு அறையில் நிலைமைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டிருந்த இராணுவ உயர் அதிகாரிகளையும் இவ் அச்சம் பிடித்தாட்டியிருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகாவும் இராணுவ வானொலிக் கட்டுப்பாட்டு மையத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அறிந்து கொள்ள முன்வந்ததில் இருந்தே இத் தாக்குதல் சிங்கள ஆட்சிபீடத்தை எப்படிப் பிடித்து ஆட்டியிருக்கிறது என்பதனை உணர முடியும். பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை, இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்த உட்பட உயர் அதிகாரிகளின் உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், இயந்திரக் கோளாறு காரணமாகத் தரையிறங்கியபோது பதட்டத்துடன் கட்டுப்பாட்டு அறையை நோக்கி ஓடிய சந்திரிகா, இப்போது இரண்டாவது தடவையாகவும் பரந்தன் சமரினால் ஓடியிருக்கிறார்.

இச்சமரின் போது, சிறீலங்காப் படையினரின் 11 ஆட்டிலறிகள் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளன. 122 மி.மீ. ஆட்டிலறிகள் ஒன்பதும், 130 மி.மீ. ஆட்டிலறிகள் இரண்டுமே இவ்வாறு தகர்க்கப்பட்டவையாகும். இவ் ஆட்டிலறிகளை தாமே அழித்ததாக இராணுவத் தரப்பு அறிவித்திருந்த போதும், அவை விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டமைக்கு ஆதாரங்கள் வெளியாகியுள்ளன. ஆட்டிலறிகள் தகர்க்கப்படுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட படங்களும் ஆட்டிலறிகள் தகர்க்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படங்களும் ‘ஈழநாதம்’ பத்திரிகையில் வெளியானவுடன் இராணுவத் தரப்புப் புழுகு எட்டுநாள் கூட நிற்கவில்லை.

இராணுவத்தின் ஆயுத பலத்தினைத் தாக்கி அழிக்கும் நோக்கம் இத் தாக்குதலுக்கு இருந்ததாக வெளிப்படுத்தியிருந்தனர். எனினும் சமரினை நுணுக்கமாக ஆராயும் இராணுவ நிபுணர்கள் விடுதலைப் புலிகள், சிறீலங்கா அரச படைகளின் ‘ஆட்டிலறிப் பலத்தின்’ மீது கண்வைத்துள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. நவீன யுத்தத்தில், தரை நகர்வின் போது ஆட்டிலறிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. வளைகுடா யுத்தத்திலும் இவை கணிசமான பங்காற்றியிருக்கின்றன. யாழ். குடாநாட்டினைக் கைப்பற்றும் சிறீலங்காப் படைகளின் தரைநகர்வின் போது ஆட்டிலறிகள் சிங்களத் தரப்புக்கு பெரிதும் துணை நிற்கின்றன.

சிறீலங்காவின் இன்றைய யுத்த களத்தில் ‘ஆட்டிலறிகள்’ வகிக்கும் முக்கிய பாத்திரம் காரணமாக ஒரு ஆட்டிலறி அரை பட்டாலியனியன் படையினருக்குச் சமன் என இராணுவ தொடர்பான ஆய்வுகளில் இராணுவ வல்லுனர்கள் கணிக்கின்றனர். சிறீலங்கா இராணுவத்தினரைப் பொறுத்தவரை, அவர்களது ஒரு பட்டாலியன் ஏறத்தாழ 800 படையினரைக் கொண்டதாக இருக்கிறது. இதனால், சிறீலங்காப் படையினரைப் பொறுத்தவரை ஒரு ஆட்டிலறியின் இழப்பு ஏறக்குறைய 400 படையினரின் இழப்புக்குச் சமனாகக் கணிக்கப்படலாம். இதனால் பதினொரு ஆட்டிலறிகளை படையினர் இழந்தமையினால் ஏற்பட்ட இழப்பினை இராணுவ வலு ஆய்வுக் கண்ணோட்டத்தில் பார்ப்போமாயின் 4400 படையினரின் இழப்புக்குச் சமனாகக் கருதலாம்.

சிறீலங்காப் படையினரின் ஆட்டிலறிப் பலத்தினைத் தமதாக்கிக் கொள்ளவது மட்டுமல்ல அதனைத் தாக்கி அழிப்பதும் எதிரிக்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தும் என்பதோடு யுத்த தந்திரோபாயத்தில் தாக்கிச் செயலிழக்கச் செய்யப்பட வேண்டிய முக்கிய இலக்காகவும் ஆட்டிலறித்தளம் அமைந்துள்ளதை இனங்கண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் புலிகளால் இத்தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பதாகவும் இராணுவ நிபுணர்களால் கருதப்படுகின்றது.

பரந்தன் ஆனையிறவுத் தளங்கள் மீதான தாக்குதலின் இழப்பு விபரங்களை, படைத்தரப்பு அதிகரித்துச் செல்லும் ‘கிரிக்கட்’ ஓட்ட எண்ணிக்கையினைப் போலப் படிப்படியாகத்தான் அறிவித்தது. ஒன்பதில் ஆரம்பித்து இருநூற்று முப்பத்தியிரண்டில் முடிவடைந்த இவ் எண்ணிக்கை உண்மையான இழப்பை விட மிகக் குறைவானது என்றே நம்பப் படுகிறது. இராணுவத்தரப்பால் வெளியிடப்பட்ட ஆயுத இழப்பு – 4 கோடி பெறுமதியான இழப்பாகவே அறிவிக்கப்பட்ட போதும் உண்மையான இழப்பு அதிகமாக இருக்கும் என்றும் கருதப்படுகின்றது. இராணுவத் தரப்பு, புலிகள் தரப்பு இழப்பு என்று குறிப்பிட்ட 500க்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு மாறாக 140 போராளிகள் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியிருந்தனர். இச்சமரில் விழுப்புண் அடைந்து பின்னர் வீரச்சாவினை அடைந்துகொண்ட இரு போராளிகளையும் சேர்த்து விடுதலைப் புலிகள் தரப்பு இழப்பு 142 ஆகக் கணக்கிடப்படலாம்.

பரந்தன் சமர், சிறீலங்கா தரப்பின், கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கி தரைப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு மரண அடியாகவே விழுந்துள்ளது. ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி வரையிலான சிறிய பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட இராணுவத் தொடர் வேலிப் பகுதிகளையே காப்பாற்ற முடியாமல் போனபோது வவுனியா வரையிலான நீண்ட பிரதேசத்திற்கு வேலி போட்டுத் தரைப்பாதையினை அமைக்கும் முயற்சி தற்கொலைக்கு ஒப்பானதாகப் போய்விடுமா என்ற அச்சமும் இராணுவத் தரப்பில் எழாமல் போகாது.

அதேவேளை, தரைப்பாதை அமைக்காது யாழ். குடாநாட்டில் இராணுவத்தினருக்கும் இராணுவப் பிடியில் சிக்கியுள்ள பொதுமக்களுக்கும் தேவையான உணவு வகை மற்றும் ஆயுத தளபாட விநியோகத்திற்கு கடலையும் வானையும் தங்கியிருப்பது பெரும் செலவீனத்தை ஏற்படுத்தி வருவது

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டன் அப்பாதைகள் மூலமான விநியோகங்களின் சீரான தன்மை பாதிக்கக்கூடிய அபாயங்களையும் படையினர் உணரத் தலைப்பட்டுள்ளனர். 1996ம் ஆண்டிலே இலங்கை விமானப் படையினர் 20,000 மணித்தியாலங்கள் வானிலே பறந்துள்ளனர் எனவும், அதற்கு முந்திய ஐந்து வருடங்களில் மொத்தமாக 16,000 மணித்தியாலங்களே பறந்துள்ளனர் எனவும் அண்மையில் The Sunday Times (26/01/97) பத்திரிகையில் விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க வெளிப்படுத்திய தகவல், குடாநாட்டுப் படையினர் வான் வழி விநியோகத்தில் எவ்வளவு தூரம் தங்கியுள்ளனர் என்பதனையே வெளிப்படுத்துகிறது. வான்படைத் தளபதி, நாளாந்தம் வான்படையினர் 2000 படையினரயும் 50 தொன் பொருட்களையும் யுத்த பிரதேசத்திற்கு ஏற்றிச் செல்வதாக வெளிப்படுத்தியமை குடாநாட்டுப் படையின் வான்வழித் தங்குநிலையினை மேலும் உறுதி செய்கிறது.

கடல் வழியும், வான்வழியும் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதும், அதிகரித்து வரும் விநியோகச் செலவும் தரைவழிப் பாதை ஒன்றினை எவ்வளவு விரைவாகச் செய்ய வேண்டும் எனப் படையினரைத் தூண்டுகிறது. இத்தகையதொரு சூழலில் படையினரின் ஆட்டிலறிப் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக உணரப்பட்டிருக்கிறது. வவுனியா வரையிலான பாதை அமைப்பதற்கு மேலதிகமாக 30,000 படையினர் தேவைப்படுவர் எனக் கணிப்பிட்டிருந்த படைத்தரப்பு, அத்தொகையினைத் தேடித் திரட்டுவதை பாரிய பிரச்சினையாக முன்னர் கணித்தது. இப்போது பரந்தன் சமரின் பின், அத்தகைய தொகையினைத் திரட்ட முடிந்தாலும் கூட பாதையினைத் தக்க வைத்துக்கொள்ள முடியுமா என்ற சந்தேகம் படைத்தரப்புக்கு எழாமல் இருக்கமுடியாது.

சிறீலங்கா படைத்தரப்பின் தற்போதைய யுத்த தந்திரோபாயத்தில் அடிக்கடி புலிகளை நோக்கிய தாக்குதல்களை முன்னெடுத்தல் முக்கியம் பெறுகிறது. இவ்வாறு தாக்குதல் முன்னெடுப்புக்களை செய்வதன் மூலம் புலிகள் தம்மீது தாக்குதல் செய்வதனைக் குறைக்கலாம் என்பது இதற்கு ஒரு காரணம். இராணுவ நடவடிக்கை என்னும் பெயரில் மக்கள் மத்தியில் இயல்பு வாழ்வுக்கு என உருவாக்கப்பட்டிருக்கும் உட்கட்டுமானங்களை உடைத்து நொறுக்கி விடுவதன் ஊடாக, மக்களை மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக்கி 'யுத்தக் களைப்பினை' மக்களுக்கு ஏற்படுத்துதல் மற்றைய காரணம். இத்தகைய தொடர்ச்சியான தாக்குதல் முன்னெடுப்புக்களைச் செய்துகொண்டே இருக்கும் இராணுவத்தின் தந்திரோபாயத்திற்கு 'பரந்தன் சமர்' ஒரு பதிலடியாகவே அமைந்து விடுகிறது.

உதாரணமாக, ஜனவரி மாதம் 10ம் திகதி மணலாற்றில் இராணுவத்தினர் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கை 9ம் திகதி விடுதலைப் புலிகள் நடாத்திய பரந்தன் சமர் மூலம் தடங்கலுக்கு உள்ளாகி விட்டது. மேலும் தமது நிலைகளைப் பலப்படுத்துவதில் படையினர் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தினைப் பரந்தன் சமர் வெளிப்படுத்தியமையால் 'தாக்குதல் முன்னெடுப்புக்களை' வேகமாகச் செய்யமுடியாமல் போய்விடுகிறது.

இருந்தபோதும், இக்கட்டுரையினை எழுதிக்கொண்டிருக்கும் போது படையினர் இராணுவ நடவடிக்கைக்குத் தயாராவதாகவும் அத்தகைய ஒரு இராணுவ நடவடிக்கை 200,000க்கும் மேற்பட்ட மக்களை ஏதிலிகளாக்கும் என்ற தகவல் கிடைத்தது. மக்களைக் கொடுமைப்படுத்தி சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தினைத் தமிழ் மக்கள் மீது திணிக்க முயலும் சிங்கள இனவெறிப் பூதத்தினை சாய்த்து விழுத்த பரந்தன் போன்ற இன்னும் பல சமர்களை தமிழ்த் தேசிய இனம் புரிய வேண்டி வரலாம். அப்போது சிங்களத் தேசிய இனத்தின் இழப்பு பாரியதாக இருக்கலாம்.

★

# தேசப்பற்று

நிமிர்ந்து நின்றவையெல்லாம் விழுந்து போனதும், அழிந்து போனவையெல்லாம் மீள எழுந்ததும் இரண்டாம் உலகப் போரின் பின் உலகம் கண்ட மாற்றங்கள். இந்த வகையில் நினைத்துப் பார்த்திராத அழிவையெல்லாம் கண்ட ஜப்பான் இன்று, உலகின் முன்னணிப் பொருளாதார வல்லரசாக இருப்பது நாம் கண்கூடு காணும் காட்சி. இதற்கு ஜப்பானியர்களின் தேசப்பற்றும், அயராத உழைப்புமே காரணம். ஜப்பானியரின் தேசப்பற்றை விளக்கும் ஒரு உண்மைச் சம்பவம் இது:

ஒரு விடிகாலை நேரம் சுறுசுறுப்பு மிகுந்த ஜப்பானிய நகரம் ஒன்றின் உணவு விடுதியினுள் முரட்டுத்தனமான தோற்றமுடைய நான்கைந்து ஜப்பானியர் நுழைகின்றனர். அங்கிருந்த மேசைகளில் அட்டகாசமாக அமர்ந்தபடி, உணவு கொண்டு வருமாறு சிப்பந்திகளிடம் கூறி விட்டு அங்கிருந்த ஏனையோருடன் கலாட்டா செய்கின்றனர். தொடர்ந்து வாய்த்தர்க்கங்கள் கைகலப்பாக மாறியது. மேசை, நாற்காலிகள் தூக்கி வீசப்பட்டன. விளக்குகள் அலங்காரப் பொருட்கள் நொருக்கப்பட்டன. நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத விடுதி உரிமையாளர் தொலைபேசி மூலம் பொலிசாரை அழைத்தார். பொலிசார் வந்தும் கூட முரடர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நிலைமை மோசமடைந்ததைக் கண்டு, விடுதி உரிமையாளர் செய்வதறியாது திகைத்தார். திடீரென அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனடியாகத் தனது மேசையிலிருந்த தேசிய கீதம் அடங்கிய ஒலி நாடாவை எடுத்து ஒலிபெருக்கியின் மூலம் ஒலிபரப்பினார். அவ்வளவுதான். தேசிய கீதத்தைக் கேட்ட மாத்திரத்தில் அந்த முரடர்கள் கையிலுள்ளவற்றையெல்லாம் எறிந்து விட்டு அப்படியே சிலையென நின்று விட்டனர். வேறு வழியின்றிப் பொலிசார் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முரடர்களைக் கைது செய்தனர். தேசிய கீதத்தைக் கேட்ட மாத்திரத்தில் தம்மை மறந்து அடிதடியில் ஈடுபட்ட முரடர்களே அதற்கு மரியாதை செலுத்துகிறார்கள் என்றால் ஜப்பானியரின் தேசப் பற்றை என்னவென்பது.

–ந.சித்திரன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# அரசு கொடுக்கும் அதிக விலை

'விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டினை, சிறீலங்கா இராணுவம் கைப்பற்றிய போதிலும் அதற்காக அது கொடுத்த விலை இன்று அளவிட முடியாததாக இருக்கின்றது. இது எமது கூற்றுக்களே அன்றி விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் கூற்றுக்கள் இல்லை' 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையில் ஜோன் பேர்ஸ் என்ற படைத்துறை ஆய்வாளர் கூறிய கருத்தாகும். இவரின் இக் கணிப்பீடானது, யாழ். குடாநாட்டினை இராணுவம் கைப்பற்றிய பின்னர் சிறீலங்கா ஆயுதப் படையினருக்கு விடுதலைப் புலிகள், உயிர், உடமை மற்றும் பெருஞ் செலவீடு என்பதன் அடிப்படையில், ஏற்படுத்திய தேசத்தின் அடிப்படையிலானதாகும். இதனை அவர்களது கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்கள். யாழ்ப்பாண யுத்தத்திற்கு பின் இராணுவ படைத்தளங்கள் மீதான விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால், இதுவரையில் ஆகக்குறைந்தது 5000 துருப்புக்கள் கொல்லப்பட்டனர். அத்தோடு மிகப் பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். இதேவேளை விடுதலைப் புலிகளுடனான யுத்தத்திற்கு இராணுவ செலவீட்டை இரண்டு மடங்காக ஜனாதிபதி குமாரதுங்கா அதிகரித்துள்ளார் என படைத்துறை ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு நிலைமை மோசமடைவதற்கு, யாழ். குடாநாட்டின் மீதான இராணுவத்தின் படையெடுப்பே காரணமாகும். யாழ். குடாநாடு மீதான படையெடுப்பு இராணுவத்திற்கு குடாநாட்டினுள்ளும், வெளியிலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால் யாழ். குடாநாட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போது அரசாங்கம் அவ்வாறு சிந்தித்ததாகத் தெரியவில்லை. யாழ். குடாநாடு நாட்டில் ஏற்படும் தோல்வியுடன், புலிகளின் முதுகெலும்பு முறிக்கப்படுமென்றே சிறீலங்கா அரசு கருதியது. ஆனால் அவ்வாறு அரசு நினைத்தது போல் எதுவும் இடம்பெறவில்லை. புலிகள் தமது பலத்தை இழக்கவில்லை என்பது மட்டுமல்ல,





யாழ். குடாநாட்டை இராணுவம் கைபற்றியது தவறான ஒரு தந்திரோபாய அடிப்படையில் ஏற்பட்டது என்பதைப் புரியவைக்கக்கூடிய பலமான தாக்குதல்களை வடக்கிலும் கிழக்கிலும் நடாத்தியுள்ளனர். ஆனால், சந்திரிகா அரசு அதனைப் புரிந்து கொண்டதாக தெரியவில்லை. அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கையை வன்னிப் பெருநிலப்பரப்பில் ஆரம்பித்துள்ளது. வன்னியில் பிரவேசிப்பது, தற்கொலைக்கு ஒப்பானது என எச்சரிக்கப்பட்ட போதிலும், அரசு பெரும் படையெடுப்புக்களை நடாத்தத் தொடங்கியுள்ளது. இப் படை நடவடிக்கையின் இலக்கு குறித்து அரசு தரப்பு வெளிப்படையாகப் பேசாது விட்டாலும், கட்டம் கட்டமாக தரை வழிப்பாதை ஒன்றைத் திறப்பதே நோக்கம் என அரசு தரப்பினரின் தகவல்களின் அடிப்படையில் ஊகிக்க முடிகிறது. இதன் நோக்கமானது எதுவாக இருப்பினும், சிறீலங்கா அரசு யாழ் குடாநாட்டைக் கைப்பற்றியதற்காக கொடுத்து வரும் விலையை விட அதிக விலை கொடுக்க வேண்டி வரும் என்பதை மட்டும் துணிந்து கூற முடியும். இதற்கு எடுத்துக்காட்டாக 1993ம் ஆண்டு மண்கிண்டி மலை இராணுவ முகாம் தகர்ப்பில் இருந்து பூநகரி படைத்தளம் தகர்ப்பு, சத்ஜெய 2.3 நடவடிக்கைக்கு எதிரான தாக்குதல், பரந்தன், ஆனையிறவு படைத்தளங்கள் மீதான தாக்குதல் என வன்னிப் பிரதேசத்தில் இராணுவம் சந்தித்த தோல்விகளைச் சிறப்பாகக் காட்ட முடியும். இவற்றைத் தவிர வேறு பல உதாரணங்களும் உண்டு. இதில் இந்திய இராணுவத்தின் போரே வன்னிக்காடுகளில் இருந்து தீர்மானிக்கப்பட்டதைக் குறிப்பிட முடியும். இத்தனை முன் உதாரணங்களின் பின்பும் சிறீலங்கா இராணுவத் தரப்பு வன்னி நிலப்பரப்பு மீது படை நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. இதற்கு அது கொடுக்கப்போகும் விலையானது தற்போது அதனால் உணரப்படாததாக சிலவேளை இருக்கலாம். ஆனால் இங்குதான் சிறீலங்கா இராணுவத்தின் தோல்வி உறுதி செய்யப்படும் என நம்பலாம். ★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நவீனப்படுத்தப்படும் யுத்தம்



தூர வீசும் எறிகணைச் செலுத்திகளை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் வவுனியா இராணுவ நிலைகளைத் தாக்கியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இத்தாக்குதலானது துல்லியமாக இராணுவ நிலைகளையே தாக்கின என்பதை, மக்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பதில் இருந்து புரிந்து கொள்ள முடியும். எறிகணைத் தாக்குதல் இடம்பெற்ற இடங்களைப் பார்க்கச் சென்ற 'திவயின' பத்திரிகை ஆசிரியர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். வவுனியா மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலானது சிறீலங்கா இராணுவ தலைமைக்கு வன்னிப் பெருநிலப்பரப்பில் கடைப்பிடிக்கும் இராணுவ தந்திரோபாயத்திற்குப் பலமான ஒரு அடி என்பது மட்டுமல்ல இத் தந்திரோபாயம் தொடருமானால் ஆயுதப்படையினருக்கு ஏற்படப் போகும் ஆபத்தை எச்சரிக்கும் ஒன்று என்றும் சொல்லலாம். இந்த நிலையில் வன்னிப் பிரதேசத்தில் இராணுவ தந்திரோபாயம் உடனடியாக மாற்றப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

இராணுவத் தலைமை இதனைப் பொருட்படுத்தாது விட்டால் ஆனையிறவு, பரந்தன் பகுதிகளில் கடந்த மாதத்தில் ஏற்பட்ட இழப்புக்களைப் போன்றும், வவுனியாவில் இடம்பெற்ற சம்பவங்கள் போன்றதுமான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கமுடியாது போகும். ஆனால் புலிகளின் இத்தாக்குதலுக்கு மாற்றுதலான தந்திரோபாயத்தை இராணுவத்தால் கடைப்பிடிக்க முடியுமா? என்பதே கேள்வியாகும். ஏனெனில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் யுக்திகளை வகுத்தல் என்பது அவ்வளவு இலகுவான ஒன்றல்ல. இதைக் கடந்தகால வரலாறே உணர்த்தக்கூடியதாகும். 1983ம் ஆண்டில் விடுதலைப் போராட்டம் கூர்மைபெற்ற காலத்தில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறீலங்கா இராணுவம் காலத்திற்கு காலம் பல போர் யுக்திகளைப் பயன்படுத்தி வந்துள்ளது. இதற்கு அன்னிய நாடுகளிடம் ஆலோசனைகளும் பெறப்பட்டிருந்தன.

ஆனால் இவை வெற்றிபெறவில்லை. மாறாக புலிகளினால் காலத்துக்குக் காலம் பயன்படுத்தப்பட்ட போர் முறை ஆயுதப்படையினரை சிதறடிப்பவையாகவே வந்துள்ளது.

இந்த நிலையில் புதிய போர் உத்தி என்பது அத்துணை இலகுவானதாகவும் சாத்தியமானதாகவும் சிறீலங்கா இராணுவத் தரப்பிற்கு இருந்துவிடப் போவதில்லை. ஆகையினால் கடந்த காலத்தில் போர் யுக்திகள் நெருக்கடிக்கு உள்ளான போது நவீன யுத்த தளபாடங்களில் நம்பிக்கை வைப்பது போன்று இம்முறையும் ஆயுதப்படையினரும் அரசாங்கமும் நம்பிக்கை வைக்கக்கூடும். ஆனால் நவீனப் போர் தளபாடங்களை ஆயுதப் படையினர் அறிமுகம் செய்வதாவது, தனியாக ஆயுதப்படையினரை நவீனமயப்படுத்தப்படுவதாக மட்டும் இருக்கமாட்டாது. விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சேர்த்து நவீனப்படுத்துவதாக இருக்கும் என்பதே யதார்த்தமாக உள்ளது. விளக்கமாகக் கூறுவதானால் இன்று விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் நவீனப் போர்த் தளபாடங்களில் அனேகமானவை சிறீலங்கா ஆயுதப் படையினரிடமிருந்து பெறப்பட்டவையே.

அதாவது விடுதலைப் புலிகள் இன்று போர்முறையில் கனரக பீரங்கிகளையும் 'வோட்டர் ஜெட்' போன்ற படகுகளையும் வேறு நவீனப் போர்த் தளபாடங்கள் சிலவற்றையும் பயன்படுத்துகிறார்கள் எனின், அதன் உபயகாரர்களாக சிறீலங்கா ஆயுதப்படையினரே இருந்துள்ளனர். இந்த நிலையில் சிறீலங்கா இராணுவத்தை நவீனப்படுத்தல் என்பது ஒரு வகையில் புலிகளை நவீனப்படுத்துவதுமாகவே இருக்கும். இந்த வகையில் புதிய போர் யுக்திகளும் ஆயுதப்படையை நவீனமயமாக்குதலும் சிறீலங்கா ஆயுதப் படையினர் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள உதவப் போவதில்லை. மாறாக புலிகளை இவை பலப்படுத்துபவையாகவுமே இருக்க வாய்ப்புண்டு. ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்த புலிகளின் ஆயுதப்போராட்டம் இன்று நீண்ட தூர பீரங்கி வரை சன்னதத்தைக் கொண்டமைக்கு இதுவே காரணமாகும். இவ்வாறு இருப்பினும் சிறீலங்கா அரசோ ஆயுதப்படையோ போரில் வெற்றிபெற வேண்டுமானால் நவீன ஆயுதங்கள் தேவையென வலியுறுத்தாமல் விடப்போவதில்லை. ஆகையினால் போர் மேலும் மேலும் தீவிரம் அடைந்து பெரும் அழிவுகளுக்கு வழி வகுக்கக் கூடியதாக மாறவே இடமுண்டு. ஆனால், ஒன்று நிச்சயம், எந்த வகையான நவீன போர்த் தளபாடங்களும் இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை.

★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# உள்ளூராட்சித் தேர்தல் முயற்சி ஒரு அரசியற் சூழ்ச்சிப் பொறி

வடமாகாணத்தில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் சில பகுதிகளில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துவதற்கு சந்திரிகா அரசாங்கம் சில ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இராணுவ ஆதிக்கப் பின்பலத்தோடு ஆயுத முனையில் அரச நிர்வாக அலகுகளை யாழ்ப்பாணத் தமிழர்கள் மீது திணித்துவிடும் ஒரு நாசகார முயற்சியாகவே நாம் இதனைக் கருதுகிறோம். இம் முயற்சியை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இதனால் எழக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு சிறீலங்கா அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் எச்சரிக்கை விடுக்கின்றோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிங்களப் படைகள் ஆக்கிரமித்து நிற்கும் பகுதிகளில் மிகவும் இறுக்கமான இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது. இந்த அடக்குமுறை ஆட்சியின் கீழ் தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளை இழந்து அடிமைகளாக வாழ்ந்து வருகிறார்கள். இராணுவக் கொடுமைகளால் பயந்து பதட்டத்துடன் வாழ்கிறார்கள். இந்த இராணுவ அடக்குமுறை ஆட்சியின் கீழ், மிகவும் மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. கைதாகிக் காணாமற் போவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இனக் கொலை வடிவம் எடுத்துள்ள இந்த அரச பயங்கரவாத அட்டூழியங்கள் இன்று உலகெங்கும் அம்பலமாகி வருகின்றன. இதனால் சந்திரிகா அரசின் இராணுவ அணுகுமுறை கடும் விமர்சனத்துக்கு இலக்காகி உள்ளது.

வடக்கில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பியக்கம் காரணமாக சிங்களப் படைகள் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதிகளில் போர்ச் சூழ்நிலை தொடர்கின்றது. அமைதியின்மையும் பதட்ட நிலையும் நீடித்து வருகின்றது.

இப்படியான யதார்த்த நிலைமைகளை சர்வதேச சமூகம் நன்கறிந்துள்ளது. இதனால் அதிருப்தி கொண்ட மேற்குலகம் வடக்குக்கான அபிவிருத்தி நிதியை நிறுத்தியதுடன் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தி அமைதி வழியில் அரசியல் தீர்வு காணுமாறு வற்புறுத்தியும் வருகிறது. இது சந்திரிகா அரசுக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கின்றது.

வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் சந்திரிகா அரசாங்கத்துக்கு அரசியல் ரீதியாக எவ்வித பயனையும் தேடிக்கொடுக்கவில்லை. மாறாக இராணுவ அணுகுமுறை அரசியல் தோல்வியையே பெற்றுக் கொடுத்திருக்கின்றது. அத்துடன் தமிழ் மக்களின் வெறுப்பையும் பகைமையையும் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக சர்வதேச சமூகத்தின் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் தேடிக் கொடுத்திருக்கிறது.

இந்தச் சங்கடமான நிலைமையைச் சமாளிக்கும் ஒரு சதித்திட்டமாகவே ஆக்கிரமித்த பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த சந்திரிகா அரசு முயற்சிக்கின்றது. இதன்மூலம் வடக்கில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் நிகழும் இராணுவ பயங்கரவாத ஆட்சியை திரைமூடி மறைத்துவிடலாமென எண்ணுகிறது. அத்தோடு தமிழர் பகுதிகளில் 'சிவில் நிர்வாகம்' என்ற ஏமாற்று வித்தை காட்டி உலகத்தின் கண்களில் மண் தூவி விடவும் நினைக்கின்றது.

ஆயுதப் பயமுறுத்தலின் கீழ் பொய்யான, மோசடியான தேர்தல்களை அரங்கேற்றுவதும் பின்னர் அவற்றை நேர்மையான ஜனநாயக முயற்சிகளாக வர்ணித்து உலகை ஏமாற்றுவதும் தமிழீழ மக்கள் எதிர்கொள்ளும் புதிதான அனுபவங்கள் அல்ல. இதே மரபில் இதே பாணியில் இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்த சந்திரிகா அரசு முயற்சிக்கலாம். இந்தச் சூத்திரதார அரசியற் பொறியில் சிக்கிவிடாது மிகவும் விழிப்புடன் இருக்குமாறு தமிழீழ மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*அரசியற் துறை*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலங்கள் எங்களின் கைகளில் உண்டு வேர்வை சிந்தவா நீ



நல்ல மண்வளம் உண்டு நீர்வளம் உண்டு
பொன் விளையும் பூமி
ஆழ ஆழியும் உண்டு ஆள்பலம் உண்டு
வேர்வை சிந்தவா நீ
செந்நெல் விளைகின்ற பூமியும் உண்டு
இங்கும் அங்கும் என வாவிகள் உண்டு
ஏர்களும் உண்டு காளைகள் உண்டு
வேர்வை சிந்தவா நீ

பெரும் மீன்வளம் உண்டு தோணிகள் உண்டு
வலைகொண்டுவா நீ
தினம் பட்டினி என்கின்ற துன்பங்கள் வேண்டாம்
பஞ்சம் தீர்க்கவா நீ
இந்த வானமும் பூமியும் தான்
எங்கள் வாழ்க்கையின் சொர்க்கங்களே
இந்தக் காலங்கள் எங்களின் கைகளில் உண்டு
வேர்வை சிந்தவா நீ - நன்றாய் வேர்வை சிந்தவா நீ



இன்று செல்லடி கேட்கும் குண்டுகள் வீழும்
யுத்தகள பூமி
அதை காதினில் கேட்டு தாளங்கள் போட்டு
போர்ப்பரணி பாடி
ஈழ தேசம் மீட்கும் போரில்
எங்கள் செல்வங்கள் சேந்தாச்சு
இந்தக் காலங்கள் எங்களின் கைகளில் உண்டு
வேர்வை சிந்தவா நீ - நன்றாய் வேர்வை சிந்தவா நீ

'ஈழமுரசு' ஆசிரியர் கப்டன் கஜனால் எழுதப்பட்ட கவிதை
(இக்கவிதை 'தொலைதூர விடுதலைச் சுவடுகள்'
இசைத்தட்டில் பாடலாகவும் பதிவாகியுள்ளது)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தளபதி கேணல் கிட்டுவினதும் அவருடன் வீரச்சாவடைந்த ஒன்பது போராளிகளினதும் 4ம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்









டென்மார்க்



பிரான்ஸ்

ஜேர்மனியில் தளபதி கேணல் கிட்டு நினைவாக, நான்கு பிரிவுகளாக நடைபெற்ற ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர்களது ஓவியங்கள்.

அதிமேற்பிரிவு: சதீஷ்குமார் துரைசாமி



கீழ்ப்பிரிவு: மௌரிஷ் வரதராஜா






நடுப்பிரிவு: மகனிஷ் வரதராஜா



மேற்பிரிவு: கார்த்திகா ஞானவேல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கிலிகொண்டு எதிராளி படைவிட்டு ஓட
புலிவீரர் நிழல் மட்டும் தொடராகச் செல்லும்
கெரில்லாப் போர் புதியதொரு பரிமாணம் காணும்
உலகத்தின் திசையெங்கும் தமிழீழம் ஈர்க்கும்

அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் Tel: 0181 - 646 2885

www.tamileelamarchive.com